ஃபோன் எல்லோருடைய கைகளிலும்... எப்போதும்... நீங்காது இடம் பிடித்திருப்பதன் காரணம் என்ன...?

கற்காலம் – உலோகக் காலம் – விஞ்ஞானக் காலம்

மனித இன ஞான வளர்ச்சி தன்மையின் காலம் கற்காலமாக இருந்து உலோக காலமாக வளர்ந்து இன்று அது விஞ்ஞான யுகமாக பரிணமித்துள்ளது. ஆனாலும் இதைக் காட்டிலும் இன்று விஞ்ஞான அறிவாக மெய்ஞான உணர்வுகளே மனித சமுதாயத்தில் வளர்ந்துக் கொண்டுள்ளன.

புவியின் மண்ணில் கலந்துள்ள உலோகங்களைப் பிரித்தெடுத்து அதனைப் பயன்படுத்தும் நிலையை தெரிந்து கொண்ட மனிதன் மண்பாண்டங்களைக் கைவிட்டு உலோகப் பாண்டங்களுக்கு மாறினான்.

மேலும் மனிதன் தன்னைப் பாதுகாக்க ஒரு சக்தி தேவை என்ற நிலைகளில் மனித உணர்வின் உண்மை நிலைகளை அறிந்து கொள்ளத் தொடங்கினான்.

ஒரு மனிதன் இறந்து விட்டால் அவனின் உயிரான்மா... தான் மனிதனாக வாழ்ந்த பொழுது எந்த நோக்கில் யார் மீது பற்று கொண்டிருந்தானோ அவரின் உடலினுள் சென்று தன்னுடைய ஆசையின் நிலைகளை அவருடைய உடலில் எப்படிச் செயல்படுத்துகின்றது என்கிற நிலைகளை மனிதன் அறிந்து கொள்கின்றான்.

இவ்வாறு மனிதன் தான் அறிந்து கொண்ட நிலைகள் கொண்டு தனக்குப் பாதுகாப்பான நிலைகளை அமைத்துப் பிற மனித உடல்களில் மந்திர ஒலிகளைப் பாய்ச்சி... தான் இந்த உடலை விட்டுப் பிரிந்த பின் எந்த உடலில் மந்திர ஒலிகளைப் பாய்ச்சினாரோ அதை மீண்டும் எழுப்பப்படும் போது உடலை விட்டுப் பிரிந்து சென்ற ஆன்மாவைத் தனக்குள் கைவல்யப்படுத்திக் கொள்கின்றார்கள்.

இதனின் நிலைகள் கொண்டு தான் பிற மனிதர்களைத் தனக்குள் எப்படிக் கைவல்யப்படுத்துவது...? என்ற நிலைகளும் பல மனிதர்களின் உணர்வுகளைத் தனக்குள் வளர்த்துக் கொண்டால் அதனின் வலிமை மிக்க சக்தி கொண்டு மற்றவர்களை எப்படி அடக்கி ஆட்சி புரியலாம்...? என்ற நிலைகளும் தான் மனிதரிடத்தில் வளர்ந்தன.

இதே ஆசையின் நிலைகள் கொண்டு தான் காடுகளில் வாழும் மக்கள் பிற உயிரினங்களைப் பலி கொடுப்பதும் தான் வாழும் இடத்தை விட்டுப் பிறிதோரு இடத்தில் வாழும் ஒருவனைப் பிடித்துக் கொண்டு வந்து கட்டி வைத்துக் குறித்த

காலம் வரும் வரை கட்டி வைத்திருந்து அந்த நபரின் உடலில் பல விஷத்தன்மை கொண்ட உணர்வுகளைப் பாய்ச்சி அவனின் எண்ணங்களில் ஊடுருவச் செய்யும் பொழுது அவன் வேதனையின் தன்மை தாங்காது மடிவான்.

பின்... அதிலிருந்த ஒலிகளை மந்திரத்தால் கவர்ந்து அடக்கி வைத்துப் பிறர் மேல் பாய்ச்சுவதும் பிற நாடுகளின் மீது பாய்ச்சுவதும் மிருக இனங்களின் மீது பாய்ச்சுவதும் போன்ற நிலைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டான்.

இதனின் நிலைகளை இன்றும் மலைப்பகுதிகளில் காணலாம். புலையர் எனும் இனத்தவர் இன்றும் இதனைச் செய்து வருகின்றனர்.

ஆனால் அகத்தியர் ஆரம்பத்தில் கண்டுணர்ந்து வெளிப்படுத்திய உணர்வுகள் வேறு. இதுவே காலம் மாற மாற அவர் உணர்த்திய பேருண்மைகள் மறைக்கப்பட்டன.

இன்று மலைப்பகுதியில் உள்ளோர் மந்திரச் செடிகளை எடுத்து அதற்குரிய மந்திரங்களை ஓதி இவன் உடலில் விளைந்ததைத் தாவர இனத்துடன் கலந்து மற்ற நிலைகளையும் அதனுடன் கலந்து உருவாக்கி இதை மற்ற ஆடு, மாடு போன்ற உயிரினங்களுக்குக் கொடுத்து அதனின் உணர்வலைகளை மாற்றித் தனக்கு உகந்ததாக இதே ஒலிகளை எழுப்பி தனக்குள் கைவல்யப் படுத்துகின்றனர்.

இந்த உணர்வைத் தனக்குள் கலந்து கொண்ட பின் இந்த உணர்வின் அலைகளை இந்த உடலுக்குள் ஆடு, மாடு, மான் போன்ற இவற்றின் உணர்வுகளைத் தனக்குள் பெற்ற பின் இந்த உணர்வுக்கு ஏற்ற ரூபங்களாக மான் போன்று, மாடு போன்று, நரி, நாயைப் போன்று மாறுவதுமான நிலைகள் மலைப்பகுதியில் வசிக்கும் மக்களிடம் உண்டு.

அதுவும் காலத்தால் அழிந்துவிட்டது. ஒரு சில இடங்களில் மட்டும் இது நடந்து கொண்டுள்ளது.

1.யாம் இருபது வருடம் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்யப்படும் பொழுது
2.அன்று ஞானிகள் கண்டறிந்து வெளிப்படுத்திய உணர்வின் தன்மைகள் எவ்வாறு உருமாறின...? என்பதையும்
3.அவைகள் இன்று மனிதனுக்கு பயனற்றவைகளாக எவ்வாறு ஆயின...? என்பதையும் குருநாதர் ?மிகவும் வருத்தத்துடன்" எம்மிடம் கூறினார்.

மனித இன ஞானத்தின் வளர்ச்சியாக உலோகக் காலம் இருந்தது. இந்த உலோகக் காலத்தில்தான் கந்தகம் மற்றும் வெடி பொருட்களை மனிதர் கண்டறிந்தனர்.

கந்தகம் மற்றும் மனோசீலை போன்ற பொருட்களுடன் வெடியுப்புக்களைக் கலந்து வெடிக்கச் செய்து அதனின் செயல் தன்மையைக் கண்டறிந்தனர்.

ஆனால் அன்று வைத்திய ரீதியில் கந்தகம் மற்றும் பிற பொருட்களை ஒன்றாகச் சேர்த்து மனோசீலையாக மாற்றி நோயுள்ள உடல்களில் ஊடுருவச் செய்து நோயினை போக்கும் நிலைக்கு அதனை உருவாக்கினார்கள்.

அதுவும் ஒரு காலத்தில் மறைந்து விட்டது.
1.இவ்வாறு அகத்தியர் கண்டுணர்ந்த உணர்வுகளை மனிதன் தனது சுயநலங்களுக்காகப் பயன்படுத்தி
2.நாளடைவில் கடும் தீமைகளை விளைவிக்கும் நிலையாக உருவாக்கி விட்டனர்.

மகரிஷியாகும் மகத்துவம்

உதாரணமாக குளவி ஒரு புழுவைத் தூக்கி வந்து தன் இனத்தை விருத்தி செய்ய மண்ணாலான கூட்டினை அமைத்து அதனுள் தான் எடுத்து வந்த புழுவினை வைத்து அப்புழுவிற்குள் தன் நஞ்சினைப் பாய்ச்சுகின்றது.

தன் உடலில் உள்ள நஞ்சினை அப்புழுவினிடத்தில் பாய்ச்சியபின் புழுவினை உள்ளே வைத்துக் கூட்டினை மூடி விடுகின்றது.

புழுவினிடத்தில் நஞ்சு பாய்ந்ததால் புழுவின் உடலை உருவாக்கி அணுக்கள் உள்ளடங்கி புழுவின் தோல் சருகு போன்று ஆகிவிடுகின்றது.

புழுவைத் தூக்கி வரும் பொழுது எந்த சப்தத்தை வெளிப்படுத்தியதோ எந்தச் சப்தத்தை வெளிப்படுத்தியதோ அதே சப்த்தைச் சில நாட்களுக்குப் புழுவினிடத்தில் நினைவாற்றலைக் கூட்டுவதற்காக அந்தல் கூட்டுக்கருகே வந்து ஒலித்துக் கொண்டே இருக்கும்.

அப்பொழுது இதே நஞ்சால் கூடு அமைத்து அதிலே இந்த உயிரணுவின் அந்தச் சத்தை அது ஒலி அலைகளாகப் பரப்பப்படும் பொழுது இந்தப் புழுவுக்குள் இருக்கும் இந்த ஜீவ அணுக்கள் இந்தக் குளவியின் நஞ்சான நிலைகள் பட்டபின் குளவி போன்று மாற்றம் பெறுகின்றது.

சிறிது காலத்தில் இந்த உணர்வின் சக்தி இந்த புழுவின் தசைகளை உணவாக உட்கொண்டு அதனின் மலத்தை உமிழ்த்தப்படும் பொழுது குளவியின் ரூபத்தை அடைகின்றது.

குளவியின் ரூபம் வந்தபின் குளவிக்கு உருவானது போன்று அந்த உடலின் தன்மை நஞ்சு உருவாகும்.

அந்த உமிழ் நீரைக் கொட்டி அந்தக் கூட்டைப் பிளந்து அது தன் உணர்வால் அதே குளவி எதைச் செய்ததோ அதே உணர்வின் தன்மைக்கு வருகின்றது.

அதற்கு யாரும் சொல்லித் தருவதில்லை.

கூட்டினில் உருவான குளவியானது தன்னிடம் சுரக்கும் உமிழ் நீரைக் கொட்டி கூட்டினைப் பிளந்து வெளி வருகின்றது.

தாய்க் குளவியோ உமிழ் நீரைப் பயன்படுத்திக் கூட்டினை அமைத்தது. கூட்டினுள் உருவான குளவியோ அதே உமிழ் நீரைப் பயன்படுத்தி கூட்டினைக் கரைத்து வெளியே வருகின்றது.

இது போன்றுதான்
1.மகரிஷிகள் உணர்வுகளை ஒவ்வொரு நொடிப் பொழுதும் நம் உடல் உறுப்புகளை உருவாக்கி அணுக்களுக்கு உணவாகக் கொடுக்கப்படும் பொழுது
2.இந்த உடலான கூட்டில் இருந்து ஒளியின் சுடராக... அழியா ஒளிச் சரீரமாக
3.புழு குளவியாக மாறியது போன்று நாமும் அந்த மகரிஷிகளாக அருள் ஞானிகளாக அழியாத நிலை பெற முடியும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்
பல கோடிச் சரீரங்களில் வளர்ச்சி பெற்று... மற்றொன்றுக்கு இரையாகி வேதனைப்பட்டு... நரகலோகத்தை அனுபவித்துத் தான் நாம் மனிதனாக வளர்ந்து வந்திருக்கின்றோம்.
1.சொர்க்கபூமியாக மனித உடலை வளர்த்து... சொர்க்கலோகமாக உருவாக்கி

உள்ளது உயிர்
2.சொர்க்கவாசலாக அமைந்திருக்கும் உயிரின் துணை கொண்டு தான் நாம் “என்றும் சொர்க்கலோகமாக வாழ முடியும்...!”

துருவ நட்சத்திரமும் சப்தரிஷி மண்டலங்களும் சொர்க்கலோகத்தை அடைந்தது. ஆகவே இந்தச் சொர்க்க பூமியை நாம் சொர்க்கலோகமாக மாற்ற வேண்டும்.

நம் உடலுக்குள் இருக்கும் அணுக்களை மாற்றி அமைத்தலே... (அடுத்து) “பிறவி இல்லாத நிலை அடைதல்” என்பது. நமது சாஸ்திரங்களும் வேதங்களும் இதைத் தான் தெளிவாகக் கூறுகின்றது.
1.இப்பொழுது யாம் (ஞானகுரு) சொன்னால் உங்களுக்கு இது விளையாட்டாகத் தெரியலாம்.
2.ஆனால் எமது உபதேசங்களைக் கூர்ந்து கவனித்தால் உங்களுக்குள் ஆழமாகப் பதிவாகிவிடும்.
3.அது உங்களை ஞானிகளாக உருவாக்கச் செய்யும் ஆற்றல் கொண்டது.

தாய் கருவிலே இருக்கப்படும் பொழுது “நஞ்சை முறித்திடும் உணர்வுகள்” அகஸ்தியன் உடலிலே விளைந்தது.
1.அவன் பார்வையிலே படும் ஒவ்வொன்றும்... அது எத்தகைய நஞ்சாக இருந்தாலும் ஒடுங்கி
2.நஞ்சை முறித்திடும் அணுக்களாக அவனுக்குள் விளைகின்றது.

சூரியனை அவன் உற்றுப் பார்த்தாலும்... அதில் நஞ்சின் கடுமை இருப்பினும் எதிர்மறையான நிலைகள் அது உமிழ்த்தும் அல்ட்ரா வயலட் என்று விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட
1.அந்தக் கடும் நஞ்சினை இவன் நுகர்ந்தாலும் அந்த விஷத்தின் தன்மை இவன் உடல் உறுப்புக்களைப் பாதிப்பதில்லை.
2.ஆனால் “உணர்வின் ஒளிச் சுடர்கள்” கதிரியக்கப் பொறியாக நட்சத்திரங்கள் உமிழ்த்துவது போன்று இவனில் விளைகின்றது.

இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கங்களை கண் கொண்டு அவன் உற்றுப் பார்க்கப்படும் பொழுது... இவன் உடலுக்குள் இருக்கும் உணர்வுகள்
1.அந்த விஷத்தை ஒடுக்கி... விஷத்தை ஏற்று... தனக்குள் அதையே உணவாக எடுத்துக் கொள்ளும் நிலையும்
2.அதன் அறிவாக இந்த உணர்வின் தன்மை அவனுக்குள் ஒளியாக மாற்றிடும்

திறனும் பெறுகின்றான் அகஸ்தியன்.
3.அவனுக்குள் ஒளியான அணுக்களாக விளைந்து கொண்டே வருகிறது.

பிரபஞ்சத்தின் சக்தி துருவத்தின் வழியில் பூமிக்குள் வந்து தாவரங்களாக எப்படி உருவாகின்றது...? என்று... அந்தத் துருவத்தைக் கூர்மையாக உற்று நோக்கி அதனின் உண்மையின் உணர்வை அறிந்து கொண்டவன் அகஸ்தியன்.

இப்படி அறிந்து கொண்ட பின்... அதன் வழி வரும் நஞ்சினை முறித்திடும் உணர்வும்... தனக்குள் ஒளிக்கதிர்களாக மாற்றிடும் தன்மையும் அவனுக்குள் வருகின்றது.

அவனின்று விளைந்த உணர்வுகள் வெளிப்பட்டதைச் சூரியனுடைய காந்தப் புலனறிவு கவர்ந்து அலைகளாகப் பரப்பி வைத்துள்ளது.
1.அதனை யாம் நுகர்ந்து உங்களுக்கு இப்போது வெளிப்படுத்த முடிகின்றது.
2.மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் எமக்குக் காட்டிய உணர்வுகள் (அவர் கற்றுணர்ந்த உணர்வுகள்) அவர் அதை வெளியிடும் பொழுது
3.அவரின் துணை கொண்டு அவர் ஊட்டிய உணர்வு கொண்டு அதை நுகர்ந்து... அதனின் உணர்வின் செயலாக்கங்களை அறிய முடிகின்றது.
4.அதுவே எனக்குள் அணுக்களாக விளைகின்றது.

நீங்கள் அதை இப்போது நுகரப்படும் பொழுது... நுகர்ந்த உணர்வுகளை உங்கள் உயிர் அணுவாக மாற்றும். அந்த உணர்வின் சக்தியை “உணவாக” ஏற்றுக் கொள்ளும் நிலை வரும் பொழுது
1.அந்த உணர்வுக்கொப்பச் சிந்தித்து செயல்படும் திறனும்
2.தீமைகளை அகற்றிடும் ஆற்றலும் நீங்கள் பெறுவீர்கள்.

அதற்கே அடிக்கடி உங்களுக்குள் இதைப் பதிவு செய்வது

நீங்கள் வளர நான் வளர முடிகின்றது. நீங்கள் வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் அந்த உண்மையின் உணர்வை நுகரப்படும் பொழுது எனக்குள்ளும் அது விளைகின்றது.

உணர்வின் ஒளி அலைகள் வெளிப்படும் பொழுது சூரியனின் காந்த சக்தி கவர்கின்றது. நீங்கள் நுகர்ந்தறியும் பொழுது உங்கள் உயிர் அதை அணுவாக மாற்றுகின்றது.
1.அணுக்களாக ஆன பின் தன் இரைக்காக உணர்ச்சிகளை உந்துகின்றது.

2.அதை நுகரும் பருவம் வரும் பொழுது “அந்த ஞானத்தின் தன்மை இயக்கும் சக்தியைப் பெறுகின்றீர்கள்...”

இதை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

மாமரத்தின் சத்தும் ரோஜாப் பூவின் சத்தும் விஷச் செடியின் சத்தும் சந்தர்ப்பவசத்தால் ஒன்றுடன் ஒன்று மோதிக் கலவையாகி... புவியின் ஈர்ப்பிற்குள் சிக்கப்பட்டுக் கருவுற்றுச் செடியாக விளையப்படும் பொழுது அரளிச் செடியாக மாறுகின்றது. அந்த மூன்றும் ஒன்றாக இணைந்து அரளிச் செடியாக மாறுகின்றது.

அரளிச் செடியாக மாறும் பொழுது
1.மாமரம் போல் இலைகள் இருந்தாலும் அதிலே சில வித்தியாசங்களும்
2.ரோஜாப் பூவைப் போன்று இருப்பினும் மணமும் கொண்டாலும்
3.விஷத்தன்மைகள் கலக்கப்படும் பொழுது அந்தச் செடி விஷத்தன்மை கொண்டதாகி விடுகிறது.

விஷச் செடியின் சத்து பத்து சதவீதம் ரோஜாப்பூவின் சத்து மூன்று சதவீதம் மாமரத்தின் சத்து பத்து சதவீதம் கவரப்பட்டு இந்த உணர்வுகள் ஒன்றாக இணைந்து ஒரு வித்தாக பூமியிலே பதியும் பொழுது “அதனதன் சதவீதம்” காற்றிலிருந்து இழுத்து அரளிச் செடியாக விளைகின்றது.

செடி உருவான பின் அந்த அரளிப் பூவில் ரோஜாப்பூ போன்ற மணங்கள் வரும்.
1.அரளிப் பூவைச் சாப்பிட்டால் மயக்கம் வரும்
2.அரளி விதையை உட்கொண்டால் மனிதனை மாய்த்துவிடும்.
3.ஆனால் அரளிச் செடியின் மணத்தை நுகர்ந்தால் “நம் உடலில் இருக்கக்கூடிய தீமையான அணுக்களைக் கொன்று விடும்...”

இதிலே இத்தனை வித்தியாசங்கள் உண்டு...!

அந்த அரளிப்பூக்களை எடுத்து சூரிய புடமாக்கி... தேங்காய் எண்ணெயில் கலந்து அதைக் காய்ச்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிலருக்குக் கால்கள் வீக்கமாகி நீர் வடியும்...
1.அந்த இடங்களில் காய்ச்சிய இந்த எண்ணையைத் தடவினால் அரிப்பு

நின்றுவிடு.ம்
2.நீராக வடியும் அந்த இடத்திலிருக்கக்கூடிய விஷத்தன்மைகளும் மடிந்து... அந்தத் தோல் நன்றாக ஆகிவிடும்.

அந்த அரளியிலேயே ஓரடுக்கு அரளி... பல அடுக்கு அரளி என்றெல்லாம் உண்டு.

நம்மை அறியாது தோலில் சேரும் சில விஷத்தன்மைகளால் இதனுடைய மணம் பட்ட பின் அது தோலை உருவக்கிய நல்ல அணுக்கள் மடிவதும்... அதனின் மலம் பட்டபின் தசைகள் குறைவதும் நீராக வடிவதும்... அந்த நீரையே உணவாக எடுத்து உட்கொள்ளும் நிலை பெறுகிறது (தோல் சம்பந்தப்பட்ட வியாதி).

அத்தகைய அணுக்கள் மடிந்தால் சூரியனின் காந்த சக்தி அதைக் கவர்ந்து கொள்கிறது. பின் அந்த மனிதனுடன் யாரெல்லாம் தொடர் கொண்டு பேசுகின்றார்களோ அல்லது பழகுகின்றார்களோ
1.அவருடைய சுவாசத்திற்குள் அந்த விஷ அணுக்கள் சென்று உடலில் அரிப்புத் தன்மையாகி
2.சுவாசப் பைகளிலும் அரிப்பாகி... தன்னை அறியாது வேதனைப்படும் நிலை வரும்.

ஒரு மனிதனில் விளைந்த அந்த நோயின் உணர்வு இங்கே வந்து விடுகின்றது. ஏனென்றால் சூரியனின் காந்த சக்தியால் கவரப்பட்ட அத்தகைய உணர்வுகளை நாம் நுகரப்படும் போது உயிர் ஓ... என்று ஜீவ அணுவாக ஆக்கி ம்... என்று நம் உடலாக மாற்றி விடுகின்றது... நோயாக உருவாக்கி விடுகிறது.

இது எல்லாம் நம்மை அறியாமல் இயக்கக் கூடிய செயல்கள். இதையெல்லாம் நாம் மாற்றிப் பழக வேண்டும்.

குருநாதர் எம்மைக் (ஞானகுரு) காட்டுக்குள் அழைத்துச் சென்று ஒவ்வொன்றையும் நேரடியாகக் காட்டிய நிலைகளைத்தான் உங்களிடம் சொல்கின்றோம்.

1.வாக்குடன் கொடுக்கின்றேன்... புரிந்து கொள்ளுங்கள்.
2.யாம் சொன்னதை அந்தத் துருவ நட்சத்திரத்தை எண்ணி அந்த நம்பிக்கையோடு செய்ய வேண்டும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

மீண்டும் மீண்டும் யாம் உங்களுக்கு ஞாபகப்படுத்துவது...
1.ஞானிகளால் உணர்த்தப்பட்ட பேருண்மைகளை...
2.அவர்கள் வழியிலேயே அதை அறிந்து... நாம் எவ்வாறு வாழ வேண்டும்...?
3.இந்த வாழ்க்கையில் எவ்வாறு தெளிவுடன் செயல்பட வேண்டும்...?
4.இந்தப் பிறவிக்குப் பின் அடுத்து நாம் எந்த உடலைப் பெற வேண்டும் என்பதனைத் தான்...!

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அகஸ்தியன்... சந்தர்ப்பத்தால் அவனுக்குள் விளைந்த நஞ்சினை வென்றிடும் ஆற்றலைத் தனக்குள் பெற்றான்.

அந்த உணர்வின் துணை கொண்டு "வான இயலின்" ஆற்றலைத் தனக்குள் கண்டுணர்ந்து... அது "புவி இயலாக" மாறும் பொழுது தாவர இனங்களாக உருவாகுவதையும்... அந்தத் தாவர இனங்களின் சத்தினை உயிரணுக்கள் (உயிர்கள்) நுகர்ந்து தனக்குள் அணுக்களாக மாற்றி உடல்களாக உருவாகுவதையும்... "உயிரியலாக" மாறுவதையும் அறிந்துணர்ந்தான்.

அதே சமயத்தில்
1.உயிரணு தோன்றி பல கோடிச் சரீரங்கள் பெற்ற பின்
2.அதனுடைய கடைசி முடிவு... அதனுடைய கடைசி எல்லை எது...?
என்பதனையும் அகஸ்தியன் அறிந்து கொண்டான்.

அகஸ்தியன் துருவனாகி துருவ மகரிஷியாகி பேரருள் பேரொளியாக துருவ நட்சத்திரமாகி... துருவத்தை எல்லையாக வைத்து இன்றும் தனது வாழ்க்கையை வழி நடத்திக் கொண்டு... அகண்ட அண்டத்திலிருந்து வருவது அனைத்தையும் ஒளியாக மாற்றிக் கொண்டுள்ளான் துருவ மகரிஷி... துருவ நட்சத்திரமாக...!

அதாவது உயிரணு தோன்றி பரிணாம வளர்ச்சியில் மனிதனான பின் உணர்வின் தன்மை ஒளியாக மாற்றி... அதையே கடைசி எல்லையாகப் பிறவி இல்லா நிலைகள் கொண்டு வாழ்ந்து வளர்ந்து கொண்டுள்ளான் துருவ மகரிஷி.

அவனின்று விளைந்த உணர்வுகளை... அவனுக்குப் பின் வந்த மக்கள் யார் யாரெல்லாம் அதை நுகர்ந்து கொண்டனரோ... ஆறாவது அறிவை ஏழாவது நிலை ஒளியாக மாற்றும் திறன் கொண்டு... துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் சப்தரிஷி மண்டலமாக வாழ்கின்றனர்.

ஆதியில் விண் சென்ற முதல் மனிதனான அகஸ்தியன்
1.அவன் வாழ்ந்த காலத்தில் தன் வாழ்க்கையை எவ்வாறு வழி நடத்தினானோ அவன் வழிப்படி நாமும் சென்றால்
2.மனிதனின் கடைசி எல்லையான சப்தரிஷி மண்டலங்களுடன் இணைந்து பிறவி இல்லா நிலை அடையலாம்
3.இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள சூரியனே அழிந்தாலும் அகண்ட அண்டத்தில் என்றும் நிலை கொண்டு வாழலாம்.

உயிரணு தோன்றி மனிதனான பின் உணர்வினை ஒளியாக மாற்றி அமைத்து உயிருடன் ஒன்றி வாழும் துருவ மகரிஷியின் உணர்வுகளை நுகர்ந்து... நாம் அனைவரும் அதனின் ஈர்ப்பு வட்டதில் சப்தரிஷி மண்டலங்களாக வாழ முடியும்.

சேவை செய்வதில் மிக உயர்ந்த சேவை எது...?

ஒரு உயிரணு தோன்றிய பின் அது கடலைச் செடியை உணவாக உட்கொள்ளுமே என்றால் அதிலே மாற்றுச் செடியின் வலுவான உணர்வுகளை நுகர்ந்து சுவாசித்து இதற்கு அது ஆகவில்லை என்றால் இதனின் ஜீவ அணுக்கள் பெருகி புழுவின் உடலுக்குள் இந்த உணர்வின் தன்மை மலமாக மாற்றி கடலைச் சத்தில் உருவான அணுக்களை அது செயலிழக்கச் செய்து அதன் மலத்தை உணவாக உட்கொள்ள ஆரம்பித்து விடும்.

பின் அதனின் இயக்கம் துரித நிலையாகி குழுவின் உடல் அழுகிய நிலையோ அல்லது குறையும் நிலையோ வரும் பொழுது உயிரான்மா வெளியே வருகின்றது.

ஒரு உயிரணு கடலைச் செடியினை நுகர்ந்து உருவானாலும் பல செடிகளை நுகரப்படும் பொழுது வேறு ஒரு ரூபத்தை அடைகின்றது.

ஆனால் வேறு ஒரு செடியை நுகர்ந்த உணர்வுகள் ஜீவணுவாகி அதனுடைய மலத்தை அது உமிழ்த்தும் பொழுது இந்த உயிரணு உடல் இழந்தாலும் இன்னொரு அணுவின் சத்தை இது விளங்கும் நிலை வருகின்றது இவ்வாறு வந்த அணு தான் இதே கடலை செடியை விழுங்கும் நிலை வருகிறது.

இவ்வாறு வந்த அணு தான் இதே கடலைச் செடியினை விழுங்கியிருக்கும் என்றால் அது அந்தப் புழுவைக் கொன்று சாப்பிடும் ஒரு உயிரணுவாக வரும்.

அது கடலைச் செடியை உணவாக உட்கொண்டாலும் இன்னொரு செடியை நுகர்ந்து இது இதனுடைய எதிர்ப்பிணையான ஜீவ அணுவாக வரும் பொழுது இந்த உடலுக்குள் அதைக் கொன்று புசிக்கும் நிலை கொண்ட அந்த அணு மறுபடியும் இந்த உடலைப் பிளந்தபின் வெளியே வந்தது என்றால் மீண்டும் இதைப் போன்று எந்தப் புழுவின் தசைகளை விழுங்க எண்ணியதோ அதே உணவின் சத்தைக் கொண்டு இந்த புழுவே அதற்கு ஆகாரமாக எடுத்துக் கொள்கின்றது.

எறும்பு மற்ற புழு பூச்சிகளைக் கொன்று சாப்பிடுகின்றது. தாவர இனத்தையும் சாப்பிடுகின்றது. இதைப்போல ஒன்றை ஒன்று உணர்வின் சத்தை வென்று எந்த உடலின் தன்மையில் அது உருப் பெற்றதோ அதனை விளைவித்த அந்த உயிரணு மாற்று உடலைப் பெற்றாலும் எதனை உணவாக உட்கொண்டு உடலின் தன்மை அடைந்ததோ அது மீண்டும் புழுவைக் கொன்று சாப்பிடும் நிலை தான் வருகின்றது.

இதே நிலைகள் தான் மனிதரிடத்திலும் செயல் நடைபெறுகிறது.

உதாரணமாக மனிதனின் நிலைகளில் அன்பு கொண்டு பரிவு கொண்டு பார்த்துப் பேசுகின்ற பொழுது மற்றவர்களிடத்தில் நோயின் தன்மை இருக்குமேயானால் அவர் படும் வேதனையைக் கேட்டறிந்து நாமும் வேதனை கொள்வோமேயானால் அந்த நோயின் தன்மை நம்மிடத்திலும் பற்றிக் கொள்கின்றது.

இவ்வாறு பேரண்டத்திலும் இப்புவியிலும் மனிதரிடத்திலும் நடைபெறும் இயற்கையின் சூட்சும இயக்கங்களைக் கண்டுணர்ந்த மெய்ஞானிகள் சாதாரண மக்களும் உண்மைகளை அறிந்து மேன்மை நிலை பெற வேண்டும் என்று காண்பித்து அருளிய மெய் ஞானத்தை மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் காண்பித்த அருள் வழியில் உங்களுக்கு எடுத்து உபதேசிக்கின்றோம்.

அதில் உங்கள் கருத்தினைச் செலுத்தி உங்களிடத்தில் மறைந்திருக்கும் சக்தி வாய்ந்த ஆற்றலை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் உயிரான்மாவின் மேன்மைக்காக நீங்கள் செய்யும் சேவையே அனைத்திலும் உயர்ந்த சேவை என உணர்வீர்கள்.

ஆகவே அதனை உணர்ந்து மகரிஷிகள் காண்பித்த அருள் வழியில் செயல்படும் அனைவருக்கும் மகரிஷிகளின் அருள் சக்திகள் கிடைக்கப் பெற்று எல்லா நலமும் எல்லா வளமும் பெற வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

ஆற்றிலோ அல்லது ஒரு குளத்திலோ (நீருக்குள்) ஒரு கல்லினைப் போட்டால் அந்த இடத்தில் பளீர் என்று விலகிக் கொள்ளும். அடுத்து அது மூடிக்கொள்ளும்.

அது போன்று தான்
1.பக்தி மார்க்கத்தில் மூழ்கிய நிலைகள் கொண்டு உண்மைகளை மறைத்த நிலைகள் கொண்டு
2.அந்த ஞானிகள் உணர்த்திய உண்மைகளைச் சொல்லி அதற்குண்டான விளக்க உரைகளை இப்போது யாம் (ஞானகுரு) கொடுத்தாலும்
3.கேட்கும் பொழுது பளிச்... என்று அலைகள் உங்களுக்குள் படர்கிறது.
4.ஆனால் சிறிது நேரத்தில் மீண்டும் மூடி சம நிலை அடைந்து விடுகின்றது.

நல்ல உணர்வுகள் மறைந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் தீமையின் நிலைகள் வளராது உடனுக்குடன் அதைத் தடுப்பதற்குத் தான் இதனை உங்களுக்குள் அறிவிப்பது.

ஆகவே எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் எங்கு சென்றாலும் "ஈஸ்வரா..." என்று உயிரை எண்ணுங்கள். அந்த மகரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும் என்று கண்ணின் நினைவினை உயிருடன் ஒன்றச் செய்து உள்முகமாகச் செலுத்தி
1.அந்த மகரிஷிகளின் அருள் சக்தி உடல் முழுவதும் படர வேண்டும்
2.எங்கள் ஜீவான்மா ஜீவணுக்கள் பெற வேண்டும் என்று இப்படி ஐந்து முறை ஆறு முறை உள்ளே சக்கரம் போன்று சுழற்றுங்கள்.
3.உங்கள் ஜீவான்மாக்களைச் சுத்தப்படுத்துங்கள்... உங்களுக்கு முன் இருக்கக்கூடிய ஆன்மாவைச் சுத்தப்படுத்துங்கள்

தொழிலோ மற்ற எந்தக் காரியங்களோ அங்கெல்லாம் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி படர வேண்டும்... நாங்கள் பார்ப்பதெல்லாம் நலம் பெற வேண்டும்... நாங்கள் பார்ப்போர் எல்லாம் நலம் பெற வேண்டும் என்று எண்ணுங்கள்.

எங்களுடன் தொழில் செய்பவர்கள் எங்களிடம் வேலை செய்வோர் அனைவரும் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும்... எங்கள் வாடிக்கையாளர்

அனைவரும் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும்... நாங்கள் ஒன்று சேர்ந்து தொழிலை வளம் பெறச் செய்ய வேண்டும்... அறியாது சேர்ந்த இருளை நீக்கும் ஆற்றல் நாங்கள் பெற வேண்டும்...! என்று ஆன்மாவை அடிக்கடி இப்படி எண்ணிச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

அருள் உணர்வைப் பற்றுடன் பற்றி இந்த வாழ்க்கை வாழ்ந்தால் என்றுமே அது மகிழ்ந்து வாழும் சக்தியாக அமையும். வரும் தீமைகளை உடனுக்குடன் அகற்றிட முடியும்.

அதே போல் உங்கள் குடும்பத்தில் எத்தகைய சிக்கல்கள் வந்தாலும் உடனே ஆத்ம சுத்தி செய்து அதை நிவர்த்திக்கும் பழக்கம் வர வேண்டும்.

1.இந்த உடல் உங்களது அல்ல
2.எண்ணும் எண்ணம் உங்களது அல்ல
3.உணர்வின் இயக்கமாக உயிர் இயக்குகின்றது
4.உணரும் அறிவே நமக்குள் இருக்கின்றது
5.அறிவின் உணர்வாகத் தான் நம் உணர்வின் தன்மை செயல்படுகின்றது.

ஆகவே அந்த ஞானிகள் காட்டிய அருள் உணர்வுடன் ஒன்றுவோம் அருள் ஞானிகள் பெற்ற ஆற்றலை நாம் பெறுவோம். அறியாது வந்த தீமைகளை அகற்றுவோம்.
1.மகரிஷிகளின் அருள் வட்டத்தை எல்லையாகக் குறி வைத்து
2.இந்த வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோம்.

அருள் ஞானிகள் காட்டிய அருள் வழியில் நீங்கள் மகிழ்ந்து வாழ்ந்திட எமது குரு அருளும் எமது ஆசியும் உங்களுக்குள் உறுதுணையாக இருக்கும். உங்களை அறியாத வந்த தீமைகள் அகன்று... மெய் உணர்வுடன் ஒன்றி... பேரானந்தப் பெருநிலை பெறுவீர்கள் என்று பிராத்திக்கின்றேன் (ஞானகுரு)

உயிரின் வேலை

ஒரு ஜீவணு மற்றொரு ஜீவ அணுவால் கொல்லப்படும் நிலை வரும் பொழுது அது தடுமாறி தன் நிலைகளில் தப்பித்துச் செல்லும் பொழுது உடல் அரிப்புகளும் மற்றும் நிலைகளும் ஏற்படும்.

இவையெல்லாம் இயற்கையின் நிலைகள் கொண்டு நடைபெறுகின்றன.

நாம் கரண்டினை உற்பத்தி செய்து அந்த கரண்ட்டுடன் எதனெதன் நிலைகளை இணைக்கின்றோமோ அதற்குண்டான செயல்களை அந்த கரண்ட் ஆனது செய்விக்கின்றது.

அது போன்று தான் நமது உயிரின் வேலையும்.

நமது உயிர் நாம் எண்ணிய உணர்வின் சத்தை ஜீவ அணுக்களாக உருமாற்றம் தன்மையைச் செய்விக்கின்றது. இவ்வாறு நமது உயிர் நமது உடலுக்குள் இருந்து செயல்பட்டு வரும் இந்த நிலையில் நாம் நம்மை அறியாதபடி சூட்சுமத்தில் மறைந்திருக்கும் இந்த நிலைகளைக் கண்கொண்டு பார்க்க முடிவதில்லை.

நாம் நுகர்ந்தறிந்த உணர்வுகளோ நாம் சுவாசித்து உயிரிலே உராயப்படும்போது தான் உணர்வின் தன்மை நம் உடலிலே அதனைக் காண்பிக்கிறது.

நாம் கண் கொண்டு திடப்பொருளைக் காணுகின்றோம். அதனின் தன்மையை நாம் அறிகின்றோம். ஆனால் கண்ணின் இந்தக் காந்த புலனறிவு அந்த மனிதன் தவறு செய்யும் பொழுது வெளிப்பட்டதைச் சூரியனின் காந்த சக்தி கவர்ந்தாலும் கண்ணுடன் இணைந்த காந்தப் புலன் நாம் யாரை உற்று நோக்குகின்றமோ அதனின்றி வெளிப்படும் உணர்வின் தன்மையை நம்மை நுகரச் செய்கின்றது.

நுகர்ந்த உணர்வு உயிரில் மோதியவுடன் அது அகக்கண்ணாக நம் உடலுக்குள் அந்த உணர்வினைப் பரப்பி நம்மை அறியச் செய்கின்றது.

கண்ணால் திடப்பொருளைக் கண்டாலும் உணர்வால் அது உடலுக்குள் சென்று அது உணரும் தன்மை வருகின்றது. அத்தகைய உணரும் தன்மை வந்தாலும் நாம் சுவாசித்த உணவின் தன்மையை நம் உயிர் இயக்கிக் காட்டுகின்றது.

இயக்கிய உணர்வின் தன்மை நம் உடலில் இயங்கி அதனை இணைத்து விடுகின்றது. இவ்வாறு தான் சூட்சுமத்தில் இருப்பதை நாம் காண முடியவில்லை என்றாலும் அது நம் உடலாக திடமானாலும் அது திடமான பின் அதை நாம் காண முடிகின்றது.

இவ்வாறு வேதனை சோகம் போன்ற உணர்வுகளை நாம் நுகரப்படும் பொழுது இந்த உணவின் இயக்கங்களால் உடல்கள் சோர்வடைவதும் நோயாக உருவாவதையும் நாம் காணலாம்.

இவ்வாறு நம்மிடத்தில் செயல்படும் உணர்வின் இயக்கங்களை அறிந்து மாமகரிஷிகள் காண்பித்த அருள் வழியினைப் பின்பற்றி மகரிஷிகளின் அருள் ஒன்றே நம் அனைவரையும் உயர்த்தும் வல்லமை வாய்ந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்வோம்.

எல்லாம் வல்ல மகரிஷிகளின் அருள் ஆற்றலை நீங்கள் பெறவேண்டும் என்று ஆசீர்வதிக்கின்றோம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

விஞ்ஞான உலகில் வாழ்கிறோம். உடல் பற்றுடன் இருப்போம் என்றால் மருத்துவமனைகளில் இன்று பார்க்கலாம்... ஒரு மனிதனுக்குக் கேன்சர் வந்து விட்டால் எத்தனை அறுவை சிகிச்சைகளை மேற்கொள்கின்றனர்...?

நோயைக் கண்டுபிடிப்பதற்காக மனம் உவந்து
1.மூக்கிலும் வாயிலும் மற்ற இடங்களிலும் டியூபுகளைச் சொருகுவதும்
2.தலையோ மற்ற இடங்களில் உள்ள உறுப்புகளை அறுத்துப் பரீட்சிப்பதும்
3.சில நேரங்களில் அந்த உறுப்புகளை அகற்றி மாற்று உறுப்புகளையும் வைத்துச் செயல்படுத்துகின்றார்கள்.
4.எத்தகைய நரகலோகத்தைச் சந்திக்கிறோம் என்று பாருங்கள்.

இதை எல்லாம் நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். ஆனால் ஞானிகள் அன்றே இதைக் காட்டினார்கள். சித்திரபுத்திரன் கணக்கின் பிரகாரம் எமன் தண்டனை கொடுக்கின்றான் என்று...!

கண்களால் பிறரை உற்றுப் பார்த்து பரிவுடன் அவர்கள் வேதனைகளைக் கேட்டறிந்தாலும்... கண்களால் பார்த்து நுகர்ந்த அவருக்குள் விளைந்த (வேதனை) உணர்வுகளை நமக்குள் கவரப்படும் பொழுது அது புத்திரனாக... அணுக்களாக இங்கே வந்துவிடுகிறது.

அவன் கஷ்டப்படுகிறான்... கஷ்டப்படுகிறான்... என்று
1.பாசத்தால் நாம் சொன்னால் பாசக் கயிறாக வழி தொடர்ந்து சிந்திக்கும் திறன் அனைத்தும் இழக்கப்பட்டு
2.எமன் எருமை மீது வாகனமாக வருவது போன்று சிந்தனையற்ற நிலைகள் ஆகி
3.தீய வினைகளாக நம் உடலில் அது விளைந்து உறுப்புகள் கெடுகிறது.

அந்த உறுப்புகளைச் சீர்படுத்த நாம் அறுவை சிகிச்சைகள் செய்வது போன்று அந்த எமலோகத்தைக் காட்டியிருப்பார்கள்.

அதாவது... நம் எண்ணமே தீமைகளை விளைய வைக்கும் உறைவிடமாக எமலோகமாக மாறி... நல்ல உணர்வுகளை அது எப்படி அழிக்கின்றது...? என்ற நிலையைக் காட்டுவதற்காகக் காவியமாக எடுத்துரைத்துள்ளார்கள். நாம் எளிதாகப் புரிந்து கொள்வதற்குப் படங்களாகவும் வரைந்து காட்டி உள்ளார்கள்.

எமலோகத்தின் செயல்கள்...
1.எமன் அழைத்துச் சென்ற பின் எண்ணெய்க் கொப்பரையில் போட்டு ஆட்டுவதும்
2.மண்டையை ரம்பத்தை வைத்து அறுப்பதும் கை கால்களைத் துண்டிப்பதும்
3.தலைகீழாகத் தொங்க விடுவதும் நெருப்பிலே வைத்து எரிப்பதும் போன்ற எத்தனையோ நிலைகளைக் காட்டியிருப்பார்கள்.

குழந்தைப் பருவத்திலிருந்து எத்தனையோ நிலை நமக்குள் விளைந்தது... இந்த உடல் என்ற சொர்க்கலோகத்தில்... எண்ணத்தால் எமலோகத்திற்குள் சிக்கி அறியாமலே நம் உடலுக்குள் எத்தனை அறுவை சிகிச்சைகள் (ண்ஹரக வேதனைப்படும்படியாக) நடக்கிறது...? அன்று மெய் ஞானிகள் காட்டினார்கள்.

விஞ்ஞான அறிவால் கண்கூடாக நம் உடலுக்குள் அனுபவிக்கின்றோம்.

உடல் இந்த சொர்க்கலோகத்தை நாம் மறந்திடலாகாது. அதிலே நாம் எண்ணியது அனைத்தும் இந்திரலோகமாக மாறி உடலாக மாறிக் கொண்டுள்ளது என்பதை உணர்தல் வேண்டும்.

1.மெய் உலகான அந்த மகரிஷிகளின் அருள் உணர்வுடன் நீங்கள் ஒன்றி வேகா நிலை என்ற முழுமை அடைந்திட
2.என் குருநாதர் காட்டிய நிலைகளை உங்களுக்குள் உபதேசிக்கின்றேன்.
3.இந்த உபதேசத்தின் வாயிலாக அந்த மகரிஷிகளின் ஆற்றல்மிக்க சக்தியை
4.மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் காட்டிய அருள் வழியில் உங்களுக்குள் பதிவு செய்கின்றேன் (ஞானகுரு).

எல்லோரும் அந்த உயர்ந்த நிலை பெற வேண்டும் என்று நான் (ஈஸ்வரபட்டர்) கொடுத்த சக்தியை அவர்களுக்குள் விளைய வைத்து என்று நீ செயல்படுகின்றாயோ

1.அந்த உணர்வுகளால் நீயும் உயர்ந்த நிலை பெறுகின்றாய்
2.அவர்களும் உன்னுடன் ஒன்றி வருகின்றார்கள்.
3.அனைவரும் ஒருங்கிணைந்த நிலையில் மகிழ்ந்து வாழும் நிலை பெற வேண்டும்.

இதைத்தான் குருநாதர் எனக்குக் காட்டினார். அவர் காட்டிய நெறிகளைக் கடைப்பிடித்து... பத்தாவது நிலையான கல்கி என்ற "உயிருடன் ஒன்றிய ஒளியின் சரீரம் பெறுவோம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

மனித வாழ்க்கையில் நமக்குள் உயர்ந்த குணங்கள் இருந்தாலும்... சந்தர்ப்பத்தால் அதனின் இயக்கச் சக்திகள் மறைந்து நஞ்சுக்குள் சிக்கித் தவிக்கும் நிலைகள் வந்து விடுகின்றது.

இதையெல்லாம் அறிந்து கொள்வதற்கு எத்தனையோ காவியங்களை ஞானிகள் எடுத்துரைத்துள்ளார்கள்.

ஆனால் ஆறாவது அறிவைப் பயன்படுத்த முடியாது அதை இழந்ததனால் இன்று எவரோ செய்வார்... தெய்வம் செய்யும்... ஜோதிடம் செய்யும்... காலங்கள் செய்யும்... யாகங்கள் செய்யும்... சாமியார் செய்வார்... மற்றவர்கள் செய்வார்கள்...! என்ற இத்தகைய எண்ணங்களைத் தான் பரப்பி வைத்திருக்கின்றோமே தவிர "தன்னை நம்பப் பழகவில்லை..."

ஏனென்றால் நாம் எத்தகைய உணர்வை நமக்குள் இணைக்கின்றோமோ நமது உயிர் அதை இயக்கி நமது உடலாக மாற்றி விடுகிறது. அதாவது
1.நாம் எண்ணிய உணர்வுகளை வித்தாக (வினையாக) மாற்றி அந்த வித்தின் நிலையை இயக்கி
2.நாம் எடுத்துக் கொண்ட உயர்ந்த உணர்வை நம் ஆன்மாவாக மாற்றி அதே உணர்வின் உடலாக இயக்கி
3.அந்த உணர்வின் சத்துக்களாக நமக்குள் எவ்வாறு விளைகிறது என்ற நிலையை
4.ஞானிகள் தெளிவாக எடுத்துக்காட்டி இருந்தாலும் அதனை அறியாது இன்றும் இருக்கின்றோம்.

மற்ற உயிரினங்கள் அதனுடைய (எண்ணத்தால்) தியானத்தால் மனிதனாக வளர்ச்சிக்கு வருகின்றது. அப்படித் தான் நாம் வந்துள்ளோம். ஆனால்
1.மனிதனான பின் தீமைகள் அகற்ற முடியும்

2.மெய் ஞானிகளின் உணர்வை நுகர்ந்து நமக்குள் உயர்ந்த நிலைகளை உருவாக்க முடியும் என்று இருந்தாலும்
3.இப்போது நாம் எதைத் தியானிக்கிறோம்...? என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நமது குழந்தையை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்று எண்ணுகின்றோம். அதே சமயம் குழந்தை நாம் எண்ணியபடி கல்வியில் சிறந்து வரவில்லை என்றால் அவனைக் கண்டு "இவன் இப்படி இருக்கின்றானே... அவன் எதிர்காலம் என்னவாகும்...?" என்று வேதனைப்படுகின்றோம்.

இந்த வேதனையை மீண்டும் மீண்டும் எடுத்து அவனிடம் கடிந்து இரண்டு தரம் அழுத்தமாகப் பேசும் பொழுது அவன் நம் மீது பாசமாக இருக்கும் உணர்வுகளுடன் கலந்து விடுகிறது.

1.நமக்குள் விளைய வைத்த வேதனையான நஞ்சை அவனுக்குள் பாய்ச்சப்படும் பொழுது
2.நம் சொல் கடினமாகி அவனுக்குள் அவன் அறியாது இயக்க நிலைகள் தடையாகி
3.உடல் நலக் குறைவாகி... காய்ச்சலோ மற்ற குறைபாடோ வந்து விடுகிறது.

ஆனால் அவன் தவறு செய்யவில்லை... நம்முடைய நிலைகள் இவ்வாறு ஆகிவிடுகிறது. இந்த மாதிரி நேரங்களில் நாம் என்ன செய்ய வேண்டும்...? ஆனால் என்ன செய்கின்றோம்...!

குழந்தையை எண்ணி எண்ணி இப்படி ஆகிவிட்டானே என்று வேதனையை பாய்ச்சியபின் அந்தக் காய்ச்சலாகும் போது நமக்குள் வேதனை இன்னும் அதிகரிக்கிறது.

அவனைக் காத்திடும் நிலை கொண்டு... "வேதனைகளையே" நமக்குள் சமைத்துச் சமைத்து அதைத்தான் வளர்த்துக் கொள்கின்றோம்.

அவன் காய்ச்சலாக இருக்கப்படும் பொழுது "டேய் கண்ணு... கொஞ்சம் சாப்பிடுடா...!" என்று சொல்கின்றோம்.

அந்த வேதனையால் அவனால் உணவு உட்கொள்ள முடியவில்லை என்றால்... "சாப்பிட வேண்டும்..." என்று அழுத்திச் சொல்லப்படும் போது இன்னும் கொஞ்சம்

அவனுக்கு வேதனை அதிகமாகி “நீ போ...” என்று வேகமாகச் சொல்லி விடுகின்றான்.

நாம் அதைக் கேட்ட பின்... அடப் பாவமே... அவன் சாப்பிடவில்லையே இரண்டு நாட்களாகி விட்டது... மூன்று நாட்களாக ஆகிவிட்டதே...! என்ற தாய்ப் பாசத்தால் இந்த உணர்வை நுகர்ந்து
1.அங்கே விளையும் நஞ்சினை இங்கே வித்தாக விளைய வைத்து
2.அவனை எண்ணும்போதெல்லாம் இது ஒரு தியானம் தான்.

இப்படி இருக்கின்றானே...! அவன் என்ன ஆவான்...? என்ற இந்த வித்தினை உருவாக்கி... அந்த உணர்வின் சத்தை நமக்குள் கருவாக்கி... அவனின் நிலையைத் தியானித்து... அந்தத் தீய வினையே நமக்குள் உருவாகி விடுகிறது.

நாம் தவறு செய்யவில்லை... அவனும் தவறு செய்யவில்லை
1.அவன் உயர வேண்டும் என்ற எண்ணத்தை வைத்தோம்
2.உயர வேண்டும் என்ற “செயலை” நமக்குள் வைக்கவில்லை.

பால் சத்தாக இருந்தாலும் அதற்குள் நஞ்சினை விட்டால் அது அந்தப் பாலைச் செயலற்றதாக ஆக்குவது போன்று “நம்முடைய நல்ல உணர்வுகள்” நாம் நுகர்ந்த உணர்வுகளால் நஞ்சாகப் பாய்ந்து... நஞ்சின் செயலாகவே மாறி விடுகின்றது.

இப்படித்தான் இன்று
1.குறைகளை எண்ணி எண்ணி அதையே தியானித்துக் கொண்டிருக்கின்றோம்.
2.ஆகவே நாம் எதைத் தியானிக்க வேண்டும் என்று சிந்தித்துப் பாருங்கள்.



இன்று குறைகளை எண்ணி எண்ணி அதைத் தான் தியானித்துக் கொண்டிருக்கின்றோம். அதற்குப் பதிலாக தீமையிலிருந்து விடுபட்ட... தீமையிலிருந்து விடுபட்டு உணர்வை ஒளியாக மாற்றிப் பேரானந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மகரிஷிகள் ஞானிகளை நாம் மீண்டும் மீண்டும் எண்ணினால் நம் உயிர் அதை உருவாக்கும்.



காளிங்காராயனின் உணர்வு கொண்டு "உலகைக் காக்கும் சக்தியாகச் செயல்பட்ட போகன்"

பழனியம்பதியில் நான் (ஞானகுரு) வாழ்ந்தவன் தான். இருந்தாலும் அதனுடைய உண்மைத் தத்துவம் எனக்குத் தெரியாது. இருப்பினும் குருநாதர் எமக்கு அதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

போகன் தனது வாழ்க்கையில் எதையுமே மோகித்து அதைப் போகித்துத் தனக்குள் தன் வாழ்க்கையில் வரும் இருளைப் போக்கும் அந்த மகரிஷிகள் உணர்வைத் தனக்குள் கவர்ந்து கொண்டான்.

அவன் எப்பேர்ப்பட்டவன்...? என்று எண்ணும் பொழுது அந்தப் போகனும் தன் தாயால் வளர்க்கப்படும் பொழுது விஷம் கொண்ட பாம்பு சந்தர்ப்பத்தால் தாயாரைத் தீண்டுகின்றது.

தாயைக் காக்க எண்ணத்தால் அவன் அலைகின்றான் அலைகின்றான் பல நிலைகளைத் தேடி...! அன்று சாதாரண நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும்... பிற்காலத்தில் வந்த போகனே தான் அது.

தன் தாயைக் காக்க எண்ணித் தேடி அலையும் பொழுது காளிங்கராயன் என்ற விஷத்தன்மையை முறிக்கும் ஒரு வைத்தியரிடம் சென்று சேர்கிறான்.

தன் தாயைப் பாம்பு தீண்டி விட்டது... அதை நீ காக்க வேண்டும் என்ற ஏக்கத்தால் அவரிடம் சென்று கேட்கப்படும் போது அவர் கொடுத்த விஷத்தை முறித்திடும் சத்தினைத் தன் தாய்க்கு கொடுத்த பின் அது எழுந்து மறுமலர்ச்சி அடைகின்றது.

அப்பொழுதுதான்
1.அவர் கொடுத்த பச்சிலையும் அவர் செய்த நிலைகள் கொண்டு அவரைக் குருவாக்கி
2.அந்த ஆற்றலைப் பெற வேண்டும் என்று அங்கே அடிமையாகின்றான்.

காலத்தால் தாய் இறந்து விடுகின்றது. தாய் தன் உணர்வின் செயலால் தன்னை எப்படி மனிதன் ஆக்கியது...? என்ற நிலைகளில் அது கண்டறிந்த உணர்வால்... அகஸ்தியரின் உணர்வு அவனுக்குள் சிக்கப்படுகிறது.

தன் உணர்வின் தன்மை கொண்டு தாவர இனத்தின் சத்தைத் தன்னைக் காத்திடும் உணர்வாக அகஸ்தியரின் தாய் தந்தையர் தன் உடலில் எடுத்துக் கொண்ட பின் கருவில் இருக்கும் அகஸ்தியன் என்ற அந்த சிசுவுக்குள் இது படபட்டு நஞ்சை முறித்திடும் உணர்வாகத் தாயின் கருவிலே உருவாகிப் பிறந்தபின் அகஸ்தியன் என்ற நிலைகளில் அணுவை அறிந்திடும் நிலையாகப் பிறந்தான்.

1.அவன் நுகர்ந்த அறிவை இவன் அதைக் கண்டுபிடித்து
2.அகஸ்தியன் கண்டுணர்ந்த விண்ணுலக ஆற்றலும் தாவர இனத்தால் கவர்ந்த நிலைகளும் இவனுக்குள் எடுத்து
3.இந்தப் பிரபஞ்ச இயக்கத்தின் உண்மையை உணர்கின்றான் போகன்.

அப்படி உணர்ந்த நிலைகளைத் தான் தாவர இனத்தை நுகர்ந்து பல பரிணாம வளர்ச்சிகளாகி மனிதனாகப் பிறந்தாலும் மனித நிலைகளில் எவ்வாறு மனிதன்

தீமைகளிலிருந்து எவ்வாறு விடுபட வேண்டும்...? என்ற நிலையைத் தனக்குள் எண்ணுகின்றான்.

அன்று மிருகங்களிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள அகஸ்தியனின் தாய் தந்தையர்கள் தனக்குள் எடுத்துக் கொண்ட நஞ்சை வென்றிடும் சக்தி அகஸ்தியனுக்குப் பூர்வ புண்ணியமாக அமைந்தது.

அதை அவர்கள் தங்கள் உடலில் முலாமாகப் பூசினாலும்
1.அவ்வாறு சுவாசித்த உணர்வுகள் நஞ்சினை முறித்திடும் சக்தியாக்க் கருவுக்குள் இருந்த குழந்தைக்குப் படப்பட்டு
2.அந்த உணர்வின் துணையால் நஞ்சின் வலிமை பெற்று நஞ்சினை அறிந்திடும் ஆற்றல் பெற்று
3.விண்ணுலக ஆற்றல் நஞ்சால் இயக்கப்படுகிறது என்பதை உணர்ந்த அகஸ்தியன்
4.தனக்குள் விளைய வைத்த உணர்வின் அலைகளைப் பரப்பினான் பரப்பினான்... பல நிலைகள் கொண்டு.

அவனே நம் பூமியின் துருவத்தைக் கண்டு துருவ நட்சத்திரமாக இருப்பினும் நஞ்சினை ஒடுக்கி உணர்வின் தன்மை ஒளியாக மாற்றியதை அந்தப் அகஸ்தியன் பெற்ற நிலையைப் போகன்...
1.தன் தாயின் நஞ்சினை நீக்கித் தனக்குக் குருவாக வழிகாட்டிய மனிதனைக் காத்திடும் காளிங்கராயனின் தத்துவத்தை
2.நஞ்சினை முறித்துத் தனக்குள் அதை அடக்கி ஆட்சி புரியும் காளிங்கராயன் தன்மையைத் தனக்குள் எடுத்து
3.தன் தாயைக் காத்த நிலைகள் “உலகைக் காக்க வேண்டும்...” என்று எண்ணத்தை ஓங்கி வளர்க்கின்றான் போகன்.

இதைப் போல இத்தகைய எண்ணங்களைத் தனக்குள் போகித்து மோகித்துத் தனக்குள் தன் உணர்விலேயே அறிகின்றான். இந்தப் பிரபஞ்சம் எப்படி இயங்குகிறது...? அதில் இருக்கக்கூடிய அணுக்கள் வளர்ச்சி பெற்று மனிதனாக எப்படி உருவானது...? என்று அகஸ்தியன் காட்டிய உணர்வின் தன்மையை இவன் அறிகின்றான்.

1.தன் தாயைக் காத்த காளிங்கராயனின் நஞ்சினை வென்ற உணர்வின் தன்மையைத் தனக்குள் வலு கொண்டு எடுத்து

2.அதை அறிய வேண்டும்... மக்களைக் காக்க வேண்டும் என்ற உணர்வினை வலுக் கொண்டு தனக்குள் சேர்த்தான் போகன்.

அவ்வாறு சேர்த்துக் கொண்ட உணர்வின் தன்மை கொண்டு தான்... சூரியன் உமிழ்த்தும் பாதரசம் ஒவ்வொன்றையும் தனக்குள் இணைத்து இரண்டறக் கலந்து தாவர இன்ங்களையும் கற்களையும் மண்களையும் வைரங்களையும் வைடூரியங்களையும் பாஷாணங்களையும் எப்படி உருவாக்குகிறது...? என்று அகஸ்தியன் தன்னில் கண்டுணர்ந்த உணர்வலைகளை நுகர்ந்தறிகின்றான் போகன்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நம்முடைய மூதாதையர்கள் பண்டைய காலங்களில் இரண்டு தலைமுறை அல்லது மூன்று தலைமுறை வரையிலும் ஒன்றாகச் சேர்த்து "ஒரு பெரிய குடும்பமாக" வாழ்ந்து வந்திருப்பார்கள்.

காலத்தால் சிறு வேதனைகள் வளர்ந்து மனஸ்தாபம் ஆகி ஒருவரை ஒருவர் பிரிய நேர்ந்தால் இவர்களுக்குள் சொத்து பாகங்கள் பிரிக்கப்படும் பொழுது சிறிதாகிவிடும்.

ஏகமாக இருக்கப்படும் பொழுது சொத்தின் பெருமான அளவு அது அதிகரித்திருக்கும். ஆனால் பிரித்து வரப்படும் பொழுது
1.அவர்கள் உழைப்புக்கொப்பத் தன் பங்காகத் தனக்கு நிறையக் கிடைக்கும் என்று எதிர்பார்த்த நிலையில்
2.அது குறைவாக வரப்படும் பொழுது "என்னை இப்படி மோசம் செய்து விட்டார்களே..." என்று சாப அலைகளை விடுவார்கள்.

நான் ஒன்றி வாழ்ந்தேன்... நம்பி இருந்தேன் என்னை மோசம் செய்து விட்டார்கள்...! என்ற இந்த உணர்வின் சக்தியை வளர்த்து விட்டால் அதற்கப்புறம் ஒவ்வொரு நிமிடமும் அவர்களைக் காணும் போதெல்லாம் வெறுப்பின் தன்மை வரும். "இதுவும் தியானம் தான்..."

அந்த வெறுக்கும் தன்மை வளர்ந்து வளர்ந்து இவரைப் பார்க்கும் பொழுது அவருக்கு வெறுப்பும்... அவரைப் பார்க்கும் பொழுது இவருக்கு வெறுப்பும் இப்படி வந்து விடுகிறது.

அதே சமயத்தில் இவரைச் சார்ந்தவர்கள் இரண்டு பேர் சாட்சியாக வருவார்கள் அதே மாதிரி அவர் பக்கம் ரெண்டு பேர் சாட்சியாக வருவார்கள்.

சார்ந்து பேசினாலும் இவர்கள் இடும் சாப அலைகள் அவருடன் இணைந்த மற்றவர்களுக்கும் இது இணைந்து விடும்.

எனக்கு மோசம் செய்தானே... இவன் எல்லாம் உருப்படுவானா...? அவன் குடும்பம் நன்றாக இருக்குமா...? என்று இப்படிச் சொல்லும் பொழுது இவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் என்ன சொல்வார்கள்...?

நீ இப்படிச் சொல்லலாமா...? நீதான் அப்படி ஆவாய். அவனுக்குச் சாட்சியாக இருந்து அவனைக் கெடுத்தவனே நீ தான்...! என்று
1.நண்பனுக்காக அல்லது இவனைப் போற்றி வளர்க்கும் நிலைகள் சாட்சியாகச் சொல்லப்படும் பொழுது
2.கேட்டறிந்த உணர்வுகள் கடும் சாப வினைகளாக இப்படிச் சிக்கிக் கொள்கின்றார்கள்.

அடிக்கடி இப்படிப் பேசி வித்தாக ஆனபின் என்ன நடக்கிறது...?

ஒரு மரத்தில் விளைந்த வித்தை ஒரு இடத்தில் நாம் ஊன்றினால் அந்த உணர்வின் துணை கொண்டு... காற்றிலிருந்து தன் தாய் மரத்தின் சத்தை நுகர்ந்து அது அதே மரமாக விளைகின்றது.

அது போன்று
1.ஒருவன் சாபம் இட்ட உணர்வுகள் நாம் கேட்டறிந்த பின் அந்த வித்தாக நமக்குள் விளைந்து
2.அந்த வித்து தன் மணத்தை அவரிடமிருந்து வெளிப்பட்ட உணர்வை அதைக் கவரும் பொழுது
3.ஆன்மாவாகச் சேர்த்து நம் உணர்வுடன் சேர்க்கப்படும் பொழுது
4."அந்தச் சாபமிட்ட நிலைகள்" அடுத்து நாம் எந்தக் காரியம் செய்தாலும் அதைத் தடைப்படுத்துவதாக இது வந்து கொண்டேயிருக்கும்.

பாலில் பாதாமைப் போட்டு எவ்வளவு சுவையாக வைத்திருந்தாலும் அதிலே ஒரு மிளகாய் பட்டு விட்டால் அந்தக் காரத்தின் சுவை முன்னணியில் இருந்து அதை ரசிக்க விடாது செய்யும்.

இதைப் போன்று தான் சாபத்தின் நிலைகள்
1.உயர்ந்த குணங்கள் கொண்டு இருந்தாலும்... நல்லதைச் செய்தாலும் நல்ல பெயர் வாங்க முடியாது
2.இவர் என்ன பெரிதாகச் செய்தார்...? என்று எதிர்மறையான கேள்வியைக் கேட்டு விடுவார்கள்.
3.அவர் சொன்ன அந்தச் சொல்லையே நாம் திரும்பத் திரும்ப எண்ணி இதுவே நஞ்சாகி... கடுமையான வினைகளாக நமக்குள் விளைந்து விடும்.

அந்தச் சாப அலையின் தொடர் குடும்பத்தில் பாய்ந்து தாய்மார்கள் கர்ப்பமுற்றார்கள் என்றால்... இத்தகைய உணர்வுகளைக் கேள்விப்பட்டு அதைக் கவர நேர்ந்தால் கருவிலிருக்கும் குழந்தைகளுக்கும் குல வழியில் சாப அலைகள் தொடர்ந்து விடுகிறது.

குழந்தைகள் தவறு செய்யவில்லை என்றாலும் எதிர்காலத்தில் அந்தக் குடும்பத்தில் வளர்ந்த குழந்தைகளுக்குத் தன்னை அறியாமலே சில தவறான நிலைகளும்... பல பல நோய்களும் உருவாகி விடுகின்றது.

ஆக... கருவில் இருக்கும் போது சாபங்களைக் கேட்டு நுகர்ந்தறிந்தால் தான் அது பதிந்து அந்த நிலை வருகின்றது

1.ஒரு குடும்பத்தில் நான்கு குழந்தைகள் இருந்தால் எல்லோருக்கும் அந்த சாப அலைகள் சாடுவதில்லை.
2.சாபமிட்டதைப் பற்றிப் பேசி... சாபமிட்ட குடும்பத்தைப் பற்றிப் பேசி இருந்தால்
2.கருவற்றிருக்கும் குழந்தைகளில் அது வித்தாகி... அதுவே பூர்வ புண்ணியமாக அமைகின்றது.


சாப அலைகள் “குல வழியில்” இப்படித்தான் வருகிறது...!

இவர்கள் தவறு செய்யவில்லை என்றாலும்... சந்தர்ப்பத்தால் எதனை உற்றுக் கேட்டு அதைக் கவர்ந்தனரோ வந்து இவ்வாறு இயக்கிவிடுகிறது.

இதையெல்லாம் துடைப்பதற்காக எத்தனையோ வழிகளை மகா ஞானிகள் கண்டுணர்ந்தார்கள். அதைத்தான் உங்களுக்கு திரும்பத் திரும்ப நினைவுபடுத்தி உபதேசித்துக் கொண்டு வருகின்றோம்.



ஒருவர் சாபமிடுவதைக் கேட்டறிந்த பின் வித்தாக நமக்குள் விளைந்து அந்த வித்து தன் மணத்தை அவரிடமிருந்து வெளிப்பட்ட உணர்வைக் கவரும் பொழுது நம் ஆன்மாவாகச் சேர்க்கப்படும் பொழுது நமக்குள் புகுந்து அந்தச் சாபமிட்ட நிலைகள் அடுத்து நாம் எந்தக் காரியம் செய்தாலும் அதைத் தடைப்படுத்துவதாக இது வந்து கொண்டேயிருக்கும்.



நம் நரம்புகளுக்குள் இயக்கும் ஆசிட் சக்தி

ஒருவன் கொடூரச் செயல்களைச் செய்கிறான் என்றால் நாம் பார்த்து அதைச் சுவாசிக்கும் போது நமக்கும் கோபம் வருகின்றது. இப்படி அதர்மம் செய்கின்றானே... அவனை அயோக்கியன் என்று நம்மைச் சொல்லும்படி வைக்கின்றது.

அவ்வாறு பேசிய உணர்வு நமக்குள் கணங்களுக்கு அதிபதியாகி சுவாசித்த உணர்வுகள் உடலுக்குள் சென்று நம் நல்ல குணங்களை வங்கிட்டு விடுகின்றது.

பல நன்மைகள் செய்திருந்தாலும்
1.நுகர்ந்த உணர்வுகள் கொடூரச் செயலாக நமக்குள் ஊடுருவி ரத்தக் கொதிப்பாக

மாறி
2.சிந்திக்கும் வேளையில் சிறுமூளையின் இயக்கத்தை அது தடைப்படுத்தி
3.நைப்புப் பசையாக இருக்கும் அந்த நரம்பியல்களை அது அழித்து விடுகின்றது.

உதாரணமாக காரத்தை வாயிலே போட்டால் நம் உமிழ் நீர் எப்படிக் காணாது போகின்றதோ இதைப் போன்று கார உணர்ச்சிகள் சிறுமூளையின் இயக்கத்தில் அது தொடருமேயானால் அந்த உணர்வின் நிலையால் நரம்புகளுக்குப் பசை கொடுத்து இயக்கும் நிலையைத் தடைப்படுத்துகிறது.

ஒரு இன்ஜினை ஆயில் கொண்டு இயக்குகின்றார்கள்... மோட்டாரையும் இயக்குகின்றார்கள். நண்டினத்திற்கு நரம்பியல் கிடையாது. தான் எடுத்துக் கொண்ட உணர்வின் இயக்கம் கொண்டு நினைவாற்றல் கொண்டு காலை விரிப்பதும் கையை விரிப்பதும் அது செயல்படுகின்றது. நமக்கோ நரம்புகள் உண்டு... அதற்கு ஓடும் தன்மை தான் உண்டு.

இதைப்போல தன் உணர்வின் ஆற்றல் கொண்டு நண்டிற்குக் கத்திரி போன்று நம் விரலைப் பிடித்தால் விரலையே அது கத்தரித்து விடும் நரம்பு இல்லாதபடி உணர்வின் ஆசிட் துணை கொண்டு நினைவின் ஆற்றலால் அது இயக்குகின்றது..

நமக்குள் எடுத்துக் கோண்ட விஷமான உணர்வுகள் எவ்வாறு செயல்படுகிறது...? நாம் தவறு செய்யாமலேயே இத்தகைய நிலை நமக்குள் உருவாகி விடுகின்றது என்பதை ஞானிகள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

எவரும் தவறு செய்யவில்லை. சந்தர்ப்பத்தில் நுகர்ந்த உணர்வுகள் ரத்தக் கொதிப்பு வரப்படும் பொழுது
1.உணர்வின் வேகம் கொண்டு சிறுமூளையின் இயக்கத்தை அது பாதிக்கப்படும் பொழுது
2.நம் எண்ணத்தின் நிலைகள் கொண்டு செயல்படும் பொழுது எந்த உணர்ச்சியின் தன்மை பட்டதோ
3.அது இருதய வாயிலுக்குச் சென்றால் ஹார்ட் அட்டாக்.
4.அதே சமயத்தில் சுருதியின் வேகம் கொண்டு அடிக்கடி கோபமாகப் பேசும் நிலைகள் அந்த நாதத்தின் நிலைகள் அடுத்து அங்கே பேச்சு வராது.
5.எந்தப் பாகத்தில் இயக்கத்தின் நிலைகள் அதிகமாக இருக்கின்றதோ அங்கே ஆசிட் தடைப்பட்டு
6.அந்தப் பாகத்தில் எதுவுமே செயல்படாதபடி தடைப்படுத்தி விடும்.

அந்த நுண்ணீய அலைகள் தடைப்படுத்தப்படுகிறது...!

அதாவது ஒரு காரில் பிரேக் அணைக்கும் செயலில் அதில் தொடர்பு (கேபிள் வயர்) அறுந்து விட்டால் காரைச் சமப்படுத்த முடியாதபடி கண்ட்ரோல் இழந்து அது இயக்க முடியாது போகிறது.

இதைப்போல தான் நாம் எண்ணிய உணர்வுகள் நம் உடலை இயக்கும் நிலைகள் நரம்பின் மத்தியிலே ஓடும் அந்த ஆசீட். நுண்ணிய அலைகளாக ஊடுருவி அதனை இயக்கும் சக்தி கொண்டது.

தன் உணர்வின் இயக்கம் வரப்படும் பொழுது நுண்ணிய அலைகள் வழியாக இயக்கக் கட்டளைகள் இடப்படும் போது அதிலே தடை ஏற்பட்டால் கை கால் அங்கங்களை முடக்கி விடுகின்றது.

கோபமாகப் பேசியவனை உற்று நோக்கினோம் இந்த உணர்வுகள் வளரப்படும் பொழுது அது பெருகி வளர்ந்து அதன் செயலாக எவ்வாறு வருகின்றது...? என்பதனை ஞானிகள் காட்டியுள்ளார்கள்.

தவறு செய்யாமலேயே... பலருக்கு நன்மை செய்தாலும் நுகர்ந்த உணர்வுகளை நம்மை ஆண்டு கொண்டிருக்கும் ஈசன் இத்தகைய நிலைகளை உடலாக உருவாக்கி விடுகின்றது. அதனின் செயலாக மீண்டும் நம்மை இயக்குகிறான்.

இதிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

ஆறாவது அறிவு கொண்டு வாடிய பயிரை வாடாதிருப்பதற்காக உரங்களை இட்டு அதை வைத்து நல்ல மணிகளை எப்படி உருவாக்குகின்றோமோ இதுபோல்
1.நாம் சந்தர்ப்பத்தால் கேட்டறிந்த வாடிய உணர்வுகளுக்கு அந்த நல்ல உணர்வுகளுக்கு
2.அருள் ஞானிகள் உணர்வை உரமிட்டு தீமைகளை அகற்றிடும் உணர்வாக அதைப் பெற்று
3.அந்த நினைவாற்றல் கொண்டு அதை இயக்கச் சக்தியாகப் படைத்து நமக்குள் நல்ல நிலையை உருவாக்க முடியும்.

பிரம்மாவைச் சிறை பிடித்தான் முருகன்...!



வேதனை என்ற நஞ்சு மிகவும் கடுமையானது

வாழ்க்கையில் நன்மையே நாம் செய்து பழகுகின்றோம். நன்மையின் எல்லையை அடைந்தாலும் மனிதனின் ஆறாவது அறிவு கொண்டு ஈகை இரக்கம் பண்பு பரிவு என்ற நிலையில் பிறர் துயர்படுவதைக் கேட்டறிய நேர்கிறது.

எவ்வளவு பெரிய கொடியவனாக இருப்பினும் ஒரு சமயம் அதைக் கேட்டு அறிந்தால் நுகர்ந்த உணர்வுகள் அவன் பல கொலைகளைச் செய்திருந்தாலும் தன் எதிரிலேயே பாவமான நிலையில் உதவி இல்லாதபடி வேதனைப்படுகிறான் என்றால்

1.கொடிய தவறு செய்தவனும் அவனுடைய ஈகையால் அதை நுகர்ந்த பின் உதவி செய்யும் எண்ணங்களே வருகின்றது.

2.கொடூரம் செய்பவனாக இருப்பினும் அப்பொழுது அதை அவன் எண்ணவில்லை.

கொடூர உணர்வுகள் இவனுக்குள் சேர்ந்தது... கொடூர செயல்களைச் செய்யும் உணர்வுகளே இவன் உடலில் விளைந்தது.

அத்தகைய செயல்களை அவன் செய்து கொண்டிருப்பினும் ஒரு மனிதன் தனக்குள் முடியாத நிலைகளில் வேதனையுடன் துடித்துக் கொண்டிருந்தால் இவனைக் காத்திடும் அந்த இரக்கமான உணர்வுகளை அவன் நுகர்ந்து அறிந்தபின் ஈகையால் அவனுக்கு உதவி செய்யும் எண்ணத்தைத் தான் கொடுக்கும்.

வேதனையால் துடித்துக் கொண்டிருப்பவனைச் செயலற்றவன் என்று உணர்த்தும். இருப்பினும்

1.அவனைச் செயலற்றதாக்கிய அந்த நஞ்சை இவன் சுவாசித்த பின்

2.இவன் உடலுக்குள் வந்து இவனுடைய வலிமையையும் அது குறைக்கின்றது.

எப்படி ஒரு புலி இரக்கமற்ற செயல் கொண்டு மற்ற மிருகங்களைக் கொன்று புசித்தாலும் அது போல இவன் பல பிழைகளைச் செய்தவனும் விஷம் கொண்டோர் உணர்வை உற்று நோக்கி அவன் இரக்கப்பட்டுச் செயல்படும் பொழுது நஞ்சின் தன்மை ஊடுருவி விட்டால் அவன் வலு இழந்து விடுகின்றது.

புலி மற்றதைக் கொன்றாலும் சிறு விஷம் கொண்ட தேள் அந்தப் புலியைக் கொட்டி விட்டால் அது துடித்து அலறும். பாம்பு விஷம் கொண்டதாக இருந்தாலும் அதை ஒரு குச்சியை வைத்து ஒரு அடி அடித்தால் அந்தப் பாம்பு இறந்து விடுகின்றது.

விஷம் கொண்ட தேளின் உணர்வுகள் புலிக்குள் சென்று விட்டால் புலியையும் அது பலவீனப்படுத்துகின்றது.

1.இது போன்றுதான் எத்தகைய வலிமை கொண்டிருந்தாலும்

2.இரக்க உணர்வு கொண்டு பிறர் உணர்வுகளை நாம் உற்று நோக்கப்படும்

பொழுது
3.நம் வலிமையை அந்த நஞ்சு செயலிழக்கச் செய்யும் சக்தி பெற்றது.

மனிதனின் வாழ்க்கையில் கடும் வேதனையையோ ஒரு விபத்தையோ அல்லது ஒரு வேதனைப்படுவோரையோ பார்க்காமல் இருக்க முடியாது. அப்படி நுகர்ந்து விட்டால் அது நம் உடலில் நோயாக மாறுகின்றது.

ஒரு வேதனைப்படும்படியான செய்தியைப் பேசிக் கொண்டிருந்தாலும் அது ஆழப் பதிந்து நமக்குள் அதனால் வேதனை உணர்வுகள் தூண்டித் தூண்டி பலம் இழக்கப்படுகின்றது.

நமக்கும் வேதனை வருகின்றது... நல்ல உணர்வுகள் மறைகிறது. நல்ல சிந்தனைகளைச் சிந்திக்க முடியாது ஆகின்றது... இந்த உடலை அழிக்கின்றது. நல்ல சொல் வராதபடி உருவாகின்றது.

இது போன்ற தீமைகளிலிருந்து நாம் விடுபட வேண்டும். எவரும் தவறு செய்யவில்லை. சந்தர்ப்பத்தால் நுகர்ந்த உணர்வுகள் மூஷிகவாகனா... அது கணங்களுக்கு அதிபதியாகின்றது.

நல்ல குணங்கள் கொண்டு நாம் இருப்பினும் வேதனைப்படுவோரின் உணர்வைச் சுவாசித்தால் இந்தக் குணங்கள் நம் நல்ல குணங்களை அடிமையாக்கி அது அதிபதியாக மாறி நம்மை வேதனைப்படும்படியாக உருவாக்கி விடுகின்றது.

இப்படி... சந்தர்ப்பத்தில் நாம் நுகரும் உணர்வுகள் தீமைகளை எவ்வாறு விளைவிக்கின்றது...? என்பதனை தெளிவாகக் காட்டி உள்ளார்கள் ஞானிகள். இதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்
பல கோடிச் சரீரங்களில் புழுவிலிருந்து மனிதனாக வளர்ச்சி பெற்று வந்த நிலையில் மீண்டும் இன்னொரு உடல் பெறும் நிலையை வங்கிட்டு... அதை மறைத்து விட்டு... ஒளியின் சிகரமாக இன்றும் வாழ்ந்து வளர்ந்து கொண்டிருக்கும் அந்த மகரிஷிகளின் அருள் சக்தியை நாம் பெறப் பழகிக் கொள்ள வேண்டும்.

அந்த மகரிஷிகளின் உணர்வை நுகர்ந்து இந்த மனித வாழ்க்கையில் வரும் தீமைகளைச் செயலற்றதாக மாற்றி... அழியா ஒளி நிலை பெற நமக்கு வழிகாட்டுவது தான் “விநாயகர் தத்துவம்...”

அதற்காகத் தான் இந்தப் பிள்ளையார்...? என்று கேள்விக்குறி இட்டு நம்மைச் சிந்திக்கும்படி வைத்தார்கள் அன்றைய ஞானிகள்.

உயர்ந்த ஒளியின் உணர்வாகத் தனக்குள் அரசாட்சி புரிந்து வருவது... அனைத்தையும் மாற்றி விண்ணுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த ஞானிகள் உணர்வை நாம் எடுத்தோம் என்றால் “அவனுடன் ஒன்றிய அவனாக” நாம் மாறுகின்றோம்.

1.நாம் எண்ணிய உணர்வுகள் அனைத்தும் “நான்” என்றாலும் தனித்த நிலைகள் கொண்டு உயிரே இயக்குகின்றது
2.அதிலே நாம் எண்ணிய உணர்வுகள் எது எதுவோ... அதனுடன் இணைந்து செயல்படும் பொழுது தானாகின்றது.
3.ஆனாலும் உயிருடன் ஒன்றிய உணர்வுகள் அனைத்தும் ஒளியாக மாறும் பொழுது அனைத்தும் நானாகின்றது
4.அது தான் “நான் தானாகி – தான் நானாகின்றது.

உயிர் ஒளியின் தன்மையாக இருந்தாலும்... நுகரும் உணர்வுகள் தனக்குள் அடர்த்தியாகி மறைத்தாலும்
1.”தான் என்ற இரு நிலைகள் கொண்டு இயங்குவதே”
2.பின் உணர்வின் ஒளியாக மாறிய பின் – மீண்டும் “ஒளி சிகரமாக மாறிய பின் நானாகின்றது...”

நான் தானாகி... தான் நானாகின்றது. சொல்வது அர்த்தமாகிறதல்லவா...!

ஆகவே இந்தப் பிள்ளை யார்...? என்று நினைவுபடுத்தி நாம் இந்த மனித வாழ்க்கையில் ஆறாவது அறிவின் தன்மையைச் சீராகப் பயன்படுத்தி விண் செல்ல வேண்டும் என்பதை ஞானிகள் காட்டினார்கள்.

ஆறாவது அறிவைச் சீராகப் பயன்படுத்தியவர்கள் ஏழாவதாக ஒளி என்ற நிலை அடைந்து என்றும் பதினாறாக விண்ணில் வாழ்ந்து வளர்ந்து கொண்டுள்ளார்கள்.

இந்தப் பிரபஞ்சத்தில் நஞ்சை அடக்கும் சக்தி பெற்ற சூரியனோ அது கொதிகலனாகும் போது நஞ்சினைப் பிரித்தாலும்
1.அதிலிருந்து வெளிப்படும் காந்தப் புலனறிவுகள் அதே நஞ்சினைக் கவர்ந்து ஓர் இயக்கச் சக்தியின் நிலையாகப் படர்கின்றது.
2.இருப்பினும் இந்தச் சூரியன் அது அழிந்திடும் நிலை தான்.

ஆனால் அதனின்று விளைய வைத்த உயிரின் ஒளி நிலைகள் தான் கவர்ந்த உணர்வை ஒளியாக மாற்றி விட்டால் பின் எதிலுமே அது வேகுவதில்லை.
1.அத்தகைய வேகா நிலை பெற்றது தான் துருவ நட்சத்திரமும் சப்தரிஷி மண்டலங்களும்
2.அந்த நிலையை நாமும் அடைதல் வேண்டும்.



ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

அருள் சக்திகளைப் பெற வேண்டும் என்று ஏங்கி வந்தால் தான் யாம் கொடுக்கக்கூடிய வாக்குகள் உங்களுக்குள் நல்ல முறையில் வேலை செய்யும்.

காரணம்...
1.மகரிஷிகளின் அருள் சக்திகளைப் பெற வேண்டும் என்று பல்லாயிரக்கணக்கானோர் உணர்வுகளைத் தூண்டி
2.அந்த ஏக்க உணர்வுகளின் அடிப்படையில் தான் பதிவு செய்கின்றேன்.

அதே சமயத்தில் எப்போதுமே அன்னை தந்தையரை வணங்கிப் பழகுங்கள். அவர்களுடைய அருளாசியால் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்று எண்ண வேண்டும். இது மிகவும் முக்கியம்.

யாம் கொடுக்கும் இந்த உபதேச வாக்குகளைச் சீராக உற்று நோக்கி அதைப் பதிவு செய்தால் ஞான வித்தாக வளர்ந்து
1.நீங்கள் எண்ணும் பொழுதெல்லாம் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி கிடைக்கும்.
2.ஆத்ம சக்தி செய்யும் போது அந்த நேரத்தில் உடனுக்குடன் சிரமங்களைப் போக்க அது வழிகாட்டும்

ஆக... நீங்கள் எண்ணியதை உங்கள் உயிர் இயக்கிக் காட்டும். உணர்வுகள் உடலைத் தனக்குள் அணைத்துக் காட்டும். எண்ணிய உணர்வின் ஞானமாக உணர்த்தும்.

அதன் வழியில் உங்களைக் காத்திடும் உணர்வுகள் உங்களுக்குள் வரும். அந்த ஞானத்தின் தன்மை கொண்டு தீமைகளிலே சிக்காது உங்கள் எண்ணம் உங்களைக் காக்கும்.

ஆகையினால் யாம் உபதேசிக்கும் பொழுது கூர்ந்து கவனித்து இந்த வாக்குகள் பதிவாக்க வேண்டும் என்று அந்த எண்ணத்துடன் இருங்கள்.
1.எந்த நல்லது பெற வேண்டும் என்று ஏக்கத்துடன் வந்தீர்களோ
2.நல்ல முறையில் உங்களுக்கு அந்தப் பலன் கிடைக்கும்.

மகரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற்று எங்கள் உடலில் அறியாது வந்த நோய்கள் நீங்க வேண்டும் எங்கள் உடல்கள் நலம் பெற வேண்டும்... எங்கள் குடும்பங்கள் நலம் பெற வேண்டும் உலக மக்கள் நலம் பெற வேண்டும் என்று ஏங்கித் தியானியுங்கள்.

“மாமகரிஷி ஈஸ்வராய குருதேவரின் அருள் உங்களுக்குப் பரிபூரணமாக இப்பொழுது கிடைக்கும்...”

1.மகரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும்
2.மகரிஷிகளின் அருள் சக்தி எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும்
3.மகரிஷிகளின் அருள் சக்தியால் எங்கள் உடல் நலம் பெற வேண்டும்
4.மகரிஷிகளின் அருள் சக்தியால் எங்கள் தொழில் வளம் பெற வேண்டும்
5.மகரிஷிகளின் அருள் சக்தியால் எங்கள் குடும்பங்கள் நலம் பெற வேண்டும்
6.மகரிஷிகளின் அருள் சக்தியால் உலக மக்கள் நலம் பெற வேண்டும்
7.மகரிஷிகளின் அருள் சக்தியால் எங்கள் வாடிக்கையாளர் அனைவரும் நலம் பெற வேண்டும்
8.மகரிஷிகளின் அருள் சக்தியால் நான் பார்ப்பதெல்லாம் நலமும் வளமும் பெற வேண்டும்
9.மகரிஷிகளின் அருள் சக்தியால் என்னைப் பார்ப்போர் எல்லாம் நலம் பெற வேண்டும்
10.மகரிஷிகளின் அருள் சக்தியால் அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ந்து வாழ வேண்டும்
11.மகரிஷிகளின் அருள் சக்தியால் என் சொல்லிலே இனிமை பெற்று என் சொல்லைக் கேட்போர் வாழ்க்கையில் நலமும் வளமும் பெற வேண்டும்
12.மகரிஷிகளின் அருள் சக்தியால் என்னைப் பார்ப்போருக்கெல்லாம் நல்ல எண்ணம் வரவேண்டும் ஈஸ்வரா என்று ஏங்குங்கள்
13.பல உயர்ந்த உணர்வுகள் உங்களுக்குக் கிடைக்கும்
14.உங்கள் உடலை எத்தகைய பிணிகள் இருந்தாலும் நீங்கும்... வலியோ வேதனையோ இருந்தால் குறையும்
15.தீமைகள் உங்களை விட்டு அகலும்... உங்கள் உணர்வுகளால் அறிய முடியும்.


ஆகவே யாம் கொடுக்கும் இந்த (மகரிஷிகள்) அருள் வாக்குகளை எல்லாம் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அதை நினைவு கொண்டால் நீங்கள் ஏங்கும் போதெல்லாம் அந்தச் சக்தி கிடைக்கும்.

ஒரு நாளைக்கு ஆயிரம் முறை நீங்கள் சொல்லிப் பாருங்கள். மகரிஷிகளின் அருள் சக்தி என் உடலில் இருக்கக்கூடிய ஜீவான்மா ஜீவணுக்கள் பெற வேண்டும் இப்படி சொல்லிக் கொண்டே இருங்கள்

பாலோ தண்ணீரோ அல்லது பதார்த்தங்களையோ வைத்து இவ்வாறு ஜெபித்து அதற்கு அப்புறம் அதை எடுத்து உட்கொண்டு வாருங்கள். நல் மருந்தாக அமையும் அரும் பெரும் சக்தியாக உங்களுக்குள் வரும்.

எமது அருளும் குரு அருளும் உங்களுக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருக்கும்.





தாய் தந்தை பாட்டன் பாட்டியை நாம் நேசிக்க வேண்டிய முறை

நம் அன்னை தந்தையர் நம்மை வளர்த்திட நம்மைக் காத்திட எத்தனையோ வேதனைகளையும் எத்தனையோ இன்னல்களையும் பட்டுத்தான் வளர்த்தார்கள்.

அந்த வேதனைகள் அவர்களுக்குள் நஞ்சாக வளர்ந்து நோயாக விளைந்து நோயால் துடித்துக் கொண்டிருக்கும் அந்த ஆன்மாவை அவருக்காக வேண்டி நாம் கடவுளை வேண்ட வேண்டும்.

ஏனென்றால் அவர்களுடைய சரீரத்தைப் பெற்றவர்கள் நாம். நம்மை நாம் காத்தாலும் அவர்களுக்கு அந்த அருள் சக்தி கிடைக்க வேண்டும் என்ற ஏக்கத்தை நாம் எண்ணினால் நாம் எடுக்கும் இந்த உணர்வின் ஆற்றல் அவர்களுக்கும் கிடைக்கப் பெறும்.

1.அவர்கள் நம்மைக் காத்த நினைவும் நமக்குள் வருகின்றது.
2.அவர்கள் நம்மைக் காத்த உணர்வு நமக்குள் விளைகின்றது.
3.அந்த இனத்தை நமக்குள் இணைப்பதற்காகத் தான் விநாயகர் தத்துவத்தில்
4.அன்னை தந்தையரை நீ எப்படி நேசிப்பது...? என்று தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள்.

என்னைக் காத்தருளிய தெய்வமான தாய் தந்தையருக்கு அந்த மகரிஷிகளின் அருள் சக்தி கிடைக்க வேண்டும். என்னைக் காத்திட்ட நேரத்தில் அவர்கள் நுகர்ந்த நஞ்சுகள் அகல வேண்டும்.

என்றென்றும் என்னை மகிழ்வித்த அந்த உணர்வுகள் என் தாய் தந்தையர் உடலில் விளைய வேண்டும். அவர்கள் அருளாசி என்றென்றும் எனக்குள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

அவர் காட்டிய அருள் நெறிப்படி மகரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும். வலு கொண்டு தீமைகளை அகற்றித் தீமையற்ற நிலைகள் எனக்குள் வளரும் அந்தச் சக்தி நாங்கள் பெற வேண்டும் தாயே...! ஈஸ்வரா...! என்ற தாய் தந்தையரை வேண்டி இவ்வாறு வணங்க வேண்டும்.

வணங்கிய பின் அடுத்து நாம் செய்ய வேண்டியது என்ன...?

நம்முடைய தாய் தந்தையரின் மூதாதையர்கள் தாத்தா பாட்டன் பாட்டியரின் குல வழி தான் நாம் வந்துள்ளோம்.
1.அவர்கள் முதலிலே மனிதனாகப் பிறந்தார்கள்.
2.நம் தாய் தந்தையரை மனிதர் ஆக்கினார்கள்
3.பின் நம்மை நம் தாய் தந்தையர் மனிதனாக்கினார்கள்
4.அந்தக் குல வழியில் தான் நாம் மனிதனாக ரூபம் பெற்றோம் என்ற இந்த

நினைவினைக் கொண்டு வந்து
5.ஒளியாக அறிவித்த அவர்கள்... நம்மைக் காத்திட்ட அந்த உள்ளங்கள் நம் தாய் தந்தையைக் காத்திட்டவர்கள்
6.அதற்காக வேண்டி எத்தனையோ வேதனைப்பட்டவர்கள்
7.நஞ்சு கொண்ட இன்னொரு இழிநிலையான சரீரம் பெறாது அருள் ஞானிகள் உணர்வுகளுடன் ஒன்றி
8.அவர்கள் இன்னொரு உடல் பெறும் உணர்வுகளை அங்கே நாம் கரைத்திடல் வேண்டும்.

ஞானிகள் காட்டிய வழிப்படி நம் குலதெய்வங்களின் உயிரான்மாக்கள் அந்தச் சப்தரிஷி மண்டலத்தின் ஒளி அலைகளில் கலந்து நஞ்சு கொண்ட உடல் பெறும் உணர்வுகள் கரைந்து உயிருடன் ஒன்றிய ஒளியின் சரீரமாக நிலை கொண்டு என்றும் பிறவா நிலை என்னும் பெரு வீடு பெரு நிலை அடைந்து அழியா ஒளிச் சரீரம் பெற வேண்டும் என்று ஞானிகள் எங்கே சென்றார்களோ அதை நமக்குள் பதிவு செய்து விண்ணை நோக்கி ஏகி அவர்களை விண் செலுத்த வேண்டும்.

அவ்வாறு விண் செலுத்தி அவர்கள் முன் சென்றால் அவர்கள் உடலில் உருப்பெற்ற நஞ்சு எப்படி அங்கே கரைந்ததோ அந்தச் சப்தரிஷி மண்டலத்துடன் அவர்களை இணைத்து அந்த சப்தரிஷி மண்டலங்களின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும் என்று நாம் எண்ணினால்
1.சப்தரிஷி மண்டலத்துடன் இணைந்து தீமையை அகற்றிய உணர்வுகள்
2.அங்கே அவரால் ஏற்படுத்தப்பட்ட அவரில் விளைந்த உணர்வுகள் நமக்குள்ளும் பதிவாகின்றது.

அவரின் உணர்வின் தன்மை கொண்டு நாம் எளிதில் அந்தச் சப்தரிஷிகளின் அருள் சக்திகளைப் பெற்று நமது வாழ்க்கையில் வந்த தீமைகளைத் தூய்மைப்படுத்த மூதாதையர்கள் உணர்வு நமக்கு உதவும்.

அவர்கள் நம் நல்ல செயல்களைப் பற்றி என்றுமே போற்றியவர்கள். நம்முடைய முன்னோர்களின் அந்த நல்ல உணர்வை நாம் போற்றினாலும் நமது வாழ்க்கையில் நம்மைக் காக்க... அறியாது நாம் தவறு செய்தாலும் அதற்காக அவர்கள் வேதனைப்பட்டிருப்பார்கள்.

அது அவர்கள் உடலில் நோயாக விளைந்தது... “இதற்காகவாவது...” நம்மைக் காத்திட்ட எங்கள் குலதெய்வங்களான அந்த உயிரான்மாக்கள் சப்தரிஷி மண்டலத்துடன் இணைந்து பிறவா நிலை என்ற பெரு நிலை அடைந்து

உயிருடன் ஒன்றிய நிலையாக என்றும் அழியா ஒளிச் சரீரம் பெற வேண்டும் என்று நாம் அனைவரும் சேர்ந்து “முதலில்” அங்கே உந்தித் தள்ள வேண்டும்.

இது தான் விநாயகர் தத்துவம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

உந்து விசை கொண்டு புவியின் ஈர்ப்பைக் கடந்து இராக்கெட்டை விண்ணிலே செலுத்துகின்றனர். புவியில் விளைந்த எரிபொருளின் துணை கொண்டு அதை இயந்திரத்தில் அடக்கி அழுத்தத்தால் உந்தி விண்வெளியில் வீசுகின்றனர்.

இராக்கெட்டை விண்ணிலே பறக்கும்படி செய்து. விண்ணிலிருக்கும் பல நிலைகளை எளிதில் கவர்ந்து அதை அறிகின்றனர். உடல் வாழ்க்கைக்காக (சுகத்திற்காக) விஞ்ஞானிகள் இதைச் செய்கின்றார்கள்.

மெய் ஞானிகளோ விண்ணின் ஆற்றலைத் தனக்குள் பெருக்கி அதனின் வலு கொண்டு உயிருடன் ஒன்றிய ஒளியின் சரீரம் ஆனார்கள்
1.ஆதியில் அகஸ்தியன் இந்த உண்மைகளைக் கண்டுணர்ந்தாலும் தன் அருகில் உள்ள சீடர்களுக்கு இதனை உபதேசித்தருளி
2.அதனின் நினைவு கொண்டு உடலை விட்டு அகலும் போது “உந்து விசையால்... என்னை உந்தித் தள்ளுங்கள்...!” என்றான்
3.முதல் முதலிலே அகஸ்தியன் அவ்வாறு விண்ணுலகம் சென்றான்.
4.அவனைப் பின்பற்றிச் சென்றவர்கள் விண்ணுலகில் ஏழாவது அறிவாக அவரின் ஈர்ப்பு வட்டத்தில் சப்தரிஷி மண்டலமாக விளைந்தார்கள்.

அக்காலங்களில் எழுத்தறிவு இல்லாததால் “உடலில் விளைய வைத்த உணர்வின் தன்மை கொண்டு பிறருக்குள் பதிவு செய்து...” அந்தப் பதிவின் நினைவின் ஆற்றலால் அவர்கள் வாழ்க்கையை இயக்கி... அவ்வாறு ஆரம்ப நிலையில் வளர்ந்தவர்கள் இன்றும் சப்தரிஷி மண்டலங்களாக வாழ்ந்து கொண்டுள்ளார்கள்.

பிற்காலங்களில் மனிதனின் அறிவின் ஞானம் வளர... மனிதனின் உடலுக்கு இச்சைகள் சேர... இதுவே சொர்க்கம் என்ற நிலையில் அரசர்கள் சென்று விட்டார்கள்.

அரசனும் சரி... அவன் காட்டிய வழியில் சிக்கியவர்களும் சரி... அனைவரும் விண் செல்லாது அவர்கள் எடுத்துக் கொண்ட ஆசையின் உணர்வுகள் பேயாகச்

சுழன்று... பேயின் உணர்வு கொண்டு தாக்கும் நிலைகளும்... பின் மிருக நிலைகளுக்கே சென்றனர். அரசன் வழியில் தான் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.


அதை எல்லாம் மாற்ற வேண்டும் என்பதற்காகத் தான் ஞானிகள் காட்டிய அருள் வழியினை உங்களுக்கு உபதேசித்து வருகின்றோம் (ஞானகுரு).
1.அருள் வழியில் உங்கள் உணர்வுகளை உந்தச் செய்து... உணர்ச்சிகளைச் தூண்டும்படி செய்து
2.அந்த மகரிஷிகளின் ஆற்றலை நினைவு கொண்டு உங்களைத் தியானிக்கும்படி சொல்கிறோம்.

ஆகவே வேகா நிலை பெற்ற அந்த அருள் மகரிஷிகளின் உணர்வினை நமக்குள் வினையாகச் சேர்த்து அதை நாயகனாக ஆக்க வேண்டும்.

வாழ்க்கையில் எப்போதெல்லாம் தீமைகள் நம்மைச் சாடுகின்றதோ அத்தருணத்தில் "ஈஸ்வரா..." என்று அந்த மகரிஷிகளை எண்ணி அந்தச் சக்திகளை நாங்கள் பெற வேண்டும் எங்கள் உடல் முழுவதும் அது படர வேண்டும் என்று உள் செலுத்தி நாம் கேட்டறிந்த தீமைகளைத் துடைத்துப் பழக வேண்டும்.

அதே சமயத்தில் தீமை செய்தவர்களுக்கும்... அதிலிருந்து அவரை மீட்டிட மகரிஷிகளின் அருள் சக்தி கிடைக்க வேண்டும் என்ற உணர்வுகளை நாம் பாய்ச்ச வேண்டும்.

இது தான் அன்றைய மகரிஷிகள் செய்த நிலைகள். அதனை நீங்கள் அனைவரும் பற்றிட முடியும் சாதாரண மக்களும் விண்ணின் ஆற்றலைப் பெரும் வண்ணம் தான் எளிதாகக் கொடுத்துள்ளார்கள் நமது தத்துவ ஞானிகள்.



முதல் முதலிலே அகஸ்தியன் விண்ணுலகம் சென்றான். அவனைப் பின்பற்றிச் சென்றவர்கள் விண்ணுலகில் ஏழாவது அறிவாக அவரின் ஈர்ப்பு வட்டத்தில் சப்தரிஷி மண்டலமாக விளைந்தார்கள்.



நாம் அடைய வேண்டிய பரிணாம வளர்ச்சியின் சூட்சமம்

பல கோடிச் சரீரங்களில் தன்னைக் காத்திடும் உணர்வுகளை வளர்த்து வளர்த்துத் தான் மனிதனாக வந்திருக்கின்றோம்.

உதாரணமாக ஒரு குளவி தனக்குள் ஊரும் உமிழ் நீரைக் கொண்டு தன் இனத்தைப் பெருக்க .அதற்கென்று ஒரு கூட்டினை... ஒரு கருவறையைத் தேர்ந்தெடுக்கின்றது.

விஷத்தன்மை கொண்ட மண்ணினைப் பிசைந்து வாயில் எடுத்து வந்து கூடுகள் அமைக்கின்றது. நஞ்சு கலந்த உமிழ் நீரை அதற்குள் இணைக்கின்றது.

பின் பறந்து சென்று தன் இனம் அல்லாத புழுக்களை தன் நஞ்சின் தன்மை கொண்டு கொட்டி அதனை வலுவிழக்கச் செய்து தன் உணர்வை அதற்குள் பாய்ச்சி அதைத் தூக்கி வந்து கூட்டுக்குள் இணைக்கின்றது.

1.இந்த விஷத்தன்மை புழுவின் உடலில் முழுமையாகப் படர்ந்து அது சருகு போல ஆகின்றது.
2.அதற்குள் இருக்கும் ஊணின் நிலைகளும் அது கலைந்து வர உடலை அமைத்த உணர்வுகள் அணுக்களாக மாற்றப்பட்டு
3.உயிரின் தன்மை கொண்டு இது எவ்வாறு என்ற நிலையை அதனை நினைவில் ஊட்டச் செய்து
4.புழுவைக் கூட்டிற்குள் தள்ளி மண்ணை வைத்து அதை அடைத்து விடுகின்றது.

தன் உடலில் எதைப் பெற்றதோ இதன் உணர்வைப் பதிவு செய்த பின் தன் சிறகால் அதிர்வின் தன்மை கொடுத்து புழுவின் உயிர் மடிந்து விடாது அதிர்வின் தன்மை கொண்டு இயக்கி இந்த உணர்வின் நினைவு கொண்டு அதிலே அணுக்கள் விளைந்து அதனின் தொடர் கொண்டு அது ஜீவிக்கும் நிலை வருகின்றது.

அதற்கு ஜீவன் ஊட்டிக் கொண்டேயிருப்பதற்காகக் குளவி இரைச்சல் கொடுத்து அதைக் காக்கின்றது.

கோழி தான் இட்ட முட்டைகளை அடைகாக்கின்றது. தன்னுடைய உடலின் வெப்பத்தால் அதற்குள் இருக்கும் ஜீவ அணுவைத் துடிக்கச் செய்து அதனின் கருவாக விளையும் வரையிலும் அதை அடை காக்கின்றது.

மூன்று நாட்கள் ஆனாலும் நான்கு நாட்கள் ஆனாலும் அடை காத்து
1.அதற்குள் இருக்கும் அணுக்களின் தன்மை அதனை நுகர்ந்து வரும் பொழுது
2.வெப்பத்தின் தன்மை கொண்டு தன் உணர்வலையைப் பாய்ச்சி அதன் தன்மை கொண்டு அது கோழிக் குஞ்சாக உருவாக்குவது போல

3.குளவி தான் கட்டிய கூட்டின் மேல் ரீங்காரமிட்டு அதனின் நாதங்களை எழுப்புகின்றது.
4.அந்த அதிர்வினைப் புழுவின் உடலில் இருக்கும் காந்தப்புலன் இழுத்துக் கவர்கிறது.

எந்த உமிழ் நீரின் தன்மை கொண்டு கூட்டினைக் குளவி அமைத்ததோ சூரியனின் காந்த சக்தி அதன் மீது படர்ந்தாலும் தாயினம் இடும் மூச்சலையை இதன் வழி நுகர்ந்து அதனின் உணர்வின் துணையால் அதனின் கருவின் நினைவாக குளவியாக அது உருப் பெறுகின்றது.

இதைப் போன்று தான் மனிதன் தனக்கென்று வீடு கட்ட வேண்டும் என்றாலும் ஒவ்வொன்றிலும் இது வளர்க்கப்பட்டு தான் ஒவ்வொரு இணைப்பிலும் தனக்குப் பாதுகாப்பாக இதைச் செயல்படுத்துகின்றான்.

தன்னைக் காத்திடும் உணர்வாக ஒவ்வொரு சரீரத்திலும் ஒவ்வொரு நிலைகள் கொண்டு எடுத்து அதனதன் குணங்களுக்கு அதனதன் உணர்வின் தன்மை கொண்டு தான் விளைந்து சர்வத்தையும் அறிந்திடும் நிலையும் சர்வத்தையும் இயக்கிடும் நிலைகள் கொண்டும் சர்வத்தையும் உருவாக்கும் நிலை கொண்டு உயிரின் நிலைகள் கொண்டு
1.உணர்வுகள் அழிந்தாலும் அதிலே ஒவ்வொரு உணர்வையும் இயக்கி அதை ஒளியாக மாற்றி
2.உயிருடன் ஒன்றித் தன்னுடன் இணைந்து ஒளியின் சரீரமாக மாற்றிடும் இந்த உண்மையினை அறிந்தவன் தான் “மகரிஷி...”

அந்த மகரிஷிகளின் அருள் சக்தியை நாம் நுகர்ந்தால் அவனைப் போல் ஆக முடியும். அவ்வாறு அவன் அடைந்த நிலையை நாம் அடைவதற்கே இந்த உபதேசம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

மனிதனின் வாழ்க்கையில் நாம் உணவாக உட்கொள்ளும் அதற்குள் மறைந்து வரும் நஞ்சினை ஆறாவது அறிவு பெற்ற இந்த மனித உடல் மலமாக மாற்றி விடுகின்றது.

ஆறாவது அறிவின் தன்மையால் “இயக்கும் சக்தி” நமக்குக் கிடைக்கின்றது. அதாவது நஞ்சு கொண்ட உணர்வினை நீக்கித் தெளிந்த உணர்வு கொண்டு

விளைந்திட்ட அந்த ஆறாவது அறிவின் துணை கொண்டு இந்த வாழ்க்கையில் சந்திக்கும் தீமைகளை அகற்ற வேண்டும்.

அதை அகற்றவில்லை என்றால் நஞ்சு கலந்து... பின் சிந்திக்கும் திறன் இழந்து விடுகின்றது.

உடலில் அழுக்குப் பட்டால் குளிக்கின்றோம். வேலை செய்யும் போது கையில் அழுக்குப் பட்டால் சுத்தப்படுத்தி அதற்குப் பின் உணவை உட்கொள்கிறோம்.

நாம் அணியும் ஆடைகளில் அழுக்கு அதிகரித்து விட்டால் சோப்பைப் போட்டு நுரையேற்றித் துணியுடன் இரண்டறக் கலந்த அழுக்கினைப் போக்குகின்றோம். மனிதனின் ஆறாவது அறிவினுடைய செயல்கள் தான் இது எல்லாம்.

ஆனால் ஆறாவது அறிவை ஞானிகள் எப்படிப் பயன்படுத்தினார்கள்...?

1.அன்றைய மகரிஷிகள் தன் வாழ்க்கையில் வந்த தீமைகளை அகற்றி
2."சக்தி வாய்ந்த உணர்வைத் தனக்குள் நுகர்ந்து"
3.தன்னை அறியாது புகுந்த உணர்வினை ஆறாவது அறிவால் நீக்கி
4.தன் எண்ணத்தைத் தெளிவாக்கித் தெளிந்த உணர்வு கொண்டு வாழ்க்கை வாழ்ந்து
5.அருள் ஒளியின் சொத்தாகத் தன் உயிருடன் ஒன்றி விண்ணுலகில் வாழ்ந்து கொண்டுள்ளார்கள்.

அவரில் விளைந்த உணர்வின் சத்தைச் சூரியனின் காந்த சக்தி கவர்ந்து நமது காற்று மண்டலத்தில்... அதாவது பூமிக்குள் பரமாத்மாவிலே கலந்துள்ளது.

இதைப்போல மற்ற தாவரங்கள் உமிழ்த்தும் "அதனதன் உணர்வும்... அதனதன் மணமும்... அதனதன் குணமும்..." வெளிப்பட்டு வருவதை இதே சூரியனுடைய காந்த சக்தி கவர்ந்து பரமாத்மாவிலே சுழன்று கொண்டு தான் உள்ளது.

மனிதருக்குள் எத்தகைய நோய்களாக விளைந்ததோ அவர்களிடமிருந்து வெளிப்பட்ட நோயின் உணர்வுகள் அனைத்தும் இந்தப் பரமாத்மாவில் கலந்துள்ளது.

பரிணாம வளர்ச்சியில் மனிதனாக ஆவதற்கு முன் நாம் உயிரினங்களாக வாழும் பொழுது

1.அந்தந்தச் சரீரத்தில் தன்னைக் காத்திடும் உணர்வு கொண்டு விளைந்த உணர்வுகள் இதே பரமாத்மாவில் தான் உண்டு.
2.ஒவ்வொரு சரீரத்திலும் காத்திடும் உணர்வை ஊழ்வினையாகப் பதிவு செய்து அந்த வித்தின் தன்மையாக
3.அந்தந்த உடலிலே காத்திட்ட உணர்வுகளும் இந்தப் பரமாத்மாவிலே கலந்துள்ளது.

இவ்வாறு “எத்தனை சரீரங்களில் நம்மைக் காத்திடும் உணர்வாக எடுத்துக் கொண்டோமோ” அது அனைத்தும் நமக்குள் வித்தாக இருப்பினும்
1.அதில் விளைந்த உணர்வுகள் அலைகளாகப் படர்ந்து இந்த பூமியிலே பரமாத்மாவிலே படர்ந்துள்ளது.
2.அத்தகைய நல் உணர்வுகளைக் கவர்ந்து நமக்குள் வளர்த்திடும் நிலையாக வர வேண்டும்.

ஆகவே குருநாதர் காட்டிய அருள் வழியில் இந்த உடலுக்குப் பின் பிறவியில்லா நிலை அடைய வேண்டும் என்ற நிலையை உணர்ந்து... நம்மை அறியாது மூடி மறைக்கும் தீமைகளை ஆறாவது அறிவு கொண்டு நீக்கப் பழகிக் கொள்ள வேண்டும். உயிருடன் ஒன்றும் உணர்வுகளை ஒளியாக மாற்றப் பழகிடல் வேண்டும்.



“எத்தனையோ சரீரங்களில் நம்மைக் காத்திடும் சக்திகளை நாம் எடுத்துக் கொண்டோமோ” அது அனைத்தும் நமக்குள் வித்தாக இருப்பினும் அதில் விளைந்த உணர்வுகள் அலைகளாகப் படர்ந்து இந்த பூமியிலே பரமாத்மாவிலே படர்ந்துள்ளது. அத்தகைய நல் உணர்வுகளைக் கவர்ந்து நமக்குள் வளர்த்திடும் நிலையாக வர வேண்டும்.



“உயிருக்கு வலுவைச் சேர்க்க” மகரிஷிகளின் சக்தியை எடுத்தே ஆக வேண்டும்

நாம் நல்லவைகள் ஆயிரம் செய்தாலும் அதற்குள் நஞ்சு கலந்துவிட்டால் அந்த நல்லது அனைத்தையுமே அது அடிமையாக்கி விடுகின்றது.

ஆனால், நஞ்சினை வென்ற அருள் ஞானிகளின் உணர்வை நமக்குள் எடுத்துக் கொண்டால் அந்த நஞ்சினை ஒடுக்கி உணர்வின் தன்மை ஒளியாக்க முடியும்.

1.நாம் உயிருக்குள் இருக்கும் நஞ்சின் துடிப்பே – உயிரின் இயக்கம்.
2.நஞ்சு அதிகரித்து விட்டால் துடிப்பின் இயக்கம் குறைவாகிவிடும்.

தேவாங்கு என்ற உயிரினத்தை நீங்கள் பார்க்கலாம். அதிலே நஞ்சின் இயக்கத் துடிப்பு குறைவு. உணர்ச்சியின் தன்மை வேகத்தைக் குறைத்த நிலைகள் வரப்படும் போது அதனுடைய “இயக்கச் சக்தி” குறைவாகின்றது.

உடலில் நல்ல தசைகளாக இருப்பினும் எவருக்கும் தீங்கு செய்யாத நிலையில் உடல் அமைப்பு கொண்டுள்ளது. உயிரின் துடிப்பு குறைவாக உள்ளதால் தன்னைத்தானே தான் காத்திடும் நிலை இழந்த நிலைகள் கொண்டுள்ளது.

1.உயிர் மற்றொன்றைத் தாக்கி அதன் உணர்வின் தன்மை கொண்டு
2.கடுமை கொண்ட உணர்வின் தன்மை எடுக்கப்படும்போது தான்
3.இதன் உணர்வின் இயக்கமாக அது வளர்ந்து
4.அதற்குள் மற்றது அந்த உயிரின் வலுவையே பெற முடியும்.

ஒவ்வொரு உயிரனத்திற்கு அதற்கென்ற (உடல் அமைப்பு) தசைகள் கொண்டுள்ளது. பல்வேறு விதமான தசைகள் கொண்ட அத்தகைய உயிரினங்களின் உயிரில் உள்ள விஷத்தன்மை குறைந்து விட்டால் என்ன ஆகின்றது?

1.விஷத் தன்மை குறைந்தால்
2.உயிரின் துடிப்பு வேகம் குறைந்து
3,எடுத்துக் கொண்ட உணர்வின் தன்மை சீராக இயக்காது அந்த உணர்வின் தன்மை மறைந்துவிடும்.
4.அதனின் வலுவை இழந்து விடும்.

இதைப் போன்ற இயக்கத்தின் தன்மை கொண்டு அத்தகைய உயிர்கள் வாழ்ந்தாலும் விஷத்தன்மை குறைந்ததாக இருப்பினும்... “எந்த நெருப்பிலும் இந்த உயிர் வேகாது”.

ஆனால் நஞ்சின் அறிவுடன் இருந்தால் நஞ்சினைத் தான் விளைய வைக்கும். அதாவது இன்று பூச்சிகளைக் கொல்லப் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தூவுகின்றோம்.

பூச்சிகள் இந்த விஷத் தன்மை கொண்ட அந்தப் பூச்சிக்கொல்லி மருந்தைச் சுவாசிக்கும்போது அந்த உயிரிலே பட்டபின் அந்த உடலை மடியச் செய்கின்றது.

1.ஆனால் அதே சமயம் மடிந்து கொண்ட பின் இந்த நஞ்சின் உணர்வு அதனுடன் இணைந்து கொள்ளுகின்றது.
2.மீண்டும் அதே உயிரணு மற்ற நஞ்சு கொண்ட உயிரணுவாக மாறி
3.இந்த நஞ்சிற்கே அதைக் கொல்லும் சக்தி அதிகமாகி விடுகின்றது.

இதைப்போல நஞ்சைப் பாய்ச்சிப் பயிரைக் காக்க இவர்கள் தூவும் மருந்து அந்த சமயம் பூச்சிகளின் உடல்கள் மடிந்தாலும்
1.இந்த நஞ்சின் தன்மை உணர்வாக இணைந்து
2.அந்த உயிருடன் ஒன்றிய நிலைகள் கொண்டு
3.நஞ்சினை வீழ்த்திவிடும் நிலைகள் வருகின்றது.
4.அதை எதிர்த்துத் தாக்கும் நிலை வருகின்றது.

இதைப்போன்ற தீமையின் நிலைகள் கொண்டால் தீமையின் உணர்வைத்தான் நமக்குள் அதிகரிக்கச் செய்யும். இதையெல்லாம் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே, நஞ்சினை ஒடுக்கி ஒளியாக மாற்றிடும் ஞானிகள் உணர்வை நாம் நுகர்ந்து இந்த நஞ்சினை ஒடுக்கிடல் வேண்டும். அதை அடக்கிடல் வேண்டும்.

உயிர் எவ்வாறு எந்த நெருப்பிலும் வேகுவதில்லையோ எந்த நஞ்சிலும் மடிவதில்லையோ அதைப் போன்று நாமும் அழியாத நிலையாக வேகா நிலை என்ற நிலைகளை நாம் பெறுதல் வேண்டும்.

வேகா நிலையாக நமக்குள் உணர்வின் இயக்கம் மற்றொன்றை மடிந்திடாது உயிருடன் ஒன்றிய ஒளியின் சிகரமாக இருளைப் பிளந்து ஒளி காணும் உணர்வை இந்த உடலிலே விளைய வைக்க வேண்டும்.

1.இதை விட்டு அகன்றால் என்றும் பதினாறு என்ற நிலையும்
2.அழியா ஒளிச் சரீரம் என்ற நிலையும்
3.பிறவியில்லா நிலை என்ற நிலையும் அடைய முடியும்.

ஞானிகள் காட்டிய அத்தகைய மார்க்கத்தில் நாம் செல்லுவோம். இந்த உடல் சதமல்ல. எந்த நிமிடத்திலும் இந்த உடலை விட்டு இந்த ஆன்மா செல்லலாம்.

இந்த உடலில் எந்த உணர்வை அதிக அளவில் நாம் எடுத்து விளைய வைத்தோமோ இந்த அளவு கோல்படிதான் அடுத்த உடலை உருவாக்கும் நிலையும் அந்த உணர்வின் செயலாக்கமும் வரும்.

நாம் எந்த நிமிடம் இந்த உடலை விட்டு அகன்றாலும் மெய்ஞானிகளின் ஈர்ப்பு வட்டத்தில் செல்ல வேண்டும்.

1.அதனின் வழித்தொடரில் தொடர்ந்து அந்த வரிசையில் சென்றால்
2.நாம் அதனின் அரவணைப்பில் நாம் என்றும் ஒளிச் சரீரம் பெற முடியும்.

நீங்கள் மந்திரங்களைச் சொல்லி மீண்டும் மனித உடலுக்குள் தாவி அவனின் அடிமையாகி அவன் காட்டும் நஞ்சினை உணவை உட்கொண்டு மீண்டும் இழி நிலையான சரீரம் பெறவும் முடியும்.

உங்களுக்கு எது எது தேவையோ அதை எடுத்துக் கொள்ளலாம்.

நஞ்சு கொண்ட நிலைகளை நீக்கிய அருள் ஞானியின் உணர்வை நுகர்ந்து நஞ்சை அகற்றிடும் உணர்வைப் பெற்று இன்று உயிருடன் ஒன்றிய ஒளியான சரீரம் பெற வேண்டும் என்று எவர் ஒருவர் எண்ணுகின்றாரோ அதை நிச்சயம பெற முடியும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

கடந்த காலங்களில் குடும்பத்தில் பற்றும் பாசத்துடன் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அதில் கொடுக்கல் வாங்கலிலோ... உணவாக உட்கொள்ளும் நிலைகளிலோ... அல்லது விசேஷங்களுக்குச் செல்லும் பொழுதோ அந்தச் சந்தர்ப்பம்... ஒருவர் அதிகமாகச் செலவழித்து ஒருவருக்கு அதைக் கொடுக்காத நிலை ஏற்பட்டால் பேதங்கள் வருகிறது.

1.அவர் போகும் போது தனக்கு வேண்டியதை மட்டும் சௌகரியமாக எடுத்துக் கொண்டு செல்கின்றார்
2.நமக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறார் என்ற இந்தப் பகைமை உணர்வுகள் விளைந்து விடும்.

பொறுத்திருந்து... அவர் போகும் போது கொடுத்திருக்கலாம் என்றாலும் அது வரை பொறுக்காது கோபம் மேலிட்டு... வெறுப்பு வந்துவிடுகிறது. அந்த வெறுப்பு ஊழ்வினை என்று வித்தாக ஆழமாகப் பதிவாகி கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வரும் அவர்களுக்குள் வெறுப்பு வளரத் தொடங்கி விடுகிறது.

அது பரவி வர வர அவர்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் வெறுப்பு. வெறுப்பான உணர்வு கொண்டு அடுத்து சுடு சொல்லாகத்தான் வரும். பெரியவர்களாக இருந்தால் மதிக்கச் சொல்லாது.

ஆகவே... மதிப்பற்ற நிலைகள் நம் சொல் வெளிப்பட்டு நம்மைப் பார்க்கப்படும் பொழுது நம் ஆன்மாவில் சேர்த்த வெறுப்பான உணர்வுகளும் அவர்கள் சுவாசித்து நம் மீது வெறுப்படையும் தன்மையாக விளைந்து விடுகின்றது.
1.மூதாதையர்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழும் பொழுது
2.நாளுக்கு நாள் பகைமைகள் உருவாகி இத்தகைய இடையூறுகள் வந்துவிடுகிறது.

அடுத்து பாகப்பிரிவினை வரும் பொழுது எனக்கு இவ்வளவு தான் கொடுத்தார்கள் அவனுக்கு நிறையக் கொடுத்தார்கள் என்று பாசத்துடன் ஒன்றி வாழ்ந்த நிலைகளில் இதைப் போன்ற நிலைகள் தடைப்படுகிறது.

தடைப்பட்ட பின் ஒன்றுபட்ட குடும்பமாக வாழ்ந்தாலும்... மூத்தவராக இருக்கப்படும் பொழுது அவர்கள் பிள்ளைக்குத் தனியாகச் சலுகை செய்கின்றார்கள்... என் பிள்ளைக்கு ஒன்றும் கொடுக்கவில்லை...! என்ற இந்த உணர்வு நஞ்சின் தன்மையாக விளைந்து விளைந்து “நாளடைவில் விஷத்தின் தன்மையாக விளைந்துவிடுகிறது...”

பின் யார் மீது இந்த வெறுப்பு அதிகமாக விளைந்ததோ “அடப்பாவி இப்படிச் செய்கின்றாயே... இப்படிச் செய்கின்றாயே...” என்ற நிலைகள் இந்த உடலில் அதிகமாக விளையப்பட்டு “வெளிப்படும் மூச்சுகள்...” அந்தக் குடும்பம் முழுவதும் படர்கின்றது.

ஒருவருக்கொருவர் வெறுப்பானாலும் வெறுப்பற்றவர்களோ...
1.எதற்காக நீங்கள் ஒருவர் ஒருவருக்கொருவர் சண்டையிடுகின்றீர்கள் என்ற உணர்வுடன்
2.ஒன்று சேர்ந்து வாழ நல்ல வார்த்தைகளைச் சொன்னாலும்
3.பாகப்பிரிவினையால் விளைந்த பேத உணர்வுகள் அங்கேயும் சேர்த்து அறியாதபடி... அவர்களுக்குள்ளும் வெறுப்பின் உணர்வுகளே விளையும்.

எனக்கு இப்படிச் செய்தானே... அவன் குடும்பம் உருப்படியாகுமா...? என்ற இந்த உணர்வுகள் அதிகரித்து விடுகிறது. இது போன்ற சாப உணர்வுகளை வெளியிட்டால்... வெளியிட்ட அந்த அலைகள் அவர்கள் உடலில் மறைந்து “வித்தாக” விளைந்து வரத்தொடங்கும்.

இரண்டு தலைமுறைக்குப் பின் அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களில் கரு உருவாகிக் குழந்தைகள் பிறந்த பின்...

1.அதே சாப அலைகள் தொடரப்பட்டு
2.மூதாதையர்கள் உடலில் விளைந்த உணர்வின் உமிழ் நீர் (அமிலங்கள்) கூடி... அந்த உணர்வின் சத்து வித்தாக மலர்ந்தது
3.இங்கே சொல் வடிவில் இணை பிரியாது வந்து கொண்டே இருக்கும்.
4.சாப அலைகளாக குடும்பங்களில் அது இயக்குவதை இன்றும் பார்க்கலாம்... நம்மை அறியாமலே மறைமுகமாக வந்து விடுகின்றது.

மனிதனாக வருவதற்கு முன் எத்தனை இன்னல்கள் பட்டோமோ... மனிதனான பின்னும் இப்படிப்பட்ட தீமைகளில் சிக்குண்டு... தீமைகளை அகற்ற முடியாத நிலைகள் தான் நாம் சுழன்று கொண்டுள்ளோம்.

மூதாதையர்கள் குடும்பத்திற்குள் இட்ட சாப அலைகள் பதிந்து அவருக்குள் விளைந்தது அலைகளாகப் பரவி உள்ளது. அதிலே ஒருவருக்கொருவர் தான் எண்ணியதற்குத் தடை வரும் போது பகைமையாகி அதனால் பழி தீர்க்கும் உணர்வு கொண்டு அடுத்தவருக்குப் பல இன்னல்களை ஏற்படுத்தி... அதைக் கண்டு ரசித்து மடிந்தவர்களும் பலர் உண்டு.

வேதனைப்பட்டவர்களைக் கண்டு ரசித்த உணர்வுகள் அவர் உடலில் விளைந்தது குடும்ப குடும்பத்தின் சந்ததியினருக்கும் இது வருகின்றது. உடல்களில் இருந்து குல வழியில் இது வருகின்றது.

1.உதாரணமாக ஆஸ்த்மா போன்ற நோய்கள் எல்லாம் மூதாதையர்களால் விளைந்தது தான்
2.ஒருவருக்கொருவர் இன்னல் படும் பொழுது “தான் என்ன செய்வது...?” என்று பெருமூச்சு விட்டிருப்பார்கள்.
3.அதே சமயத்தில் வேதனைப்பட்ட உணர்வுகளால் உறுப்புகள் சீராக இயங்காது
4.உமிழ் நீர்கள் சுரக்கப்படும் பொழுது உறைந்து அது நெஞ்சுச் சளியாக உருவாகின்றது.

விஷத்தன்மை கொண்டு அங்கே உருவான அத்தகைய உணர்வுகள் அணுவாக மலர்ந்து வித்தாக உருப் பெற்று வருகின்றது. அதன் வழிகளிலும் குல வழிகளில் பின் தொடர்ந்து வருகின்றது.

தனித்த மனிதர் நம்மிடமிருந்து இப்போது அந்த நோய் வரவில்லை. முந்தி எத்தனையோ நிலைகள் விளைந்தது... குல வழியில் நமக்குள் பின் தொடர்ந்து வருகின்றது.

ஒருவருக்கொருவர் பேசிய அந்த சாப அலைகள் கொடூரத் தன்மை கொண்டது.
1.கொடூரத் தன்மை கொண்டு நமக்கு கிடைக்கும் நல்ல நிலைகளை அது கிடைக்க விடாதபடி தடுத்து
2.இருள் சூழ்ந்த நிலையாக்கி மனிதனுக்குள் எதிர்நிலையாக வருகிறது.

நாம் தவறு செய்யவில்லை. ஆனால் வாழ்க்கையில் இது போன்ற நிலை வருகின்றது. இதை மாற்ற வேண்டும் அல்லவா...!





பல நிகழ்ச்சிகளை எனக்குள்ளேயே நடத்திக் காட்டித் தான் எம்மைத் தெளிவாக்கினார் குருநாதர்

எத்தனையோ கோடிச் சரீரங்களைக் கடந்து இன்று மனிதனாக உருப்பெற்றுள்ளோம்.

மனிதரான பின் வேதனைப்படுபவரை நுகர்ந்தால் அந்த வேதனை உணர்வு நமக்குள் வந்து விடுகின்றது. அதை வளர்த்துக் கொண்டால் வேதனைப்பட்ட மனித உயிரான்மா நமக்குள் வந்து விடுகின்றது. அந்த உணர்வையே மீண்டும் வளர்க்கின்றது... இந்த உடலை வீழ்த்துகின்றது.

வேதனை உணர்வுகள் அணுக்களாக ஆன பின் அந்த மனிதன் உடலை விட்டுச் சென்ற பின் விஷத்தின் தன்மை கொண்ட உடலாக அவனை உருமாற்றி விடுகின்றது அந்த உயிர்.

இதிலிருந்தெல்லாம் எவ்வாறு நீ மீளப் போகின்றாய் என்று பல வினாக்களை குருநாதர் எழுப்பி எம்மைத் தெளிவாக்கினார்.

அதன் பின் இதை மாற்றுவதற்கு நீ என்ன செய்கின்றாய்...? என்று காலையில் 4:00 மணிக்கு விண்ணை நோக்கி ஏகும்படி செய்கின்றார். விண்ணிலே துருவ நட்சத்திரம் அந்த நான்கு மணி அளவில் தான் பூமியின் நிலையில் இருந்து துருவப் பகுதியில் நம்மை அறியும் படிச் செய்கின்றது.

காரணம்... துருவ நட்சத்திரத்திலிருந்து வெளிப்படும் சக்திகளைச் சூரியனின் ஒளிக் கதிர்கள் கவர்ந்து அலைகளாக மாற்றப்படும் பொழுது ஒளி அலைகள் அங்கே பிறக்கின்றது.

அதனின் உணர்வுகள் பரவி வரும் பொழுது நம் பூமியின் சுழற்சி வட்டத்தில் துருவப் பகுதி வழி நம் பூமி எவ்வாறு அதை இழுக்கிறது...? என்ற நிலையையும் தெளிவாக்குகின்றார்.

இதைப் போன்ற நிகழ்ச்சிகளை நேரடியாகக் காண்பித்து
1.அந்தந்தக் காலங்களில் விஷத்தை எவ்வாறு முறியடிப்பது...? என்ற நிலைகளையும்
2.அதை உற்று நோக்கிக் காலையில் நான்கில் இருந்து ஆறுக்குள் இதை வழக்கமாக வைத்துக்
3.காலையிலிருந்து இரவு வரையிலும் பல பல தீமைகளைச் சந்திக்கச் செய்தும் நுகரச் செய்தும் உடலுக்குள் உபாதைகளை உருவாக்குவதும்
4.காலையில் 4:00 மணிக்கு எல்லாம் குருவின் துணை கொண்டு துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை நுகரப்படும் பொழுது
5/இந்த விஷத்தன்மைகள் ஒடுங்குவதையும் காட்டுகின்றார்.
6.இதை அடுத்து அதன் ஈர்ப்பு வட்டத்தில் சப்தரிஷி மண்டலங்கள் எவ்வாறு சுழல்கின்றது...?
7.அதனின்று உமிழ்த்தும் உணர்வுகள் எவ்வாறு பரவுகின்றது...?
8.அதனை நீ எவ்வாறு நுகர வேண்டும்...? என்பதனைத் தெளிவாக்குகின்றார்.

அவ்வாறு தெளிவாக்கிய பின் நுகர்ந்த உணர்வுகள் நாம் இந்த வாழ்க்கையில் இதை அறிவதற்காகச் சில சில நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டுகின்றார்.

அந்த மண்டலங்களின் சக்திகளை நுகர்ந்தறிந்து இந்த உடலுக்குள் அதைச் சேர்க்கும் போது விஷத் தன்மைகள் எவ்வாறு ஒடுங்குகின்றது...? இதிலிருந்து நீ எவ்வாறு மீள வேண்டும்...? என்பதனைத் தெளிவாக்குகின்றார்.

இப்படித்தான் அனுபவரீதியில் மனிதன் தீமைகளிலிருந்து விஷத்தை ஒடுக்கி உணர்வினை ஒளியாக மாற்றி ஒளியின் சரீரமாக இன்று சப்தரிஷி மண்டலமாக நிலைத்து வாழ்கின்றான்...? வளர்ந்து கொண்டே உள்ளான்...? என்றும் 16 என்ற நிலைகளை அடைந்து கொண்டுள்ளான்...?
1.அதை நீ பெறுகின்றாயா...? அல்லது
2.இன்றைய நிலையில் கொண்டு பல மூலிகைகளைக் கொண்டு பிறருடைய துன்பங்களைப் போக்குகின்றேன் என்று வைத்தியன் என்ற நிலைகளை அடைகின்றாயா...? அல்லது
3.பல தாவர இனங்களை பச்சிலைகளைம்க் கையில் எடுத்துக் கொண்டு தேளிடம் அதைக் காட்டப்படும் பொழுது அது ஒடுங்குவதும் விஷப்பூச்சிகளிடம் அதைக் காட்டப்படும் பொழுது பம்முவதும் இது போன்ற கடுமையான மிருகங்களிடம் அதைக் காட்டிய பின் அவை எல்லாம் அஞ்சி ஓடுவதும் அதிலே பெருமை சாற்றி உன் வலிமையைக் காட்டி உன்னுடைய திறமையைக் காட்டிப் பொருளையும் புகழையும் தேடிச் செல்கின்றாயா...? அல்லது
4.அந்த புகழின் தன்மையால் நீ எடுத்துக் கொண்ட உணர்வுகள் மீண்டும் விஷத்தின் தன்மை அடைந்து மடிகின்றாயா...? அல்லது
5.மனித உணர்வுகளை மாற்றி உயிருடன் ஒன்றி ஒளிச் சரீரம் பெறுகின்றாயா...? என்று
6.பல பல வினாக்களை எழுப்பித்தான் எம்மைத் தெளிவாக்கினார் குருநாதர்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

சில செடி கொடிகளை (வாசனையை) நாம் நுகர்ந்தால் மகிழ்ச்சியும் சில செடிகளை நுகர்ந்தால் மயக்கமும் வரும். அது போல்
1.நாம் எடுத்துக் கொண்ட உணர்வின் தன்மை “எது அதிகமாக வருகின்றதோ” அதுவே நம் உடலில் மணமாக (ஆன்மா – மனம்) மாறும்.
2.இந்த மனம் அதிகமாகப் படும் பொழுது ஆன்மாவிலிருந்து சுவாசிக்கும் பொழுது சிறுகச் சிறுகக் கலந்து
3.அதனின் வலு குறையாது அந்த மண(ன)த்தை வளர்த்துக் கொண்டே இருக்கும்.

ஏனென்றால் நஞ்சுக்கு வீரிய சக்தி ஜாஸ்தி. காரணம் நாம் நுகர்ந்த உணர்வுகள் நமக்குள் ஆகும் பொழுது என்ன செய்யும்...? என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது ரோட்டிலே ஒரு பிச்சைக்காரன் நம்மிடம் வந்து மீண்டும் மீண்டும் "ஐயா...ஐயா..." என்று திரும்பத் திரும்ப கேட்டது நமக்குள் ஆழமாகப் பதிவாகின்றது.

காசை எடுத்துக் கொடுப்பதற்கு முன்... "இத்தனை தரம் கேட்கின்றானே..." என்று அந்த நேரத்தில் அவனை எப்படி வெறுத்தோமோ வீட்டிற்குள் வந்த பின் பையன் மீது வெறுப்படைவோம்.

பிச்சைக்காரன் இரண்டாவது தரம் மூன்றாவது தரம் எப்படிக் கேட்டானோ அதே போன்று நாமும் பையனிடம் திரும்பத் திரும்பச் சொல்ல ஆரம்பிப்போம். பையன் நம் மீது வெறுப்படைவான். வீட்டில் பெண்களிடம் சொன்னாலும் இனம் புரியாது அவர்களும் வெறுப்பார்கள்.

இதைப் போய் ஜோசியக்காரனிடம் சென்று "இப்படி இருக்கிறது" என்று சொல்லிக் கேட்டால்
1.உங்களுக்குக் கெட்ட காலம்... ஏழரை நாட்டான் சனி பிடித்திருக்கின்றான்...
2.உங்கள் நட்சத்திரப் பிரகாரம் இப்படித்தான் இருக்கிறது என்று அவன் சொல்வான்... உறுதிப்படுத்திவிடுவான்.

இதுகள் எல்லாம் நம்மை அறியாது உடலுக்குள் விளைந்த உணர்வுகளின் இயக்கம் தான். ரோட்டிலே ஒரு பிச்சைக்காரன் பிச்சை கேட்டான்.. நம்மை அவன் முறைத்து முறைத்துப் பார்த்தான்... நாம் பதிலுக்குப் பேசினோம் என்று இருப்போம்.

ஒரு பாலிலே பாதாமைப் போட்டாலும் அதில் சிறிதளவு காரத்தைப் போட்டால் யார் குடித்தாலும் காரமாகத்தான் இருக்கும். நல்ல சுவையை அது இயக்க விடுமா...?

நான் நல்லவன்... எல்லாவற்றையும் சரி செய்து விடுவேன் என்று சொன்னாலும் அவர் அந்தப் பாலைக் குடித்தாலும் இந்தக் காரம் தான் முன்னாடி வரும்.

நாம் சந்தர்ப்பத்தால் நுகர்ந்த அந்த உணர்வு நமக்குள் இயங்கப்பட்டுக் குடும்ப வாழ்க்கையில் சிக்கல்... இனம் புரியாத வெறுப்பு...! தனக்கு முதியவர்கள் இருந்தாலும் இதே நிலைகள் உருவாக்கப்பட்டு வீட்டில் கலக்கங்கள் வந்துவிடும்.

ஏனென்றால்
1.எந்தப் பிச்சைக்காரன் உடலில் அந்த உணர்வுகள் விளைந்ததோ
2."ஐயா....." என்ற இந்த சோகமான உணர்வு அவன் எப்படி வேதனைப்பட்டானோ
3.அது நமக்குள் ஆகி நம் உயிரிலே பட்டு இயக்கங்கள் ஆகும் போது அந்த உணர்ச்சிகள்
4.நம்மை... நம் குடும்பத்தை... மற்றவர்களை... எப்படி இயக்குகிறது...? என்பதைத் தெளிவாக நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏனென்றால் நமக்குள் அது வித்தாகி அதன் வளர்ச்சிக்கு வரும் பொழுது இந்த நிலையைத் தான் செயல்படுத்தும். இதெல்லாம் இயற்கையினுடைய சில செயல்கள்.

தொழில் செய்யும் இடத்திலும்... நான் முதலாளியாக இருக்கின்றேன்.... நிர்வாக நிமித்தமாகச் சுற்றிப் பார்க்க வருகின்றேன் என்று வைத்துக் கொள்வோம்.

இதே உணர்வின் வேகங்கள் அங்கேயும் சொல்லாக வரும். வேலை செய்யும் அந்தத் தொழிலாளி செவிகளில் இது பட்டபின் நம்மை உற்றுப் பார்ப்பான்.

பார்க்கப்படும் பொழுது பிச்சைக்காரனிடம் எந்த வெறுப்படைந்தோமோ அவன் மீது பட்டு முதலாளி என்று அச்ச உணர்வுகள் இருப்பினும் அவனை பலவீனப்படுத்தும் நிலையே அங்கே வரும்.

முதலாளி வந்தார் பார்த்தார் என்று சென்றாலும்... அடுத்த கணம் அகன்ற பின் அந்த வெறுப்படைந்த உணர்வுகள் அவன் இயந்திரத்திலோ மற்ற நிலையில் அவன் வேலை செய்யப்படும் பொழுது அல்லது கணக்குகளை உற்றுப் பார்க்கப்படும் பொழுது
1.இவன் உணர்வுக்கொப்ப கண்ணின் புலனறிவு ஓடும்.
2.ஒரு இயந்திரத்தை அவன் இயக்குகிறான் என்றால் இயந்திரத்திற்குள் இந்த உணர்வலைகள் பட்டு
3.அந்த காந்தப் புலனறிவால் துரித நிலையில் இயக்கப்பட்டு அதனுடைய ஈர்ப்புத் தன்மை மாறி
4.நாம் எந்த வெறுத்த உணர்வு கொண்டு உற்று நோக்கினோமோ அது

இயக்கப்பட்டு (ஏனென்றால் எல்லாவற்றிலும் காந்தப்புலன் உண்டு)
5.அந்த இயந்திரம் சீரற்ற நிலையாகி... "உற்பத்தியாகும் பொருள் தரமில்லாது பாதிப்படைந்து விடும்..."

ஆக முதலாளி பார்த்தார் என்றாலும் வேலை செய்கின்றவரின் உணர்வுக்குள் அது ஊடுருவி அங்கே தவறுகளை உண்டாக்கி விடும் நம்முடைய சோர்வான உணர்வு மற்றவர்களின் செயல்களுக்குள் ஊடுருவி அதற்குத் தக்கவாறு நம் தொழிலையும் அது பாதிக்கும்.

தவறு செய்யவில்லை...! சந்தர்ப்பத்தால் நமக்குள் விளைந்த வெறுப்படைந்த உணர்வுகள் "அங்கே மற்றவர்களுக்குள் கலந்து கலந்து..." நம்மை உற்று நோக்கி எதிர்பார்ப்பவரின் உணர்வுக்குள் இயங்கி... "நமக்கே எதிரியாக்கிவிடும்..."

அதே சமயம் அந்த உணர்வு கொண்டு வீட்டிற்குள் நாம் அமரும் இடத்திலும் இது அதிகமாகப் பதிவாகின்றது.
1.அதிலே சூரியனின் காந்த சக்தி (வெப்பம்) படரப்படும் போது அது அலைகளாக் கிளர்ந்து அங்கே (வீட்டிற்குள்) பரவத் தொடங்கும்.
2.ஆன்மாவில் அது கலந்து அதிகமாக அதையே நினைவு கூறும் தன்மை வந்துவிடும்.

தொழிலில் கஷ்டமும் நஷ்டமும் எடுத்துக் கொண்ட பின்... எதை எதை எல்லாம் உடலில் விளைவிக்கின்றோமோ... அந்த உணர்வுகள் வீட்டிலே அமர்ந்திருக்கும் போது ஆழமாக அங்கே (தரைகளிலும் சுவர்களிலும்) பதிந்து
1.அதுவே மீண்டும் மீண்டும் நினைவாற்றலாக வரும்... சங்கடத்தையும் சலிப்பையும் உண்டாக்கும்.
2.இதையெல்லாம் நீக்க வேண்டுமா இல்லையா...! இதை யார் நீக்குவது...?

சற்று சிந்தித்துப் பாருங்கள்.



சில செடிகளின் வாசனையை நுகர்ந்தால் மகிழ்ச்சியும் சில செடிகளை நுகர்ந்தால் மயக்கமும் வரும். அது போல் நாம் எடுத்துக் கொண்ட உணர்வின் தன்மை எது அதிகமாக வருகின்றதோ அது நம் உடலில் மணமாக (ஆன்மா - மனம்) மாறும். இந்த மனம் அதிகமாகும் போது ஆன்மாவிலிருந்து சுவாசிக்கும் போது சிறுகச் சிறுகக் கலந்து அதன் வலு குறையாது அந்த மண(ன)த்தை வளர்த்துக் கொண்டே இருக்கும்.



விக்கல்

நம்முடைய நண்பர்கள் பலராக நாம் இருப்பினும் அமெரிக்காவில் ஒருவர் இருக்கிறார் என்றால் நம் நட்பின் தன்மை அவர் உடலிலே பதிவாகி இருக்கும்.

அப்படிப் பதிவாகி இருந்தால் அந்த நண்பன் நமக்குத் தக்க நேரத்தில் உதவி செய்தான் என்று நாம் எண்ணும் பொழுது இந்த உணர்வுகள் அங்கே மோதி விக்கல் ஆகின்றது.

அப்பொழுது அவர் நினைப்பார்... யாரோ என்னை நினைக்கிறார் என்று. இப்படி நட்பினால் விக்கல் ஏற்படுவது ஒன்று.

அதே சமயத்தில் தன் ஆசைகளால் ஏற்பட்ட உணர்வின் அணுக்களின் தன்மை அது அதிகமாகி விட்டால் இந்த நினைவின் தன்மை அந்த அணுக்கள் மோதும் பொழுது ஈர்க்கும் சக்தி அதற்கு அதிகமாகும்.

அப்பொழுது சிலருக்கு அது விக்கலாக அடிக்கடி வந்து கொண்டே இருக்கும். அதை நிறுத்துவதற்காக வைத்தியத்திற்குச் செல்வார்கள்.

நண்பன் என்று வரும் பொழுது இவரின் நினைவின் ஆற்றல் அங்கே விக்கலாகின்றது. ஆனால்
1.ஆசையின் உணர்வுகள் அதைப் பெற வேண்டும் இதைப் பெற வேண்டும் என்று இப்படி அதிகரித்து விட்டால்
2.இடைமறித்து அந்த ஆசைகள் நிறைவேறவில்லை என்றால் இந்த உணர்வுகள் இரண்டும் மோதும் பொழுது
3.ஒன்று இதனுடைய ஆசைக்கு இழுப்பதும் மற்றொன்று அதனுடைய ஆசைக்கு இழுப்பதும் இத்தகைய நிலை வரும்பொழுது
4.அந்த ஏக்க நிலைகளில் இரண்டும் அதனுடைய உணர்வுகள் எதிர்மறையாகி இழுக்கப்படும் பொழுது விக்கல் அதிகமாகும்.

அப்போது அதை நீக்க மருத்துவரைத் தான் தேடிச் செல்வார்கள். இந்த விக்கல் வேறு... நட்பினால் ஏற்படும் விக்கல் வேறு.

இயற்கையின் இயக்க நிலைகள் எவ்வாறு இருக்கிறது...? என்றும் நாம் நுகர்ந்த உணர்வுகளை உயிர் எவ்வாறு இயக்குகிறது...? என்பதையும் குருநாதர் காட்டுகின்றார்.



நமக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் சில விஞ்ஞான அலைவரிசைகள்

இன்று விஞ்ஞான அறிவின் துணை கொண்டு எத்தனையோ பல நிலைகளை இருந்த இடத்திலிருந்தே காணுகின்றோம். எங்கோ ஒலி/ஒளி அலைகள் ஒளிபரப்பு செய்வதை வீட்டிலிருந்து நாம் டிவி மற்றும் எத்தனையோ சாதனங்கள் மூலம் காணுகின்றோம்.

அதைப் போன்று எத்தனையோ உணர்வுகள் நம் உடலுக்குள் உண்டு. அதுவும் அலை வரிசையில் தான் இயங்குகின்றது. அதில் எந்த ஸ்டேஷனைத் திருப்பி வைக்கின்றோமோ அந்த அலைவரிசையை நாம் காணுகின்றோம்.

உலகில் யார் யாரையெல்லாம் நாம் சந்திக்கின்றோமோ இந்த உணர்வுகள் அது எல்லாம் ஒவ்வொரு ஸ்டேஷனாக அமைகின்றது. தீங்கு செய்தவரை எண்ணினால் அவரின் உணர்வலைகள் படர்ந்து இருப்பதை நுகர்ந்து அவர் மேல் வெறுப்பும் வேதனையும் கொள்கின்றோம்.

அந்த வேதனைப்பட்ட உணர்வுகளை நாம் அறிந்து கொண்டால் அதே உணர்வுகள் பதிவாக்கிய பின் அந்த ஸ்டேஷனைத் திறந்து வைத்தால் அந்த வேதனை உணர்வுகள் நமக்குள் வருகின்றது.

விஞ்ஞான அறிவிற்கும் இதற்கும் நாம் நுகர்ந்து கொண்ட உணர்வுகள் அணுவாக விளைகின்றது.... அந்த அணுவினைப் பெருக்கி விடுகின்றது.

சாதனங்கள் மூலம் அதை அறிய முடிகின்றது... இயக்கும்போது உணர முடிகின்றது... பின் அழிந்து விடுகின்றது. அப்படி ஒளிபரப்பும் உணர்வுகள் இயந்திரத்தில் தான் இயக்குகின்றார்கள்.

இயந்திரத்தில் உருவாக்கிய உணர்வின் தன்மை நாம் அதை நுகர்ந்து பதிவாக்கி விட்டால் அதை உடலுக்குள் அணுவாக மாற்றி விடுகின்றது உயிர்.

தீமைகள் எங்கெல்லாம் நடக்கின்றதோ அவை ஒளிபரப்பாகிவிட்டால் இந்த உணர்வின் தன்மை கொண்டு தீமை என்று அதை எண்ணினாலும் அது வேதனை உணர்ச்சியைத் தூண்டுகின்றது.

வேதனையைத் தூண்டும் போது வேதனையை உருவாக்கும் அணுவாகவே உருவாகி விடுகின்றது. பின் அதனின் உணர்வை நமக்குள் வளர்க்க எதன் அலைவரிசையில் எதை வெளிப்படுத்தினார்களோ அதை மீண்டும் நாம் நுகர நேர்கின்றது.

உதாரணமாக உலகில் எங்கோ நடக்கும் அதிர்ச்சியான செய்திகளைப் படமாக்கி அதன் வழி வெளிப்படுத்தும் போது அதே அதிர்ச்சியான உணர்வைக் கண் கொண்டு பதிவாக்கும் பொழுது அதிலிருந்து வெளிப்பட்ட அலைகளை நாம் நுகர முடிகின்றது. அதே அதிர்ச்சியின் உணர்வுகள் நமக்குள் விளைகின்றது.

அவ்வாறு வெளி வரும் பொழுது அழியும் சரீரங்களை நாம் பார்க்கப்படும் பொழுது உடலுக்குள் அழித்திடும் அணுக்களாக டி.பி. போன்ற கொடூர நோய்கள் உருவாகக் காரணமாகின்றது.

அதே போல வைரஸ் நோய்களும் ஊடுருவி உடலில் உள்ள அணுக்களைச் செயலாற்றதாக மாற்றும் நிலை வருகின்றது. எலக்ட்ரானிக் சாதனங்கள் மூலம் இது போன்று ஏற்படுகிறது.

விஞ்ஞான அறிவால் இதையெல்லாம் நாம் கண்டு வந்தாலும் அலைவரிசையில் வெளிப்படுத்தும் போது அதிலிருந்து நுகர்ந்த உணர்வு நமக்குள் அணுவின் தன்மையாக அடையச் செய்கின்றது நம் உயிர்.

1.இதை வென்றிட்ட அருள் மகரிஷிகள் உணர்வைக் காலை துருவ தியான நேரங்களில் கணவனும் மனைவியும் எடுத்து
2/.அதைக் கணவனுக்குக் கிடைக்க வேண்டுமென்று மனைவியும் மனைவிக்குக் கிடைக்க வேண்டும் என்று கணவனும்
3.யாரெல்லாம் இதைச் சீராகச் செயல்படுத்துகின்றார்களோ இந்த உணர்வுகள் கூர்மையாக
4.துருவ நட்சத்திரத்திலிருந்தும் சப்தரிஷி மண்டலத்தில் இருந்தும் அந்த சக்திகளை எடுக்கப்படும் பொழுது
5.அதன் அவதாரமாக இந்த உடலை விட்டு நாம் சென்ற பின் ஒளிச் சரீரமாகப் பிறவி இல்லாத நிலை அடைய உதவும்.

குரு வழியில் அருள் மகரிஷிகள் அருள் சக்திகளை நீங்கள் பெற்று வாழ்க்கையில் வரும் இருளை வென்று இருளை வென்றிடும் உணர்வுகளை நீங்கள் பெற்று இருளை வென்றிடும் சக்தியாக உயிருடன் ஒன்றிய உணர்வுகள் அனைத்தும் ஒளியின் சுடராக ஆகி வாழ்ந்து வளர்ந்திட எமது அருளாசிகள் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

மகரிஷிகள் அருள் சக்தியும் குரு அருளும் நீங்கள் பெற எமது அருள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து வாழ்க்கையில் என்றென்றும் மகிழ்ந்து வாழ்ந்திடப் பிரார்த்திக்கின்றேன்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

பூரண நிலவாக இருக்கப்படும் போது சந்திரன் முழுமையான வெளிச்சத்தை வெளிப்படுத்துகிறது. காரணம் சூரியனிலிருந்து வெளிப்படக்கூடிய ஒளிக்கதிர்களை எந்தக் கோளும் இடைமறிப்பதில்லை.... நேரடியாகச் சந்திரனுக்கு வருகின்றது.

பௌர்ணமி அன்று முழுமையாகப் பிரகாசிக்கின்றது. இருந்தாலும் அடுத்த நாளை எடுத்துக் கொண்டால் மற்ற கோள்கள் இடைமறிக்கப்படும் பொழுது சிறுகச் சிறுக பதினைந்து நாட்களில் தேய்பிறையாக மாறிவிடுகின்றது அதனுடைய ஒளி மங்கிக் கொண்டே வருகின்றது.

சூரியனிலிருந்து வரக்கூடிய அந்த ஒளிக்கதிர்களை மற்ற கோள்கள் தடைப்படுத்துவதனால் இருளடைந்து அதனுடைய முடிவுக்கு வருகின்றது... முழுமையாக மறைந்து விட்டால் அமாவாசை.

அதே போல் அது சமயம்
1.சூரியனிலிருந்து வெளிப்படக்கூடிய ஒளிக்கதிர்களை மறு பிரதி பிம்பமாக (கண்ணாடி போல்) வெளிப்படுத்தும் சக்தி
2.சந்திரனிலிருந்து வருவது நம் பூமிக்கும் கிடைப்பது தடைப்படுகின்றது. (பௌர்ணமி முழுமையாக இருந்தால் பூமியில் இரவிலும் அந்த வெளிச்சம் தெரியும்)

ஆனால்
1.அமாவாசைக்குப் பின் வெள்ளிக் கோள் அதன் அருகில் வந்து ஒளிக்ற்றைகளை எடுத்துக் கொடுக்கின்றது
2.சிறுகச் சிறுக சூரியனின் ஒளியைப் பெறப் பெற... சந்திரன் மறுபடியும் பூரண நிலவாக "பௌர்ணமியாக" வருகின்றது.

உயிரணு தோன்றி எத்தனையோ கோடிச் சரீரங்கள் பெற்று நம்மை மனிதனாக உருவாக்கியது நமது உயிர். முழு நிலா எப்படி இருக்கின்றதோ இதைப் போல்
1.மனிதன் இயன்றவரை அனைத்து நிலைகளையும் அறிந்து...
2.தீமைகளை அகற்றி வாழக்கூடிய உணர்வின் உணர்ச்சிகளை எழுப்பும் மனித உடலாக அமைக்கின்றது நமது உயிர்.

இப்படித் தெரிந்து கொள்ளும் சக்தியைக் கார்த்திகேயா என்று காட்டுகின்றார்கள். அதாவது நமது ஆறாவது அறிவைக் கார்த்திகேயா என்று காரணப் பெயர் வைக்கின்றார்கள்.

மனித வாழ்க்கையில் அன்பும் பண்பும் பரிந்து கொண்டு பிறிதொரு மனிதர்களைப் பார்க்கின்றோம். ஒருவன் அவனுக்கு ஆகாதவனை வெறுத்துக் கோபமாகப் பேசுகின்றான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவனின் சிந்திக்கும் சக்தி இழக்கப்படுகின்றது.

கோபமாக நிந்தித்துக் கொண்டிருக்கும் அந்தச் செயலினை நாம் பார்த்தால்...
1.நமக்குள்ளும் கோபத்தின் உணர்ச்சிகள் தூண்டப்பட்டு
2.சிந்திக்கும் தன்மை இழந்து நிந்திக்கும் உணர்வு நமக்குள்ளும் வந்து விடுகின்றது.

மனிதனாக வருவதற்கு முன் புழுவிலிருந்து எத்தனையோ கோடி உடல்கள் பெற்றுப் பரிணாம வளர்ச்சி பெற்ற நிலையில்
1.தன்னைக் காட்டிலும் வலிமையான உயிரினங்களிடம் சிக்கி

2.அது துன்புறுத்தி உணவாக உட்கொள்ளும் போது அதனிடமிருந்து தப்பிக்க வேண்டும் என்ற நிலையில்
3.உணவுக்காக அந்த மிருகம் இதைக் கொன்று தசைகளைத் தின்றாலும்
4.அதனிடமிருந்து தப்பிக்க வேண்டும் என்று எடுத்துக் கொண்ட உணர்வுகள் வலுவாகி
5.இந்த உயிரான்மா அந்த உடலுக்குள் சென்று அதனுடைய உணர்வை எடுத்து அதே உடலாக மாறுகின்றது.
6.அதனுடைய குட்டியாகும் போது அது இதைப் பாதுகாக்கிறது.

இதே மாதிரி ஒவ்வொரு உடலிலும் “தான் தப்பிக்க வேண்டும்” என்ற உணர்வைச் சேர்த்துச் சேர்த்துப் பரிணாம வளர்ச்சி அடைந்து... நம்மை மனிதனாக உருவாக்கிய “உயிரான ஈசனை நாம் மதித்து நடக்க வேண்டும்...”

வீட்டை அழகாகக் கட்டி வைத்திருந்தாலும் எப்படியும் அதில் தூசிகள் படுகின்றது... நூலாம்படைகளும் வருகிறது. அதை எல்லாம் துடைக்கத் தவறினால் தூசிகள் அதிகமாகி நெடி வந்துவிடும்.

அந்த வீட்டில் அடுத்து நாம் அமர முடியாது... குடியிருக்க முடியாது

அது போல் பரிணாம வளர்ச்சியில் எத்தனையோ தீமைகளைச் சந்தித்திருந்தாலும் அதை எல்லாம் மாற்றி அமைக்கக்கூடிய உடல் அமைப்பைக் கொடுத்தது நமது உயிர்.

சிந்தித்துச் செயல்படும் ஆறாவது அறிவு கொண்டு தீமைகளை அகற்றி இந்த உடலைப் பாதுகாத்துக் கொள்ளும் சக்தி பெற்றவர்கள் தான் மனிதர்களான நாம்.

உடல் என்பது உயிரால் உருவாக்கப்பட்ட இந்த உடல் ஒரு ஆலயம்... இது ஒரு கோட்டை.

ஆறாவது அறிவைக் கொண்டு தூய்மையான உணர்வுகளை இந்த உடலுக்குள் பெருக்கி... உயிருடன் ஒன்றி இந்த உடலுக்குப் பின் பிறவி இல்லை என்ற நிலை அடையும் பருவம் பெற்றது... இதே உயிர் தான்...!
1.அவனை ஒட்டி ஆறாவது அறிவை நாம் சீராகப் பயன்படுத்தி
2.வாழ்க்கையில் வரும் தீமைகளை அவ்வப்போது தூய்மைப்படுத்த வேண்டும்.
3.தவறினால் அழுக்குகள் அடைந்து ஒவ்வொரு குணமும் பாழ்பட்டுவிடும்..

எப்படிப் பூரண நிலா கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து முழுவதுமாக இருள் அடைவது போன்று நம் உடலில் இருக்கக்கூடிய அனைத்து உணர்வுகளும் சிறுகச் சிறுக இருளடைந்து... உயிர் அதை இயக்க முடியாத நிலைகள் கொண்டு வெளியே சென்றுவிடும்.

வெளியில் சென்றாலும் சிந்திக்கும் தன்மை இழக்கப்பட்ட மிருக இனங்களாகத்தான் அடுத்துப் பிறக்க வேண்டி வரும். மனிதனல்லாத உருவாகத் தான் பிறக்க நேரும்.

அதையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்குத்தான் தீமைகள் உங்களுக்குள் வரும் பொழுதெல்லாம்
1.வெள்ளிக் கோள் தன் ஒளிக்கற்றைகளால் சந்திரனுக்கு (அமாவசைக்குப் பின்) ஜீவன் ஊட்டியது போல்
2.அருள் ஞானிகள் உணர்வை உங்களுக்குள் சேர்ப்பிக்கும் பயிற்சியாகக் கொடுக்கின்றோம்.
3.அருள் உணர்வுகள் உங்களுக்குள் பெருகப் பெருக இருளகன்று என்றுமே ஒளியின் அறிவாக நிலைத்திருக்க முடியும்.



ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நம் பிள்ளை சொன்னபடி கேட்கவில்லை... சரியாகப் படிக்கவில்லை... அவன் மீது கவலையும் வெறுப்பும் கோபமும் வருகிறது என்றால் என்ன செய்ய வேண்டும்...?

அந்த நிமிடமே ஈஸ்வரா என்று உயிரை எண்ணி...
1.துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று உயிரிலே

அதை மோதவிட்டு
2.துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை உடல் முழுவதும் பரவச் செய்து
3.என் உடலில் இருக்கக்கூடிய ஜீவணுக்கள் ஜீவான்மாக்கள் பெற வேண்டும் என்று “நாம் முந்திக் கொள்ள வேண்டும்...”

அந்த வலிமையைச் சேர்க்க சேர்க்கத் தவறான உணர்வுகளிலிருந்து மீட்டிடும் சக்தியாக அது வரும்.

பின் பையனைப் பார்த்து...
1.சிந்தித்து செயல்படும் சக்தி பெற்று நீ ஞானி ஆக வேண்டும்
2.தெளிந்தவனாக வரவேண்டும் தெளிவானவனாக நீ வரவேண்டும்
3.தெளிந்த நிலையில் நீ நிச்சயம் வருவாய்...! என்று இதை நாம் சொல்லிப் பழகுதல் வேண்டும்.

இப்படிச் செய்தால் அவன் குறைகளை நீங்கள் நுகர்வது இல்லை. அவன் குறை உணர்வு இங்கே வந்து அவனைக் குற்றவாளியாக்கும் உணர்வுகளிலிருந்து நீங்கள் தப்பலாம். இல்லையென்றால் பாசத்தால் குழந்தையை வளர்த்த நிலையில் அவனைக் காக்கும் நிலை வராது

அதே போன்று தொழில் செய்யும் இடங்களிலும் எத்தனையோ இன்னல்கள் வருகின்றது.

நமக்குக் கடன் கொடுத்தவன் நாளைக்கு வந்து கேட்டால் நாம் கொடுக்க வேண்டுமே...! என்ன செய்வது என்று தெரியவில்லையே...? என்று எண்ணினால்
1.அந்த உணர்வு மூலத்தில் (உயிரில்) மோதுகின்றது.
2.அந்த உணர்ச்சிகள் அது கனலாக எழும்புகின்றது
3.என்ன செய்வது...? ஏது செய்வது...? என்ற பதட்டங்கள் வருகின்றது

மூலாதாரத்தில் மூண்டெழும் கனலை... உணர்ச்சிகள் இப்படி வரப்படும் பொழுது “உங்கள் எண்ணங்கள் நலமாக சீராக இருக்கின்றதா...? இல்லை...! பலவீனம் அடைகின்றது...”

அப்போது என்ன செய்ய வேண்டும்...?

துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று உயிரான மூலத்தில் மோதச் செய்து... மோதிய உணர்ச்சிகள் நம் உடலில் இருக்கக்கூடிய

அணுக்களை ஜீவணுக்களும் ஜீவான்மாக்களும் பெற வேண்டும் என்று..
1.துரிதமாக இந்த உணர்வினைச் செலுத்துதல் வேண்டும்.
2.இப்படிச் செலுத்தி விட்டால் அடுத்து நல்ல சிந்தனைகள் வரும்
3.ஏன்...? எதனால்...? என்ற கேள்விக் குறி வரும்.
4.அப்படி அந்தக் கேள்விக்குறி வைக்கப்படும் பொழுது சிந்தனை சீராகி அதை நிவர்த்திக்கும் "உபாயம்" வரும்.

நிவர்த்திக்கும் உபாயங்கள் வந்த பின் நண்பரிடத்திலே சென்று இதை இப்படிச் செய்ய வேண்டும்... இப்படிச் செய்தால் நிச்சயம் நலமாக இருக்கும்... "அதற்கு உன்னுடைய உதவி வேண்டும்..." என்று சொன்னால் நீங்கள் எண்ணிய வலுவாந உணர்வுகள் நண்பனுக்குள் ஊடுருவி... உதவி செய்யும் பண்பு வரும்.

ஆனால் அப்படி எண்ணாதபடி இங்கிருந்து போகும் பொழுதே... நான் கடன் வாங்கினேன் கொடுக்க முடியாதபடி சந்தர்ப்பம் விரயமாகி விட்டது என்ற வேதனை வந்தால் என்ன ஆகும்...?
1.மூலாதாரத்தில் வேதனைகள் மோதி
2.மூண்டெழும் கனலாக அந்த உணர்வுகள் உடல் முழுவதும் பரவி
3.உடலில் இருக்கக்கூடிய அணுக்கள் பலவீனமடைந்து நண்பரிடத்தில் கஷ்டத்தைச் சொல்வோம்.

அவர் செவிகளிலே படுகின்றது. நம் கஷ்டத்தை எல்லாம் கேட்கப்படும் பொழுது அவருக்கு அந்த சந்தேகம் தோன்றுகிறது. பணம் கொடுத்தால் மீண்டும் வருமா...? என்ற சலனங்கள் அங்கே தோன்றி கேள்விக்குறியாக எழும்பிவிடும்.

"நம்முடைய மனமே" அவர் நமக்குக் கொடுத்து உதவும் அந்தப் பண்பை இழக்கச் செய்து விடுகிறது. அதனால்தான் இதை மூலாதாரத்தில் மூண்டெழும் கனலைக் காலத்தால் அறிந்து கருத்தறிந்து செயல்படும் அந்தச் சக்தி வேண்டும் என்று சொல்வது.

ஆகவே... அப்போது அந்தக் கருத்தை அறிந்திடும் நிலையாக...
1.அது எப்படி வருகின்றது...? எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று
2.மன வலிமையை நமக்குள் கொண்டு வர வேண்டும்.

அப்படி மன வலிமையைக் கொண்டு வர வேண்டும் என்றால் அதிகாலை அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை நமக்குள் பதிவு செய்து வலு சேர்க்க வேண்டும்.

ஈஸ்வரா...! என்று புருவ மத்தியிலே நினைவினைச் செலுத்தி துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று

1.அந்த மூலாதாரத்தில் இந்த அருள் உணர்வுகளைக் கனலாக நாம் மூண்டெழச் செய்தல் வேண்டும்

2.துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை நம் உடல் முழுவதும் பரப்பச் செய்ய வேண்டும்.

3.கண்ணின் நினைவுகளை உடலுக்குள் செலுத்தி சோர்வை அகற்றி

4.வீரிய உணர்வாக எடுத்து நமக்குள் உற்சாகப்படுத்தி... மன வலிமையைக் கொண்டு வருதல் வேண்டும்.

தொழிலை எப்படிச் சீராக நடத்த வேண்டும்...? என்று அதற்குண்டான தெளிவான சிந்தனைகள் வரும். எல்லோரையும் நலம் பெறச் செய்யும் சக்தியாக வரும்.



ஈஸ்வரா...! என்று புருவ மத்தியிலே நினைவைச் செலுத்தி துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று மூலாதாரத்தில் இந்த அருள் உணர்வுகளைக் கனலாக நாம் மூண்டெழச் செய்து அதை உடல் முழுவதும் பரப்பச் செய்து கண்ணின் நினைவை உடலில் செலுத்தி சோர்வகற்றி வீரிய உணர்வாக நமக்குள் உற்சாகப்படுத்தி... மன வலிமை கொண்டு வருதல் வேண்டும்.



அருள் ஞான ஒலிபரப்பு

கல்வியில் தகுதி பெற கல்விச்சாலைக்குச் சென்று விஞ்ஞான அறிவை வளர்த்துக் கொள்ள எண்ணும் பொழுது அதைச் செயல்படுத்துகிறோம். அதே போல் இஞ்சினியர் நிலைகளுக்குச் செல்ல விரும்பும் போது அதைப் படிக்கின்றோம். அதனை அறிய எண்ணத்தைச் செயல்படுத்தும் போது அதனின் கூர்மை நிலை வரப்படும் போது அதை வளர்த்துக் கொள்கிறோம்.

மருத்துவ நிலைகளுக்குச் செல்லப்படும் பொழுது அதனின் எண்ணங்கள் ஓங்கி வளரப்படும் பொழுது அதை வளர்த்துக் கொள்கின்றோம். விவசாயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றால் அதை வளர்த்துக் கொள்கின்றோம். கணக்குகளைச் சரி பார்க்க வேண்டும் என்றால் அதற்குண்டான நிலைகளை வளர்த்துக் கொள்கின்றோம்.

இவையெல்லாம் மனித வாழ்க்கைக்கு உதவும்.

மனிதனை ஒழுங்குபடுத்தும் நிலைகளில் படித்த நிலைகள் கொண்டு செயல்படும் போது அதிலே சிறிதளவு குறைகள் ஏற்பட்டால் அதனால் ஒரு சமயம் வேதனை ஆகிவிட்டால் நாம் கண்டுணர்ந்த விஞ்ஞானத்தின் நிலைகளும் வீழ்ச்சி அடைகின்றது.

அதிலிருந்து மீள முடியாதபடி நம்மைச் சோர்வடையச் செய்து பல காலம் படித்திருந்தாலும் செயலிழந்த நிலைகளுக்குச் சென்று விடுகின்றது.

ஆனால் நான் படிப்பறிவற்றவன் தான். மெய் ஞானிகள் கண்ட உணர்வின் தன்மையை நம் குருநாதர் காட்டிய அருள் வழியில் நான் இதையெல்லாம் பேசுகிறேன் என்றால்
1.குரு கொடுத்த உணர்வின் ஆற்றல் எனக்குள் அதைப் பதிவு செய்ததும்
2.அதை நினைவு கொள்ளும் பொழுது அந்த ஆற்றல் காற்றிலிருப்பதை நுகர்ந்து
3.அதை நுகரச் செய்யும் போது உயிரான இயற்கை அந்த உணர்வலைகளை ஒலி பரப்பும் நிலையாக
4.எண்ணங்களாக என்னை அதைப் பேச வைக்கின்றது.

உதாரணமாக.. படித்துணர்ந்தோர் ஒரு பாட்டைப் பாடுகின்றார்கள் என்றால் முதலில் அந்தத் தலைப்பு (ஆரம்பம்) வந்தால் கடைசி வரையும் சரியாக வரும். பாடலைப் பாடி வரும் பொழுது இடைப்பட்ட நிலைகள் மறந்து விட்டால் பாடலின் முழுமையும் வராது.

அப்படி இல்லாதபடி மெய் ஞானியின் உணர்வலைகளை குருநாதர் எமக்குப் பதிய வைத்தது போன்று உங்களுக்குள்ளும் ஆழமாகப் பதிவு செய்கின்றேன்.

அந்த பதிவினை நீங்கள் நினைவு கொள்ளும் பொழுது உங்களை அறியாது வந்த இருளை நீக்கி மெய்ப் பொருள் காணும் திறன் உங்களுக்குள் வளர வேண்டும் என்ற இச்சையில் இந்த உணர்வை நான் சுவாசிக்கும் பொழுது
1.நீங்கள் இருளில் இருந்து மீள வேண்டும் மெய்ப்பொருள் காண வேண்டும் என்று என் குருவின் ஆணைப்படி
2.நான் சுவாசித்த உணர்வுகள் ஒலியாகப் பரப்புகின்றது என் உயிர்.
3.உடலில் தன்மையை அந்த அங்கங்களைக் கிரியையாகச் செயல்படுத்துகின்றது..

இந்தக் கிரியை அது வெளிப்படும் பொழுது கேட்டுணர்ந்தோர் நிலைகளிலும் நான் நுகர்ந்த நிலைகளைப் பெறச் செய்து... அருள் ஞானனத்தின் செயலாக இந்த

உடலைப் பக்குவப்படுத்தும் நிலையும் பக்குவமாகப் பேசும் நிலையையும் உருவாக்குகின்றது.

இந்த ஞானத்தின் நிலைகள் இப்போது உங்களுக்குள் பதிவாகும் பொழுது அந்தப் பதிவின் நிலைகள் உங்களைச் சீர்படுத்தும் நிலையாக வரும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

இந்த உலகம் விஷத்தன்மை வாய்ந்ததாகப் போய்க் கொண்டிருப்பதால்... எத்தகைய துயரமோ சங்கடமோ சலிப்போ பயமோ போன்ற நிலைகளைப் பார்க்க நேர்ந்தால்... அதை நுகர நேர்ந்தால்... அடுத்த கணம்

1.யாம் (ஞானகுரு) உபதேசித்த உணர்வின்படி ஈஸ்வரா என்று உயிரைப் புருவ மத்தியில் எண்ணுங்கள்.

2.அம்மா அப்பா அருளால் மாமகரிஷி ஈஸ்வராய குருதேவரின் அருளால் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று ஏங்குங்கள்.

3.உங்கள் உடல் முழுவதும் அதைப் பரவச் செய்யுங்கள்

4.உங்கள் உடலில் இருக்கக்கூடிய எல்லா அணுக்களும் துருவ நட்சத்திரத்தின் சக்தி பெற வேண்டும் என்று ஏங்குங்கள்.

4.கவலையோ மற்ற எதுவாக இருந்தாலும் அதை மாற்றிப் பழகுங்கள்.

அங்குசபாசவா...! மனிதனான பின் இந்த உடல் நாம் உணவாக உட்கொள்ளும் அதற்குள் மறைந்திருக்கும் நஞ்சை மலமாக மாற்றுகிறது. நஞ்சைக் கழிக்கும் சக்தியான கார்த்திகேயா என்ற ஆறாவது அறிவின் துணை கொண்டு தீமைகளை நாம் அடக்கிப் பழகுதல் வேண்டும்.

ஏனென்றால் சந்தர்ப்பத்தால் நுகர்ந்த உணர்வுகள் நம் உடலுக்குள் வலுப்பெற்றால் நம் எண்ணங்கள் அனைத்தும் பழுதாகிவிடும்... நம் உடலும் பழுதாகிவிடும்... நம் செயலும் பழுதாகிவிடும். அவ்வாறு பழுதாகாதபடி அருள் ஞானத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

காரணம் சிறிது காலம் தான் இந்த உடலில் நாம் வாழுகின்றோம். அதற்குள் நல் உணர்வுகளை நமக்குள் வலுவாக்கிடல் வேண்டும். அதற்காகத் தான் இராமேஸ்வரத்தில் “இராமன் மனதைக் குவித்து ஒன்றாக்கினான்...” என்று ஞானிகளால் உணர்த்தப்பட்டது.

வாழும் காலத்தில்...

1.எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும்...

2.நாம் பார்க்கும் குடும்பங்கள் எல்லாம் நன்றாக இருக்க வேண்டும்
3.தெளிந்த மனம் பெற வேண்டும் தெளிவான வாழ்க்கை வாழ வேண்டும் என்று
4.பிறர் மேல் இருக்கும் பகைமைகளை மறந்து ஒன்றாக்கினால் நம் உணர்வுகள் அனைத்தும் உயிருடன் ஒன்றுகின்றது.

ஆனால் எனக்கு இப்படித் தொல்லை கொடுத்தார்களே... சும்மா விடுவதா...? என்று எண்ணினால் மனம் இருண்டு விடுகின்றது. மீண்டும் புவியின் பற்றுக்குத் தான் வந்து விடுகின்றோம்.

ஆகவே வாழக்கூடிய குறுகிய காலத்தில் பகைமைகளை மறந்து அருள் ஞானத்தைப் பெருக்கி எல்லோரும் ஒன்று சேர்ந்து மகிழ்ந்து வாழ வேண்டும் என்ற உணர்வினைக் கொண்டு வர வேண்டும்.

இதற்குத்தான் இராமேஸ்வரத்தில் இராமன் மனதைக் குவித்தான் என்று காட்டினார்கள். ஆனால் அந்த உண்மையின் இயக்கங்களை அறிய முடியாதபடி போய்விட்டது.

ஆகவே ஞானிகள் காட்டிய அருள் வழியைப் பின்பற்றுவோம். குருநாதர் காட்டிய அருள் வழியில் அகஸ்தியன் பெற்ற பேரருளும் அவன் துருவனாகித் துருவ மகரிஷியாகி... துருவ நட்சத்திரமான அந்தப் பேரருளைப் பெற்றுப் பழகுதல் வேண்டும்.
1.ஒவ்வொருவரும் அருள் ஞானிகளாக நீங்கள் மாற வேண்டும்
2.அந்த மகரிஷிகள் வாழும் எல்லையை உங்கள் இருப்பிடமாக்க வேண்டும்..



இராமேஸ்வரத்தில் காட்டியபடி... குறுகிய காலமே வாழும் இந்த மனித வாழ்க்கையில்... "நேரமாகி விட்டது மனதைக் குவியுங்கள்...!" என்று இராமன் மனதைக் குவித்துச் சிவலிங்கமாக்கிப் பூஜித்தான் என்று செய்ததை... மனதைக் குவிக்க வேண்டியதை இங்கே மணலைக் குவித்தான் என்று காட்டி விட்டனர். நாங்கள் பார்க்கும் அனைவரும் வாழ்க்கையில் எல்லா நலமும் வளமும் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று நம் மனைதைக் குவித்து ஒன்றாக்கும்படி காட்டினர் ஞானிகள்.



நம் உடலுக்குள் இருக்கும் காந்த சக்தி குறைந்தால் என்ன ஆகும்...?

உதாரணமாக பெரும் கொண்ட மிளகாயைப் பார்க்கலாம்.... செக்கச்செவேல் என்று இருக்கும். ஆனால் அதற்குள் விஷத்தின் தன்மை கம்மியாக இருக்கும். இந்த மிளகாய்க்குக் காரம் இருக்காது.

அதே சமயத்தில் இன்னொரு மிளகாயை எடுத்துக் கொண்டால் வாயில் வைத்தவுடன் சுரீர் என்று உடல் முழுவதும் ஊடுருவும். அதில் விஷம் அதிகமாக இருக்கும். அந்த மணத்தை வேகமாகத் தூக்கிச் சென்று அதை இயக்கவல்ல ஆற்றல் பெறுகின்றது.

இதைப் போன்று தான் ஒவ்வொன்றிலும்.

நாம் சாதாரணமாக சாந்த குணத்தை எண்ணுகின்றோம். அதிலே விஷம் குறைவு. கோபமான குணத்தை எண்ணுகின்றோம். அதிலே விஷத்தின் ஆற்றல் அதிகம்.

பயத்தை அதிகமாக எடுக்கின்றோம். அதில் விஷம் அதிகம். அதிகமாக எண்ணி அதைச் சுவாசிக்கும் போது... இந்த விஷத்தை நாம் சுவாசித்துத் தான் உடலை வேகமாக இயக்கச் செய்து ஆபத்திலிருந்து நம்மைக் காக்கச் செய்கின்றது.

ஆபத்திலிருந்து காத்தாலும் உடலில் சக்தி கொண்டு அதிகமாக இயக்கும் போது நாம் எடுக்கும் குணத்தை ஈர்க்கும் நிலைகள் நம் உடலில் இருக்கும் காந்தத்தின் சக்தி அது பலவீனம் அடைகின்றது.

உதாரணமாக மோட்டாரில் மேக்னெட் இருக்கின்றது மோட்டாரை வைத்துச் சுழலச் செய்து தான் ரைஸ் மில்லை இயக்குகின்றார்கள். அதிலே நெல்லை அதிகமாகப் போட்டால் அரைக்கும் திறன் குறைகின்றது.

அப்போது மோட்டார் சூடாகின்றது... சூடாகும் பொழுது அதில் இருக்கக்கூடிய காந்த சக்தி குறைகின்றது. காந்தம் குறைந்து விட்டால் அடுத்த சமயம் சிறிதளவு நெல்லைப் போட்டாலே அது அரைக்கும் திறன் குறைகின்றது.

இதைப் போன்று ஆற்றல்மிக்க விஷத்தை முறியடிக்கும் உணர்வின் சத்து நமக்குள் இருந்தாலும்... அடிக்கடி கோபமும் வெறுப்பும் பயமும் அதிகமானால் நமக்குள் இருக்கக்கூடிய காந்தத்தின் சக்தி குறைந்து நாம் சுவாசிக்கும் உணர்வுக்குள் இருக்கும் விஷத்த்தின் சத்தை வடிக்கும் திறன் இழக்கப்படும் பொழுது... நம் உடலில் இருக்கும் நல்ல குணங்களுக்குள் அது கலந்து விடுகின்றது.

பாலின் சத்து ஆற்றல் மிக்கதாக ஊட்டினாலும் சுவைமிக்க சத்தான ஆகாரத்தை நாம் சாப்பிட்டாலும்... சாப்பிடும் ஆகாரத்திற்குள் ஒரு துளி விஷம் தெரியாமல் பட்டுவிட்டால் அந்த விஷம் அதிகமானால் உட்கொள்வோரை மாய்த்துவிடும்.

அது போல
1.நமக்குள் இருக்கக்கூடிய நல்ல குணங்கள் அனைத்திலும் காந்தப்புலன் குறைக்கப்படும்போது
2.விஷத்தை வடிக்கும் திறன் இழந்து விட்டால்
3.சுவாசித்த உணர்வுகள் அனைத்தும் மனிதனாக இயக்கச் செய்யும் அறிந்துணர்ந்து செயல்படும் ஆற்றல்மிக்க நிலைகள் அனைத்தும் குறைந்து
4.ஆரம்ப நிலைகளில் மிருகங்கள் எப்படி விஷத்தை உடலாக மாற்றிக் கொண்டதோ அது போல்

5.நம் நல்ல குணங்களுக்குள் விஷங்கள் புகுந்து விடும்... அந்த விஷம் ஆக்கிரமித்து விடும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

வீட்டில் கர்ப்பமுற்றார்கள் என்று தெரிந்தால் அந்தக் கருவில் வளரும் குழந்தை அகஸ்திய மாமகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும்... உலகைக் காத்திடும் அந்த அகஸ்தியன் அருள் சக்திகளைப் பெற வேண்டும் என்று தியானித்து... உருவாகும் குழந்தைகளை ஞானிகளாக உருவாக்க வேண்டும்.

அந்தப் பத்து மாதம் இவ்வாறு நீங்கள் ஒத்துழைத்து ஞானிகளைக் கருவிலேயே உருவாக்குங்கள். விஞ்ஞான அறிவால் இனி வரக்கூடிய பேரழிவுகளில் இருந்து உங்களைக் காக்கத் தாய் கருவில் வளரும் அந்த ஞானிகள் உதவுவார்கள்..
1.ஒவ்வொரு வீட்டிலும் இதைச் செயல்படுத்த முடியும்
2.நம்மைக் காப்பது அவனாகத்தான் இருக்க முடியுமே தவிர "வேறு எந்தக் கடவுளும் நம்மை காக்கப் போவதில்லை... முடியாது..."
3.ஆகவே நாமே கடவுளாக இருந்து... ஞானக் குழந்தைகளைக் கருவிலேயே உருவாக்கிடல் வேண்டும்.

ஆனால் கர்ப்பமுற்றிருக்கும் தாய்... சந்தர்ப்பத்தால் நடக்கக்கூடிய சில தவறான செயல்களைப் பார்த்துவிட்டு... "இவன் திருட்டுப் பயலாக இருக்கின்றான்..." என்று திருடனைப் பார்த்து அவன் செயலை நுகர்ந்தால் கருவிலே வளரக்கூடிய குழந்தை "திருடனாகத்தான் பிறப்பான்..."

உலகில் எங்கு பார்த்தாலும் அநியாயம் நடக்கிறது... கொள்ளை அடிக்கின்றார்கள்... வெட்டுகின்றார்கள்... குத்துகின்றார்கள்... கொலை செய்கின்றார்கள்... என்ற அந்த உணர்வை நுகர்ந்தால் கருவில் இருக்கக்கூடிய குழந்தைக்கு அந்த உணர்வு பெருகி... பிறந்த பின் "அந்த வேலையைத்தான் அவன் செய்வான்..."

ஒரு மனிதன் வெட்டப்பட்டுப் துடிதுடித்துக் கொண்டிருக்கும் உணர்வுகளை கர்ப்பிணித் தாய் நுகர்ந்தால் அந்தக் குழந்தை உடலில் உள்ள உறுப்புகளும் அது போல் "சிதைந்து விடுகின்றது..."

ஏனென்றால் இதையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்...!

சில வீடுகளில் பார்த்தால் ஒருவருக்கொருவர் தாக்குவதும்... கலவரம் செய்வதும்... குழந்தை கை கால்கள் ஊனமாவதும் அங்கங்கள் குறைவதும் இது எல்லாம் வருவதற்குக் காரணம்...
1.அந்த கர்ப்பிணித் தாய் சந்தர்ப்பத்தால் நுகர்ந்தது தான்... அதனால் வரக்கூடிய தீயவினைகள் தான்.
2.யாரையும் நாம் தவறாகச் சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம்.

கர்ப்பமுற்றிருக்கும் தாய்மார்கள் எடுக்கும் உணர்வுகள் தான்... குழந்தைக்குப் பூர்வ புண்ணியமாக அமைகிறது. நீங்கள் தான் அந்தக் கடவுளாக இருக்கின்றீர்கள்.
1.கருவிலே வளரக்கூடிய குழந்தைகளை ஞானிகளாகவும் உருவாக்க முடியும்... நோயற்றதாகவும் மாற்ற முடியும்
2.உலக ஞானம் பெறச் செய்யக்கூடிய அருள் சக்தி "உங்கள் கையிலே உண்டு..."

அந்த பத்து மாதம் எத்தகைய தீமையும் வராதபடி
1.உங்கள் முகத்தையே நீங்கள் உற்றுப் பார்த்துக் கண்ணின் நினைவைச் செலுத்தி
2.கருவில் இருக்கும் குழந்தை துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும்
3.உலகைக் காத்திடும் அருள் ஞானியாக வேண்டும் என்ற உணர்வைச் செலுத்துங்கள்.
4.அவன் உங்களைக் காப்பான்... புழு பூச்சியாக உங்களை மாற விட மாட்டான்.

அவன் வளர வளர உங்கள் தெருவிலோ ஊரிலோ தோஷங்களோ தீயவினைகளோ எது இருந்தாலும் அது மாறும். உங்கள் அனுபவத்தில் பார்க்கலாம்.

குடும்ப வம்சத்தையே அருள் வழியில் அழைத்துச் செல்லும் "பெரும் மகரிஷியாகின்றான்...!"

அவன் வளர வளர நீங்கள் அவனைப் பார்க்கத்தான் போகின்றீர்கள்... அந்த அருள் உணர்வு உங்களுக்குள் சேரத்தான் போகின்றது. அதன் வழி உங்களை அவன் உன்னத நிலைக்கு அழைத்துச் செல்வான்.

இதன்படி செய்து
1.புனித தேசமாக உருவாக்குங்கள்

2.இந்தக் காற்று மண்டலத்தையும் புனிதமாக்குங்கள்
3.அத்தகைய ஞானிகளை உருவாக்குங்கள்...!

இதைத் தவிர இனி வேறு வழியில்லை.

ஆனால் இன்றைய நடைமுறையில் அசுர உணர்வு கொண்டு எத்தனையோ செயல் நடந்து கொண்டுள்ளது. குடும்பத்தில் கருவுற்ற பின் "அது பெண் குழந்தை என்று தெரிந்தால்... எனக்கு வேண்டாம்..." என்று சொல்லி ஈவு இரக்கமற்றுக் கொல்கின்றார்கள். குழந்தையை உருவாக்கிய தாயே இதைச் செயல்படுத்துகின்றது

கரு உருவாவதற்கு முன்னே தடைப்படுத்தினால் கூட ஒன்றும் இல்லை.
1.கருவுற்ற பின் அதைக் கொல்வது மிகவும் தவறு.
2.ஏனென்றால் அவ்வாறு கருச்சிதைவு (ABORTION) செய்யப்படும் பொழுது அந்தச் சிசு எத்தனை வேதனைப்படுகிறதோ
3.அந்தத் தாய் நிச்சயம் அது அவஸ்தைப்பட்டே தீரும்... அந்தக் குடும்பமும் அதே நிலையில் சிதைவுண்டு போகும்.

நிறைய இடங்களில் வறுமையும் கொடுமையும் மற்ற நிலைகளும் சேர்ந்து இத்தகைய அசுர உணர்வுகள்... சமுதாயத்தை எங்கோ அழைத்துச் சென்று கொண்டுள்ளது.

இதிலிருந்து எல்லாம் மக்கள் அவசியம் மீள வேண்டும்.



கர்ப்பமுற்றிருக்கும் தாய்மார்கள் எடுக்கும் உணர்வுகள் தான்... குழந்தைக்குப் பூர்வ புண்ணியமாக அமைகிறது. நீங்கள் தான் அந்தக் கடவுளாக இருக்கின்றீர்கள். கருவிலே வளரக்கூடிய குழந்தைகளை ஞானிகளாக உருவாக்க முடியும்... நோயற்றதாக மாற்ற முடியும். உலக ஞானம் பெறச் செய்யக்கூடிய அருள் சக்தி "உங்கள் கையிலே உண்டு..."



குரு காட்டிய அருள் நெறிகளை வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க வேண்டும்
குருநாதரிடம் அணுகியவர்கள் தன் உடலின் இச்சைக்கும் ஏதோ சாம்ராஜ்யத்தை ஆள்வது போன்றும் தவறான வழிகளில் சென்று கொண்டுள்ளார்கள்.

கவிண்ணுலகில் பேரானந்தப் பெரு நிலையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் குருநாதரின் துணை கொண்டு அவர் பெற்ற உணர்வினை உபதேசத்தின் வாயிலாக அமர்ந்துள்ள உங்களிடம் இதைப் பதிவு செய்கிறோம்.

அவ்வாறு பதிவு செய்யப்படும் பொழுது உங்கள் நினைவாற்றல் விண்ணுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த மகரிஷிகளின் பால் சென்று அவர்கள் ஆற்றலை நீங்களும் பருகி உங்களில் அறியாது சேர்ந்த தீமைகளை அகற்ற உதவும்.

இயற்கையில்... ஒவ்வொரு அணுவின் தன்மையும் எவ்வாறு செயல்படுகிறது...? என்பதை குருநாதர் எமக்குக் காட்டினார்.

எனக்கு எதை எல்லாம் அவர் போதித்து...? அதை எப்படிப் பதிவு செய்தாரோ...? அவை அனைதையுமே அவர் காட்டிய அருள் வழியில் உங்களிடம் தொடர்ந்து சொல்லித் தெளிவாக்கிக் கொண்டு வருகின்றோம்.

எனக்கு ஆறு மாதத்திற்குள் அனைத்தையும் காட்டி விட்டார். அதே போல் அப்படி ஆறு மாதத்திற்குள் உங்களுக்கு அதைப் பதிவு செய்ய வேண்டும் என்றால்... நீங்கள் எங்கே...?

என் வீட்டில் இப்படி இருக்கின்றது... என் மனைவி இப்படி இருக்கின்றது... என் பையன் இப்படிப் பேசுகிறான்... என்ற எத்தனையோ எண்ணங்கள் வருகின்றது.

தியானம் செய்வதற்காகச் சென்றால் நீ சாமியாராகப் போய் விடுவாய் என்று மனைவி விரட்டுகிறது. உட்கார்ந்து தியானம் செய்தால்... என் அப்பனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று பிள்ளை பேசுகிறது என்று இப்படித் தான் சொல்கிறார்கள்.

ஆகையினால் நீங்கள் இவ்வளவும் சொன்னீர்கள் சாமி கேட்டேன்...! இருந்தாலும் என்னால் முடியவில்லை...! என்று இப்படித் தான் நம் வாழ்க்கை செல்கிறது.

ஏனென்றால் கோவிலில் தெய்வத்திற்குத் தேங்காய் பழத்தை வைத்து அதற்குண்டான காசைக் கொடுத்து நம் நட்சத்திரத்திற்கு அர்ச்சனை செய்தால் பாவம் போய்விடும்.

அர்ச்சனை செய்யும் உணர்வுகள் நேராக ஆண்டவனுக்குப் போய் நமக்காக வேண்டி பணத்தைக் கொடுத்திருக்கின்றார்... அர்ச்சனை செய்கின்றார். ஆகையினால் இந்த்த் தெய்வம் மனமிரங்கி வந்து கஷ்டத்தையெல்லாம் போக்குவார் என்ற இந்த நம்பிக்கையைத் தான் நமக்கு ஊட்டி வைத்திருக்கின்றார்கள்.

ஆனால் நம்மை ஆள்பவன் யார்...? என்று குருநாதர் காட்டுகின்றார். பல கோடிச் சரீரங்கள் பெற்று மனிதனான நிலையில் இந்த உடலுக்குள் பல கோடி உணர்வுகள் வந்திருந்தாலும் இதை ஆண்டு கொண்டிருப்பவன் நமது உயிரே ஆண்டவன்.

நாம் எண்ணும் எண்ணங்கள் அனைத்தும் இறையாகி உணர்வின் செயலாக உடலாகி அதனின் உணர்வின் செயலாகத்தான் நம்மை இயக்குகின்றார். இது கீதையிலே தெளிவாகக் காட்டப்படுகின்றது... நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய் என்று...!

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

உயிருடன் ஒன்றிடும் உணர்வுகளை ஒளியாக மாற்றிப் பிறவி இல்லா நிலை அடையும் பருவம் பெற்றவர்கள் தான் நாம்... இதே உயிர் தான்...!
1.அந்த உயிருடன் ஒட்டி ஆறாவது அறிவை நாம் சீராகப் பயன்படுத்தினால்
2.இந்த வாழ்க்கையில் கண்டறிந்த தீமையான உணர்வுகளை அவ்வப்பொழுது தூய்மைப்படுத்த முடியும்.

ஆனால் தூய்மைப்படுத்தத் தவறினால் ஒவ்வொரு குணத்திலும் அழுக்குகள் சேர்ந்து... பூரண நிலா அது பௌர்ணமிக்கு பின் எப்படிச் சிறுகச் சிறுகக் குறைந்து... கடைசியில் முழுமையாக இருட்டாவது போன்று நம் உடலில் அனைத்து உணர்வுகளும் சிறுகச் சிறுக இருள் அடைந்து விடுகின்றது.

இருளடைந்து விட்டால் அதை இயக்க முடியாத நிலைகள் கொண்டு இந்த உயிர் வெளியே சென்று விடுகின்றது. அந்த அடிப்படையில் உயிர் வெளியே சென்றால் சிந்திக்கும் தன்மை இழக்கப்பட்டு... அதற்குத் தகுந்த உடலாக... "மனிதனல்லாத உடலை" இந்த உயிர் உருவாக்கி விடும்.

மனிதனல்லாத உடலை உருவாக்கி விட்டால் மீண்டும் அந்த உடலைக் காக்கும் உணர்வுகள் பெற்றுத் தன்னைக் காட்டிலும் வலுக் கொண்ட உடலின் உணர்வுக்கே செல்லும். ஆனால் மனிதனாக வர முடியாது.

நம் பையனை (குழந்தைகளை) நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் நாம் எண்ணியபடி குழந்தைகள் சரியாக வரவில்லை என்றால்
1.தவறு செய்கின்றான் என்று ஆவேசமான உணர்ச்சிகள் நமக்குள் தூண்டப்படுகின்றது.
2.அப்பொழுது பேய் மனமாக மாறுகின்றது.

முதலில் நல்ல முறையில் வளர்க்கத் துடித்தோம். ஆனால் தவறு செய்கிறான் என்று தெரிந்த பின் பேயைப் போல அவனைத் தாக்கவும்... அறிவை இழக்கச் செய்வதும்... இதைப் போன்ற நிலைகள் வந்து விடுகின்றது.

நமக்குள் வளர்ந்த அறிவினை... "நாமும் நல்ல முறையில் வளர்க்க முடியாது" தடைப்படுத்தும் நிலையாக ஆகிவிடுகின்றது.

பூரண நிலா சிறுகச் சிறுக எப்படி மறைகின்றதோ... அதைப் போல் நமது வாழ்க்கையில் ஒவ்வொரு குணங்களையும் செயலற்றதாகவே மாற்றி வரக்கூடிய நிலையாகி விடுகின்றது அப்படிச் செயலற்றதாக ஆகிவிட்டால் மீண்டும் பிறவிக்குத் தான் வர வேண்டி இருக்கும்.

ஆகவே... இந்த உடலில் முழுமையான ஒளியாக மாற்றும் நம்முடைய ஆறாவது அறிவைச் சீராகப் பயன்படுத்துவதற்குத் தான் உபதேச வாயிலாக உங்களுக்குப் பயிற்சி கொடுத்து... மகரிஷிகள் ஆற்றலை அருள் வாக்குகளாகக் கொடுக்கின்றோம்

பூரண நிலா போன்று நமது உயிர் என்றும் பரிபூரண நிலையை அடைவதே மனிதனின் முதிர்வு நிலை.
1.இந்தச் சந்தர்ப்பதை இழந்தால்
2.இந்த உடலில் படும் துன்பத்தைக் காட்டிலும் எத்தனையோ கோடித் துன்பங்களை அனுபவிக்க வேண்டி வந்துவிடும்.

ஆகவே நமது குருநாதர் காட்டிய அருள் வழியில் அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வை உங்களுக்குள் ஆழமாகப் பதிவாகி... நல் உணர்வுகளை உயர்வாக்கி... இந்த உடலுக்குப் பின் பிறவி இல்லா நிலை அடைதல் வேண்டும்
1.அதற்குத்தான் நமது தியானமே தவிர
2.சொத்து வேண்டும் சுகம் வேண்டும் என்பதற்காக அல்ல.
3.அருள் ஞானச் சொத்தை... அந்தப் பேரின்பச் சொத்தைத் தான் நாம் தேட வேண்டும்.

இதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.



பூரண நிலா போன்று நமது உயிர் என்றும் பரிபூரண நிலையை அடைவதே மனிதனின் முதிர்வு நிலை. இந்தச் சந்தர்ப்பத்தை இழந்தால் இந்த உடலில் படும் துன்பத்தைக் காட்டிலும் எத்தனையோ கோடித் துன்பத்தை அனுபவிக்க வேண்டி வந்துவிடும்.



ஒலி அதிர்வு – எக்கோ – உணர்வு – ஞானம் – இயக்கம்

மான் புலியிடமிருந்து தப்பிக்க வலுவான எண்ணங்களை எடுக்கின்றது. மானின் கண்ணோ புலியிடமிருந்து தப்பிக்கும் உபாயத்தின் உணர்வை ஊட்டுகின்றது.

அதனுடைய வலு பெற்ற பின் மானின் தசைகள் புலிக்கு இரையானாலும் புலியின் வலுவான உணர்வைத் தன் உடலுக்குள் கவர்ந்து புலியின் உணர்வை இரையாக்கி இந்த உடலை விட்டுச் சென்ற பின் அதனின் வலுவின் துணை கொண்டு புலியின் உடலுக்குள் சென்று புலியாக உருப் பெறுகின்றது.

வீட்டில் நாம் எலியை(பார்க்கின்றோம்.. பூனை தன் குரலை எழுப்புகின்றது ஒலியை எழுப்பிய பின் இந்த உணர்வின் நிலைகள் அஞ்சி கடா...புடா... என்று என்று ஓடுகின்றது.

பூனை வருகிறது என்ற எதிரொலியைக் கண்டபின்... அதாவது ஒரு சப்தத்தை இட்டபின் எலிகள் களைந்து ஓடுகிறது.

பூனை அதைப் பார்த்தபின் எலிகள் எந்தத் திசையில் ஓடுகிறது...? என்பதைப் பார்த்த பின் காதுகளை விட்டு மடித்து அதைக் கூர்ந்து கேட்கின்றது.

உதாரணமாக... உங்கள் காதுகளைக் கையை வைத்து மடக்கி மறைத்துக் கொள்ளுங்கள். அப்போது நீங்கள் பேசினால் அது மைக்கில் பேசுவது போன்று அந்த எக்கோ சப்தம் வரும்... உங்கள் நினைவாற்றல் நீங்கள் பேசினால் அவ்வாறு வரும்.

நீங்கள் ஏதாவது இப்படி பேசிப் பார்த்தீர்கள் என்றால் காதை இப்படி மறைத்துக் கொண்டால் போதும். பெரிய மைக் போன்றே எதிரொலிகள் வரும்.

இதைப் போன்று தான் ஒவ்வொரு உயிரினங்களும் அதில் உள்ள காந்தப் புலனறிவு கவர்ந்து நுண்ணிய அலைகளையும் அறிந்து அதை நுகர்ந்து கொள்கிறது.

அப்படித் தான் இந்தப் பூனை எலிகளை விரட்டி அது ஓடிய பின் எங்கே எப்பகுதிக்குச் செல்கின்றது...? என்ற இந்த உணர்வின் மூச்சலைகளைக் கவர்ந்து அங்கே போய்ப் படுத்துக் கொள்ளும்.

அதே உணர்வின் தன்மை கொண்டு அந்த இனத்தின் (எலியின்) உணர்வைப் பாய்ச்சுகின்றது. எலி வரும் வரையிலும் காத்திருந்து இந்த உணர்வின் தன்மை கொண்ட பின் எலியின் மணத்தை வீசும்.

ஏனென்றால்... பல எலிகளை உணவாக உட்கொண்ட பின் பூனை அந்த மணத்தை வெளிப்படுத்தும் போது தன் இனம் என்று எலி வருகிறது. வந்தபின் அதை லபக் என்று இந்தப் பூனை பிடித்துக் கொள்கின்றது.

ஆக உயிரினங்கள் தன் உணவுக்காக என்னென்ன தந்திரங்களைச் செய்கிறது...? என்று குருநாதர் காட்டுகின்றார்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

உடலை விட்டுப் பிரிந்து சென்ற மூதாதையர்களின் ஆன்மாக்களையும் நண்பர்கள் உறவினர்கள் ஆன்மாக்களையும் துருவ நட்சத்திரத்தின் ஆற்றலை நமக்குள் கவர்ந்து அதன் ஈர்ப்பு வட்டத்தில் உள்ள சப்தரிஷி மண்டலத்துடன் எளிதில் இணையச் செய்ய முடியும்.

1.காரணம் அவருடைய உணர்வுகள் நமக்குள் இருப்பதால்

2.அதன் துணை கொண்டு அந்த ஆன்மாக்களை விண்ணுக்கு உந்தித் தள்ள முடியும்.

சப்தரிஷி மண்டலத்துடன் இணையச் செய்தால் அவர்கள் வாழ்ந்த காலத்தில் உடலில் பெற்ற நஞ்சுகள் அனைத்தும் கரைந்து உயிருடன் ஒன்றிய உணர்வின் ஒளி அலைகள் நிலைத்திருக்கும்.

நமது ஆறாவது அறிவு கார்த்திகேயா. கார்த்திகேயா என்றாலே ஒளி... அனைத்தையும் அறிந்து கொண்ட நிலை. பல கோடிச் சரீரங்களில் வந்த தீமைகளை நீக்கி மனித உடல் பெற்றது.

அத்தகைய ஆறாவது அறிவின் துணை கொண்டு இந்த வாழ்க்கையில் வரும் இருளினை மாற்றி உணர்வினை ஒளியாகப் பெறச் செய்யும் முறைதான் இப்பொழுது துருவ தியானத்தில் எடுக்கும் அந்தத் துருவ நட்சத்திரத்தின் சக்தி.

மூதாதையர்கள் உயிரான்மாக்களைச் சப்தரிஷி மண்டலங்களுடன் இணையச் செய்தால் அவருடைய உயிர் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் நிலையாக நிற்கும்.

அவர்கள் சப்தரிஷி மண்டலம் அடைந்து விட்டால்
1.அவர்கள் விண் சென்ற உணர்வை நாம் நுகர்ந்து எடுக்கப்படும் பொழுது
2.அவர் வாழ்ந்த காலத்தில் நம் உடலில் பதிவான சில தீமையான உணர்வுகளை மாற்றி விடலாம்.

அதாவது... அவர் வாழ்ந்த காலத்தில் எடுத்துக் கொண்ட
1.வேதனையோ வெறுப்போ மற்ற நோய்களோ அதிகமாக இருப்பினும்
2.அதன் தொடர் வரிசையில் நமக்குள் வந்திருக்கும் இந்த நோய்களை மாற்றிவிடலாம்.

அல்லது அவர்கள் வாழ்க்கையில் சாப அலைகள் விடப்பட்டிருந்து... அந்த அலைகள் உடலில் இருந்தால் அந்த சாபச் அலைகள் நம்மையும் சாடும். ஆனால் அவர்களை விண் செலுத்தி விட்டால் அதன் உணர்வின் துணை கொண்டு அவர் வழியில் வந்த சாப உணர்வுகள் நமக்குள் வராதபடி தடுக்கலாம்.

ஆகவே... யார் உடலை விட்டுப் பிரிந்து சென்றாலும் அந்த ஆன்மாக்களை நம் குருநாதர் காட்டிய அருள் வழியில் விண் செலுத்திப் பழகுதல் வேண்டும். விண்

செலுத்தி அங்கே உடல் பெறும் உணர்வுகளைக் கரைத்த பின் அவர் உடலில் உள்ள நோய்களோ மற்றதுகளோ நமக்குள் வளராது தடுக்க முடியும்.

இதை எல்லாம் ஏன் சொல்கிறோம் என்றால்... எப்படியும் நாம் பிறருடன் பழகத் தான் செய்கின்றோம். அவருடைய உணர்வுகள் நமக்குள் நம்மை அறியாமலே வளர்ந்து விடுகின்றது.

அதை எல்லாம் கரைப்பதற்கு... உடலை விட்டுப் பிரிந்து சென்ற ஆன்மாக்களை பௌர்ணமி அன்று சப்தரிஷி மண்டலத்துடன் இணைக்கச் செய்து உடல் பெறற நஞ்சுகளைக் கரைக்கப் பழகிக் கொடுக்கின்றோம்.

அப்படிச் செய்து பழகி விட்டால் குடும்பத்தில் உள்ள அனைவரும் முறைப்படி செய்யப்படும் பொழுது
1.இந்த உடலுக்குப் பின் நாம் எளிதில் சப்தரிஷி மண்டலம் அடையலாம்.
2.இல்லையென்றால் மற்றவருடைய பழகிய உணர்வுகளில் புவியின் ஈர்ப்புக்குள் நம்மை அழைத்து வந்துவிடும்

இது போன்ற நிலைகளிலிருந்து நாம் மீள்வதற்குப் “பௌர்ணமி தியானத்தைச் சீராக நாம் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்...”



யார் உடலை விட்டுப் பிரிந்து சென்றாலும் அந்த ஆன்மாக்களை நம் குருநாதர் காட்டிய அருள் வழியில் விண் செலுத்திப் பழகுதல் வேண்டும். விண் செலுத்தி அங்கே உடல் பெறும் உணர்வுகளைக் கரைத்த பின் அவர் உடலில் உள்ள நோய்களோ மற்றதுகளோ நமக்குள் வளராது தடுக்க முடியும்.



அண்டம் – பிண்டம் – ஒளி

இன்றைய நமது வாழ்க்கையில் நாம் சந்திக்க நேரும் எத்தனையோ இன்னல்களை அன்று வாழ்ந்த மகரிஷிகளும் சந்தித்தார்கள்.

அதை மாற்ற அவர்கள் காலத்தில் அவருடைய சந்தர்ப்பம் அதை நீக்கும் உணர்வாக அவர்களுக்குள் விளைந்து அதைக் கணங்களுக்கு அதிபதியாக்கினார்கள்.

இந்தப் புவியின் பற்று கொண்டு விளைந்த உணர்வின் சத்தை உணவாக உட்கொண்டாலும்

1.புவியின் ஈர்ப்புக்குள் நிற்காது இதனின்று விடுபட விண்ணை நோக்கி ஏகி அண்டத்தின் ஆற்றல் மிக்க சக்தியைப் பெற வேண்டும் என்று

2.இந்த மண்ணுலகில் தோன்றிய பிண்டத்தின் உணர்வுக்குள்

3.அந்த அண்டத்தின் உணர்வலைகளைச் சக்தி வாய்ந்ததாக மாற்றும்

எண்ணங்களை உருவாக்கினார்கள்
4.அன்று கடும் தவத்தால் தன் எண்ண வலிமையால் சந்தர்ப்பத்தால் கிடைத்த உணர்வின் துணை கொண்டு.

அவ்வாறு விளைந்தாலும் தனது வாழ்க்கையில் எதிர்படும் கோபமோ சலிப்போ வெறுப்போ சங்கடமோ சஞ்சலமோ இது போன்ற நிலைகளை அவர்கள் உடலில் செயல்படுத்தாது
1.பேரண்டத்தின் சக்தியைத் தனக்குள் கூட்டி... அது நஞ்சு கொண்டதாக அது இருப்பினும் அதனின் வலு துணை கொண்டு
2.புவியில் விளைந்த நஞ்சின் தன்மையை அடக்கி அந்த ஆற்றல்மிக்க உணர்வின் தன்மை தனக்குள் வளர்த்துப் புவியின் பிடிப்பை அறுத்து
3.விண்ணின் ஆற்றலைத் தனக்குள் பெருக்கி உயிருடன் ஒன்றிய உணர்வின் சத்தாக ஒளியின் சிகரமாக உணர்வை மாற்றினார்கள்.

உணர்வு என்பது ஒன்றை அறிந்து கொள்ளும் நிலை தான். கோபமான உணர்வு வரப்படும் பொழுது அதை உணர முடிகின்றது. ஒருவர் தவறு செய்கிறார் என்று பார்க்கும் பொழுது அந்தத் தவறை நாம் அறிய முடிகின்றது.

இதைப் போல ஒரு வெளிச்சத்தைக் காட்டினால் அதன் மூலம் பல பொருள்களை அங்கே நாம் காண முடிகிறது... இது இன்னது தான் இது இன்னது தான் என்று.

இதைப் போல அந்த மகரிஷிகள் தன் ஆற்றல்மிக்க உணர்வின் சக்தி கொண்டு ஒளி கண்ட உணர்வின் தன்மையால் ஒன்றைப் பிளந்து அதற்குள் எந்தக் குணமோ இருளைப் பிளந்து அதற்குள் இருக்கும் உணர்வின் சத்தை உணர்ந்தவர்கள். ஆகவே அதை ஒளியின் சிகரமாக உணர்வுகள் அனைத்தையும் மாற்றிநார்கள்.

1.விண்ணுலகில் வரும் நஞ்சு உருவாகும் முன் இதனின் துணை கொண்டு அதைப் பலவீனமாக்கி அதனின் உணர்வை ஒளியாக மாற்றி
2.அதனின் திறன் கொண்டு மண்ணுலகில் தோன்றிய இந்தப் பிண்டத்தில் அண்டத்தின் உணர்வுகளைப் பிண்டத்திற்குள் மாற்றி
3.இன்றும் விண்ணுலக ஆற்றலைத் தனக்குள் பெருக்கி உடலை விட்டு உயிரான்மா சென்றபின்
4.அண்டத்தின் உணர்வின் சத்தை அது இங்கே மண்ணுலகிற்கு மாற்றி வருவதற்கு முன் அதனையே அடக்கி அதைக் கணங்களுக்கு அதிபதியாக்கி
5.இந்தப் பிண்டத்திற்குள்ளேயே அதை உருவாக்கினான் மகரிஷி.

அதனின் துணை கொண்டே உணர்வின் ஒளியாக ஒளியின் சரீரமாக என்றும் நிலைத்திருக்கின்றார்கள்.

நம் பூமியின் துருவப் பகுதியில் நிலை கொண்டு
1.விண்ணின் ஆற்றல் புவியின் ஈர்ப்புக்குள் நுழையும் தருவாயில் அதனையும் தனக்குள் நுகர்ந்தறிந்து அதை ஒளியாக மாற்றி
2.இந்த மனித உடலில் இப்பொழுது நாம் இருப்பது போன்று உயிருடன் ஒன்றி உணர்வின் சத்தை ஒளியின் சரீரமாக மாற்றி
3.அதனின்று வெளிப்படும் உணர்வின் ஆற்றல் மற்றதை அடக்கி அடக்கிடும் ஆற்றல்மிக்க நிலைகளை அவர்கள் கணங்களுக்கு அதிபதி ஆக்கி
4.மற்ற உணர்வை அடக்கி ஒளியின் தன்மையில் பொருளைக் கண்டிடும் சக்தியாக விளைந்திட்ட
5.அந்த உணர்வின் ஆற்றல் மிக்க அருள் ஞானியின் உணர்வுகள் நம்முன் தோன்றிக் கொண்டிருக்கும் இந்நிலையில்
6.உபதேசத்தின் வாயிலாகக் கேட்டுணரும் பொழுது ஊழ்வினையாகப் பதிவாகி
7.அதனையே நினைவு கொண்டு அதனின் ஆற்றலை நீங்கள் பருகும் நிலைக்கு அதைப் பெருக்கும் தன்மைக்காக
8.கூட்டுத் தியானங்கள் மூலம் அதனை ஆற்றல்மிக்க சக்தி வாய்ந்த வித்தாக உங்களுக்குள் ஊழ் வினையாகப் பதிவாகி
9.தீமைகள் அறியாது நமக்குள் புகுந்தாலும்... அப்போது நினைத்த மாத்திரத்தில் மகரிஷிகள் அருள் ஒளியைக் கவர்ந்து நம் உடலுக்குள் செலுத்தி
10.தங்கத்திற்குள் திரவகத்தை ஊற்றினால் செம்பு பித்தளையை அது பிரிப்பது போன்று
11.நமக்குள் அந்த அருள் மகரிஷிகள் உணர்வைக் கணங்களுக்கு அதிபதி ஆக்கினால்
12.மனித வாழ்க்கையில் துன்பத்தையோ துயரத்தையோ வெறுப்பையோ குரோதத்தையோ உருவாக்கும் நிலையை அடக்கி
13.ஒளியின் சரீரமாக நம் உடலை அது காத்து அதுவே குருவாக நின்று நல்வழிப்படுத்தும் நிலையாக
14.இந்த மண்ணுலகில் அந்த அண்டத்தின் உணர்வை மாற்றிட்ட
15.அது இந்தப் பிண்டமான உடலுக்குள்ளேயே இருந்து அண்டத்தை எட்டிடும் ஒளியாக அதைப் பற்றி
16.அதனின் நிலைகள் கொண்டு நாம் அங்கே சென்று இந்தப் பிண்டத்தின் உணர்வுக்குள் விளைந்த நஞ்சினை அறுத்து நஞ்சினை ஒடுக்கி
17.விண் சென்ற அருள் மகரிஷிகளின் அருள் வட்டத்தில் நாம் இணைந்திடும் நிலைக்குத் தான் யாம் சொல்லும் இந்த உபதேசம்.

அந்த அருள் மகரிஷிகள் உணர்வை நாம் பற்றுடன் பற்றி... அவர்கள் ஒன்றுபட்ட நிலையில் வசிஷ்டர் அருந்ததி போன்று விண்வெளியில் ஒளிச் சுடராகச் சுழன்று கொண்டிருக்கும் அவர்கள் அருள் வட்டத்தில் நாம் சென்று
1.அண்டத்தின் நிலையைப் பிண்டத்தில் சேர்ப்பித்த அந்த மகரிஷிகளைப் போன்று
2.அவர்கள் விளைய வைத்த உணர்வின் தன்மை அண்டத்தின் ஆற்றலை அவர் அடக்கிடும் நிலையும்
3.அவர்கள் உணர்வின் துணை கொண்டு அண்டத்தின் ஆற்றலை நம் பிண்டத்திற்குள் சேர்த்து இந்த உடலை விட்டுச் சென்றாலும்
4.அண்டத்தின் உணர்வின் தன்மை தீமைகள் இருப்பினும் ஒளியின் சுடராக மாற்றிடும் செயலாக
5.ஆறாவது அறிவின் துணை கொண்டு செயல்படும் முறையைத் தான் உங்களுக்குள் பதிவு செய்கின்றோம்.

நமக்குத் தெரியாமலே நம்மை இயக்கும் சில சக்திகள்

உலக நடப்புகளைத் தெரிந்து கொள்ள பத்திரிக்கைகளைப் படிக்கின்றோம் ஒரு அதிர்ச்சியான செயலை... “ஓடும் ரயிலிலே கொள்ளையடித்தான்...” என்று கேள்விப்படுகிறோம். அந்த உணர்வை நுகரப்படும் பொழுது அது நமக்குள் பதிவாகி விடுகின்றது.

அந்தப் பதிவு என்ன செய்கின்றது...?

அடுத்து ஒரு சந்தர்ப்பம் நாம் ரயிலில் பயணம் செய்கிறோம் என்றால்... நாம் பதிவு செய்த்து அதிர்வின் தன்மை ஆன உடனே அச்சுறுத்தும் உணர்வாக வருகிறது.

“கொள்ளையன் இங்கே வந்து விடுவானோ...!” என்ற இந்த உணர்வு அச்சுறுத்தினால்... (கொள்ளையடிப்பவன் மற்ற பெட்டிகளுக்கு அநேகமாகச் செல்லவில்லை என்றாலும்)
1.இங்கிருந்து வெளிப்படும் அச்சுறுத்தும் உணர்வலைகள் படரப்படும் போது
2.கொள்ளை அடிப்பவன் இந்தப் பெட்டியிலேயே வந்து கொள்ளையடிப்பான்... இதைப் பார்க்கலாம்.

இதே போன்று பேருந்துகளில் பயணம் செய்யப்படும் பொழுது “விபத்தில் சிக்கி விடுவோமோ...” என்று அதிர்ச்சி ஆகி அந்தப் பேருந்தின் டிரைவரை எண்ணினால்
1.இந்த உணர்வலைகள் ஊடுருவி அதற்குத் தக்கவாறு அவன் வண்டியைத் திருப்பி அங்கே விபத்து ஆகும்.

2.இவன் எண்ணியபடி அந்த வண்டியை அணைத்து... இவன் வண்டிக்குள் இருந்தாலும் இவனை உராய்ந்து அடிபடும் நிலை வரும்.
3.ஆனால் மற்றவர்களுக்கு ஒன்றும் ஆகாது.
4.இவன் எடுத்துக் கொண்ட எண்ணத்திற்கொப்ப டிரைவரையும் இயக்குகின்றது... தன்னையும் ஆபத்துக்குள்ளாக்குகின்றது.

இதை எல்லாம் ஏன் சொல்கிறோம் என்றால்... நம்மை அறியாது இயக்கும் உணர்வுகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்குத்தான்.

ஒரு கம்ப்யூட்டரில் ரிமோட் செய்து... அதிலே ஆணையிடும் அழுத்தத்திற்கொப்ப இயக்கச் சக்தியாக எப்படிக் கொண்டு வருகின்றார்களோ அது போன்று
1.நமது உயிரும் ஒரு எலக்ட்ரிக்காக இருக்கின்றது.
2.நாம் நுகர்ந்த உணர்வுகளை (அழுத்தத்திற்கொப்ப) அது எலக்ட்ரானிக்காக மாற்றுகின்றது
3.அதன் வழி தான் இந்த உடலையே அது இயக்குகின்றது என்பதை
4.இன்று நாம் விஞ்ஞான அறிவில் இருப்பதால் அந்த வழிப்படி உணர்ந்து கொள்வது மிகவும் நல்லது.

நாம் நுகர்ந்த உணர்வுகள் நம்மை எப்படி இயக்குகின்றது...? நம்மை அறியாது தவறுகள் எப்படி வருகிறது...? நுகர்ந்த உணர்வு நம்மை எப்படி நோய்க்கு அழைத்துச் செல்கின்றது...? நோயின் தன்மை இந்த உடலை எப்படி நலியச் செய்கின்றது...? என்ற நிலைகளை மெய் ஞானிகள் தெளிவாக்குகின்றார்கள்.

தெளிவாக்கினாலும் அஞ்ஞான வாழ்க்கையே இன்று வாழ்கின்றார்கள். பக்தி மார்க்கத்தில் உள்ளவர்களும் அருள் ஞானிகள் காட்டிய உண்மையின் உணர்வை நுகராது அதை வளர்த்திடாது தணியப்படும் போது... அஞ்ஞான வாழ்க்கையே பக்தி மார்க்கத்திலும் வளர்கின்றது.

ஆலயத்திற்குள் சென்றால் அங்கே தீப ஆராதனை காட்டப்படும் பொழுது நாம் எண்ண வேண்டியது எது...?

தீபத்தால் வெளிச்சத்தைக் காட்டிய பின்...
1.பொருளறிந்து செயல்படும் திறன் நாங்கள் பெற வேண்டும்
2.இந்த ஆலயம் வருவோர் அனைவரும் பொருளறிந்து செயல்படும் திறன் பெற வேண்டும்
3.அவர்கள் குடும்பம் எல்லாம் பொருளறிந்து செயல்படும் திறன் பெற வேண்டும்

4.தொழில் செய்யும் இடங்களில் உள்ளோர் அனைவரும் பொருளறிந்து செயல்படும் திறன் பெற வேண்டும்
5.நாங்கள் பார்ப்போர் அனைவரும் பொருளறிந்து செயல்படும் திறன் பெற வேண்டும் என்று எண்ண வேண்டும்.

காரணம்... அங்கே தீப ஆராதனை காட்டப்படும் பொழுது மறைந்திருக்கும் பொருள்கள் தெரிகின்றது. அந்த வெளிச்சத்திலே தெய்வத்தைப் பார்க்கின்றோம். “இந்தத் தெய்வம் நல்லது செய்யும்” என்று காட்டப்படுகிறது... இது துவைதம்.

தெய்வச் சிலைகளாக உருவமாக்கி அந்த எண்ணத்தை எடுத்து அதைக் காவியமாகப் படிக்கும் போது (மேலே சொன்ன மாதிரி) பத்திரிக்கையில் படிக்கும் பொழுது அந்த அசம்பாவிதங்களைக் கண்ட பின்... “உணர்ச்சிகள் எப்படித் தூண்டப்படுகின்றதோ... அதே போல் அருள் உணர்வுகளை நமக்குள் நம்மை அறியாமலே தூண்டச் செய்வதற்கு” அன்றைய ஞானிகள் இவ்வாறு வழி காட்டிச் சென்றார்கள்.

கொள்ளையர்கள் வந்து விடுவார்களோ என்ற உணர்ச்சியின் தன்மை “நாளை என்ன செய்வது...?” என்ற அச்சுறுத்தும் உணர்வுகளைத் தூண்டுகின்றது. அப்பொழுது நாம் பயந்தே வாழும் நிலை வருகின்றது.

வாகனங்களில் செல்லப்படும் பொழுது இந்த உணர்வுகளே அதிகமாகத் தோன்றி நாம் நுகரும் உணர்வுகள் அந்த அணுக்களுக்கு அது வீரிய உணர்வாக உணவாக ஊட்டி... அச்சுறுத்தும் அணுக்களாக நமக்குள் விளைந்து விடுகிறது.

அதனால் இந்த உடலை நலியச் செய்யும் உணர்வுகளாக ஆகி நல்ல உணர்வுகளை நாம் பறிகொடுத்து விடுகின்றோம். அவன் அங்கே பொருளைப் பறிகொடுத்தான்..
1.ஆனால் பத்திரிக்கையைப் படித்த பின் நுகர்ந்த உணர்வோ இங்கே நமக்குள் நோயாகி
2.இந்த உடலையே பறிகொடுக்கும் நிலையாக வந்து விடுகிறது

இதையெல்லாம் மாற்றி அமைக்க நமது குருநாதர் காட்டிய அருள் வழியில் யாம் (ஞானகுரு) உபதேச வாயிலாகப் பதிவு செய்யும் அருள் உணர்வின் துணை கொண்டு... பத்திரிக்கையைப் படித்த அடுத்த கணமே அந்த்த் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி எங்கள் உடல் முழுவதும் படர்ந்து எங்கள் உடலில் உள்ள ஜீவான்மா ஜீவணுக்கள் பெற வேண்டும் என்று ஏங்க வேண்டும்.

பின்... நாளை நடப்பதெல்லாம் மகரிஷிகள் காட்டிய வழியில் எல்லோருக்கும் நல்லதாக இருக்க வேண்டும் என்று எண்ணி "அதிர்ச்சியான உணர்வுகள் நமக்குள் புகாதபடி" தடுத்துப் பழகுதல் வேண்டும்.

இந்தத் தியானப் பயிற்சியைச் சீராகப் பயன்படுத்தி அருள் வழியில் இந்த வாழ்க்கையில் வரும் தீமைகளை அகற்றித் துருவ நட்சத்திரத்தினைப் பற்றுடன் பற்றினால் பிறவி இல்லா நிலை அடைகின்றோம்.

தீமை என்ற உணர்வுகள் அதிகமாகப் பற்றிவிட்டால் அந்தப் பற்றின் தன்மை கொண்டு மீண்டும் பிறவியின் நிலைக்கே வருகின்றோம். நோயின் உணர்வுகளை நுகர்ந்தால் இந்த மனித உருவை அழிக்கத் தான் அது உதவும்.

ஆகவே...
1.மகரிஷிகளின் ஆற்றலை உங்களில் பெருக்கி... அதைப் பற்றுடன் பற்றி
2.இந்த வாழ்க்கையில் வரும் பகைமைகளை அகற்றி அருள் ஞானத்துடன் நீங்கள் வளர்ந்து
3.வரும் தீமைகளைப் பற்றற்றதாக மாற்றி...
4.அருள் உணர்வைப் பற்றுடன் பற்ற வேண்டும் என்று உங்களை வேண்டிப் பிரார்த்திக் கொள்கிறேன் (ஞானகுரு).





வெப்பம் காந்தம் விஷம் – மூன்று சக்தி

சக்தி வாய்ந்த விஷம் கொண்ட ஆவியின் நிலைகள் தான் ஆதியில் இருந்தது. பேரண்டத்தில் இன்று இருக்கக்கூடிய கோள்களோ சூரியன்களோ எதுவுமே இல்லாத சூனியமாக இருக்கும் பொழுது விஷம் கொண்ட நிலைகள் பேரண்டத்தில் பரவிக் கொண்டிருப்பதையும் அதிலே முதன்மை பெற்றது தான் விஷம்.

அதைத்தான் ஆதிசக்தி என்று காரணப் பெயரைக் கொடுக்கின்றார்கள். மகரிஷிகள்.

விஷமான சக்தி விஷமற்றதைத் தாக்கப்படும் பொழுது அந்த விஷத்தின் தாக்குதல் தாங்காது வெப்பம் ஆகின்றது. இந்த வெப்பத்தின் நிலைகள் கொண்டு சுக்கு நூறாக ஆவியின் தன்மை அணுக்களாகச் சிதறுண்டு ஓடுகின்றது.

அவ்வாறு ஓடும் நிலைகளில் உருப் பெற்றது தான் காந்தம். முதலிலே நெருப்பும் வெப்பத்தின் தணல் கூடும் பொழுது ஈர்க்கும் சக்தி அடைகிறது.

இவ்வாறு அடைந்ததைத் தான் முதலிலே விஷம் ஆதிசக்தி என்றும் அதில் வெப்பமாக உருவாகும் நிலையை ஆதிபராசக்தி என்றும் அதில் ஈர்க்கும் காந்தம்

தனக்குள் இழுத்து வளரும் தன்மையே ஆதிலட்சுமி என்று காரணப் பெயரை வைக்கின்றார்கள்.

இவ்வாறு உருப்பெற்ற இந்த மூன்று நிலையும்... அதாவது வெப்பம் காந்தம் விஷம் இந்த மூன்றும் சேர்த்து ஒரு அணுவாக மாறுகின்றது.

அந்த அணுவின் தன்மை அணுக்களாகப் பிரபஞ்சத்திற்குள் இயக்கச் சக்தியாக அது ஓடும் நிலைகளில் மற்ற எப்பொருளை... எந்த ஆவியின் சக்தியை இது கவர்கின்றதோ அந்த அணு சேர்த்துக் கொண்டால் அதை மணம் என்றும் ஞானம் என்றும் பெயரை வைக்கின்றார்கள்.

காந்தம் தனக்குள் இழுத்து மோதும் பொழுது அது வெப்பமாகி அந்த உணர்வினை இரண்டறத் தனக்குள் அணுவின் தன்மையாக அடைந்து விடுகிறது.

அவ்வாறு அணுவின் தன்மை அடையப் படும்போது மனம் ஞானம் அதனுடன் சேர்த்து இயக்கத்தின் தன்மை வரப்படும் பொழுதுதான் அதைக் காயத்ரி என்று பெயரை வைக்கின்றார்கள்.

இந்த மூன்று நிலைகள் எப்பொருளைத் தனக்குள் கலக்கின்றதோ அதைக் காந்தம் இழுத்துத் தன்னுடன் மோதச் செய்யும் பொழுது அதில் இருக்கக்கூடிய விஷம் வெப்பத்தை உருவாக்கி வெப்பத்தின் தணலுக்கு ஆற்றலை ஊட்டித் தனக்குள் எடுத்துக் கொண்ட சத்தினை இரண்டறக் கலந்து அதன் ஞானமாக அந்த அணுவின் தன்மை இயக்கத் தொடங்கி விடுகிறது.

அவ்வாறு இயங்கிய மணம் தான் ஞானம் என்பதைச் சரஸ்வதி என்று காரணப் பெயரை வைக்கின்றார்கள். இரண்டற அந்த அணுவின் தன்மை இயக்குவது காயத்ரி.

காயத்ரி என்றால் எதைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டதோ அதன் வழுவாக அது இயக்கும் என்று பொருள்.

சாதாரண மக்களும் இதை புரிந்து கொள்வதற்கு மகரிஷிகள் தன்னுள் கண்டறிந்த நிலையும் விண்ணில் படர்ந்த நிலையும் விண்ணில் உருவான நிலையும் தன்னுள் இயக்கும் நிலையும் தனக்குள் கண்டுணர்ந்து சாஸ்திரங்களாக இவ்வாறு வெளிப்படுத்தி உள்ளார்கள்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

மற்றவர்கள் வேதனைப்படுவதை நுகர்ந்து "அவர்களுக்கு அப்படித்தான் வேண்டும்..." என்று அதை ரசித்து அத்தகைய உணர்வுகளைத் தனக்குள் வளர்த்து விட்டால்... அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

தன் குடும்பத்திற்குள் பண்பு கொண்ட நிலைகள் என்று இருப்பினும்... வேதனையை ரசித்த உணர்வுகளை... அந்த விஷத்தன்மையை இங்கே கொண்டு வரப்படும் பொழுது... அவர்களும் சிந்திக்கும் திறன் இழக்கின்றனர்.

சிந்திக்கும் திறன் இழக்கப்படும் பொழுது...
1.பாசத்தால் தன் பையனை இதைச் செய்... அதை செய்... இப்படியெல்லாம் நீ இருக்க வேண்டும்...! என்று அடிக்கடி சொல்வார்.
2.அவர் சொல்லச் சொல்ல இவருக்கு சும்மா இதே தான் வேலையாகிப் போய்விட்டது என்று
3.வெறுத்திடும் உணர்வாக... வெறுப்பை ஊட்டும் அணுக்கள் இங்கே விளையத் தொடங்குகிறது.

அடுத்தவர்கள் துயரைப்படுவதைக் கண்டு அந்த வேதனைகளை ரசித்து நுகர்ந்ததன் நிலையில்... தன் குழந்தை க்ஷேமமாக இருக்க வேண்டும் என்று இவர் வெளிப்படுத்தும் உணர்வு
1."தன்னுடன் இணைந்த மக்களைப் பிரித்து விடுகின்றது...."
2.அதே சமயத்தில் தன்னுடன் இணைந்து வாழும் தன் சமூகத்தினருடனும் "வெறுப்படையும் தன்மையை" உருவாக்குகின்றது.

இந்த உணர்ச்சியின் வேகங்கள் கூடும் பொழுது... விஷம் கலந்த உணர்வின் சொல்லாக மற்றவர் செவிகளில் கேட்கப்படும் பொழுது... தன்னை அறியாமலே நண்பனையும் (மறைமுகமாக) எதிரியாக உருவாக்கி விடுகின்றது...

அதே விஷம் கொண்ட உணர்வுகளைத் தன் வியாபாரத்திலும் அதிகமாகப் பேசப்படும் பொழுது... அதாவது சொல்லால் பொருளின் தரங்களைப் பற்றிப் பேசப்படும் பொழுது... தன்னை அறியாது அங்கே "உணர்ச்சிகள் மாறுகிறது..."

நல்ல பொருளுக்குள் விஷத்தின் தன்மை பட்டால் அதன் வேகத் துடிப்பு கொண்டு அதனைப் பயன்படுத்துவோரை எப்படி அது மயங்கச் செய்கின்றதோ இதைப்போல கேட்பவரின் சிந்தனையைக் குறைக்கச் செய்து விஷத்தின்

துடிப்பால் வாடும் பொழுது... “நல்ல சொல்களைச் சொன்னால் கேட்க முடியாது...”

அடிக்கடி பிறருடைய வேதனையைக் கண்டு ரசித்த அவர்கள்...
1.தன் இன மக்களிடமோ நண்பர்களிடமோ பேசும் பொழுதெல்லாம் விஷம் கலந்த உணர்வுகள் தோன்றி
2.அவருடன் பற்று கொள்ளும் பொழுது விஷ அணுக்களை உருவாக்கி
3.நாளடைவில் இவர் உணர்வே பகைமையாக்கிவிடும்... இவரை வெறுக்கும் உணர்வே அங்கே வளர்கின்றது.

இதையெல்லாம் யார் செய்வது...? இதைத் தான் “கீதையிலே நீ எதை எண்ணுகின்றாயோ நீ அதுவாகின்றாய்...” என்று சொல்வது.

ஒருவன் நலம் பெற வேண்டும் என்று எண்ணினாலும் அவனுக்குள் இருக்கும் வேதனை (வேதனை என்பதே நஞ்சு) என்ற வலிமை கொண்ட உணர்வுகளை நுகர்ந்தறியப்படும் போது அது தனக்குள் வளர்ச்சியாகி அது நம்மை நலியச் செய்கின்றது வலு இழக்கச் செய்கின்றது நல்ல குணத்தை.

இதை எதைக் கொண்டு நாம் செயல்படுத்த வேண்டும்...?

வெப்பத்தின் தணல் கொண்டு உலோகத்தினை உருக்கி இளகச் செய்து நமக்கு உபயோகமாகக் கூடிய ஒரு பொருளாக அதை மாற்றுகின்றோம்.

அப்படி மாற்றுவதற்கு என்ன செய்கிறோம்...?

நெருப்பிலே அந்த உலோகத்தைன் வைத்து அது சிவந்த பின் ஒரு இடுக்கி கொண்டு அதை நகர்த்தி... சம்மட்டி கொண்டு அடித்து வேண்டிய உருவாக மாற்றுகின்றனர்.

அதே போல் அந்த உலோகத்தை உலையில் வைத்துத் தண்ணீர் போல் உருகச் செய்து
1.தனக்குத் தேவையான உருவத்திற்கு மோல்டுகளை (MOULDING) வைத்து அதிலே உருக்கிய உலோகத்தை ஊற்றப்படும் போது
2.மோல்டிற்குள் இருக்கும் சந்து இடங்களில் நுழைந்து (FILLING)... எண்ணிய உருவமாக உருவாக்குகின்றார்கள்.

3.உறைந்து ஆறிய பின் எடுத்து... அதில் பிசிறுகள் இருந்தால் அகற்றித் தூய்மையாக்குகின்றனர்.

இப்படித்தான் பல பொருள்களையும் இயந்திரங்களையும் மோல்டுகளாகச் செய்து உருவாக்குகின்றார்கள் மனிதன் தன் அறிவாற்றல் கொண்டு.

இதைப் போன்று தான் நாம் பிறருடைய குறைகளையும் துயரங்களையும் வேதனைகளையும் கேட்டறிந்தால்
1.அந்த விஷத்தின் தன்மைகளை உருவாக்கும்... "நமக்குள் உருப்பெறும் உறைவிடமாக" அது மாற்றி விடுகின்றது.
2.நல்ல குணங்களுடன் இது கலந்து செல்லப்படும் பொழுது அதைச் செயலற்றதாக (தீமையின் உணர்வுகள் கலந்து மோல்ட் போன்று) ஆக்கி விடுகின்றது.
3.நன்மை செய்யும் உணர்வுகள் குறைந்து தீய விளைவுகளை உருவாக்கச் செய்கிறது.

இதை மாற்ற வேண்டும் அல்லவா...! நம்மை நாம் எப்படிக் காப்பது...?

மனித வாழ்க்கையில் நஞ்சினை வென்றவன் துருவன் துருவ மகரிஷியாகித் துருவ நட்சத்திரமாக ஆனவன். விண்ணுலக ஆற்றலைத் தனக்குள் கவர்ந்து அந்த உணர்வின் வலிமை கொண்டு வளர்ச்சி பெற்றவன் அகஸ்தியன்.

தான் பெற்ற சக்தியை... தான் கண்டுணர்ந்த பேராற்றல்களை... திருமணமான பின் தன் மனைவிக்குள் பாய்ச்சினான்.
1.அகண்ட அண்டத்தில் உருவாகும் நிலையும்... அணுக்களின் தன்மையும்
2."தீமைகளைப் பிளக்கும் நட்சத்திரங்களின் இயக்கமும்"
3.இதைப் போன்று அவன் கண்டுணர்ந்த உணர்வுகளை எல்லாம் தன் மனைவியின் செவிகளில் ஓதுகின்றான்.
4.இவன் சொல்வதை மனைவி "கண் கொண்டு கூர்ந்து உற்றுப் பார்க்கின்றது..."
5.இவனின்று வரும் உணர்வினை அது நுகரும்படி செய்கிறது
6.உயிரிலே இந்த உணர்வுகள் பட்ட பின் அறியும் ஆற்றல்மிக்க அணுக்களாக விளைகிறது.

இருவரும் ஒன்றிய நிலைகள் கொண்டு இப்படி நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து... இரு உயிரும் ஒன்றாக இணைந்து உணர்வுகளை ஒளியாக மாற்றித்

துருவ நட்சத்திரமாக... அழியாத நிலையாக என்றும் பதினாறாக வாழ்ந்து கொண்டுள்ளார்கள்.

அந்தத் துருவ நட்சத்திரத்தின் சக்திகளை நாம் பெற்றால் அவர்களைப் போன்றே நாமும் நஞ்சினை அடக்க முடியும்... "உயிருடன் ஒன்றும் உணர்வுகளை ஒளியாக்க முடியும்..." மகிழ்ந்து வாழ முடியும். இந்த உடலுக்குப் பின் பிறவியில்லா நிலை அடையவும் முடியும்.





துருவம் நுகரும் நஞ்சினை உணவாக உட்கொண்டவன் அகஸ்தியன்

அகஸ்தியன் மலைப்பகுதியில் நடந்து சென்ற பாறைகளை எல்லாம் குருநாதர் காட்டுகின்றார். அவன் ஒவ்வொரு காலங்களிலும் வாழ்ந்த பாபநாசத்தில்

பெரும்பகுதி சுழன்ற நிலையும் தலைக்காவிரியில் அகஸ்தியனுடைய சுழற்சி வட்டமும் அதிகம்.

அதே போல் இமயமலையிலும் சில பகுதிகளில் அவர் பெரும்பகுதி சுழன்ற நிலைகளில் வேகாக்கலை என்ற நிலைகள் கொண்டு அழிந்திடாத நிலைகள் இன்றும் உண்டு.

ஆனால் சாகாக்கலையாக மந்திர ஒலிலகளால் செயல்படுத்தப்பட்ட நிலைகள் பூமியிலே படர்ந்து இருந்தாலும் அது எல்லாம் அழிந்து விடுகின்றது. அதே சமயத்தில் அதனால் விஷத்தன்மையைத் தான் படரச் செய்கின்றத.

குருநாதர் இதையெல்லாம் தெளிவாகக் காட்டுகின்றார்.

வேகாக்கலை என்ற நிலையில்
1.மகரிஷிகள் தங்கள் உணர்வின் ஆற்றலை தனக்குள் எவ்வாறு உயிர் ஒளியின் துடிப்பாக இயக்கமாக இருக்கின்றதோ அதைப் போன்று
2.இந்த உயிரின் உணர்வின் தன்மைகள் கொண்டு இணைக்கும் சக்தியாக
3.நஞ்சினை அடக்கி வைரம் ஒளி சுடராக இருப்பது போன்று நம் உடலில் இருக்கக்கூடிய உணர்வுகள் அனைத்தையும்
4.வாழ்க்கையில் எண்ணும் நஞ்சின் உணர்வுகள் நல்ல உணர்வுகள் கலந்தாலும்
5.அந்த ஞானிகள் விண்ணுலக ஆற்றலை எடுத்து அதன் மேல் அடுக்கடுக்காகப் பரப்பி
6.இந்த உணர்வின் ஆற்றலை இந்த வாழ்க்கையில் வந்த நஞ்சினை ஒடுக்கி
7.இந்த உணர்வின் தன்மையை மேற்கொண்டு இந்த உணர்வின் ஒளி அலையாகத் தன் உயிருடன் ஒன்றி
8.துருவத்தைக் கண்டுணர்ந்து துருவம் நுகரும் நஞ்சினைத் தனக்குள் உணவாக உட்கொண்டு
9.அந்த உணர்வின் சக்தியைத் தனக்குள் பரப்பி அதனின் துணைகொண்டு ஒளியின் சிகரமாக
10.அகஸ்தியன் துருவத்தை நுகர்ந்துணர்ந்து துருவ உணர்வின் தன்மையை தனக்குள் ஒளியாக மாற்றி
11.எந்தத் துருவத்தின் நிலைகள் அவன் ஈர்ப்பாக எடுத்தானோ
12.பூமிக்குள் வரும் இந்த நஞ்சினை மற்றது விளையாது அதையே தனக்குள் மாற்றி அமைத்து
13.ஒளியின் சிகரமாக இன்றும் சுழன்று கொண்டுள்ளான் அகஸ்தியன் துருவ மகரிஷியாகி துருவ நட்சத்திரமாக...!

இதையெல்லாம் குருநாதர் உணர்த்திக் காட்டுகின்றார்.

அவர்கள் உணர்த்திய அந்த உணர்வின் வழி விண்ணுலகில் சப்தரிஷி மண்டலம் அதனுடைய ஈர்ப்பு வட்டத்தில் எவ்வாறு ஒளியாகச் சுழன்று கொண்டுள்ளது...? என்பதையும் காட்டுகிறார்.

மனிதனின் நிலைகளில் முழுமையான... உணர்வின் தன்மை முழுமையாக்கி அதன் வழி அனைவரையும் எவ்வாறு அங்கே அழைத்துச் செல்கிறார்கள்...? என்றும் காட்டுகின்றார்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

மனிதன் "செயற்கையாக" வலுக்கொண்ட உணர்வுகளைச் சுவாசிப்பதற்காகத் தன் உடல் தசைகளை இயக்குகின்றான். எப்படியும் உடலில் வலுவைச் சேர்க்க வேண்டும் என்று அந்த உணர்வின் தன்மை கொண்டு "கை கால் அங்கங்களை மூட்டையைக் கட்டி அடிப்பதும்... கை கால்களை ஓங்கி அசைப்பதும்..." இந்த உணர்வின் தன்மை சிறுகச் சிறுக எடுக்கப்படும் பொழுது... தசைகளில் வலுவின் தன்மை வருகின்றது.

வலுவான நிலையினை உருவாக்கும் நிலையாகப் பித்த சுரப்பிகள் அதிகமாகச் சுரக்கின்றது. இப்படிச் சுரக்கப்படும் பொழுது என்னவெல்லாம் நடக்கிறது...?

1.சாதாரண மனிதன் கால் கிலோ கறியைச் சாப்பிடுவதே சிரமம்.
2.ஆனால் இவன் பத்துக் கோழியைச் சிறுகச் சிறுக ஒவ்வொன்றாக கூட்டி தன் உணவாக உட்கொண்டு தன் உடலிலே (தசைகளில்) வலு சேர்ப்பான்.

மிருகத்தின் விஷத் தன்மை கொண்ட உணர்வுகளை இவனுக்குள் சேர்க்கச் சேர்க்க பித்த சுரப்பிகளும் அதிகமாகச் சுரக்கப்பட்டு... மிருகங்களுக்கு எப்படி வலு இருக்கின்றதோ அதைப் போல் அவன் உடலில் தசைகளில் வலு உருவாகி... "சாதாரண மனிதனைக் காட்டிலும் மிருக பலம் கொண்டிருப்பான்..."

சாதாரணமாக... இரண்டு இன்ச் (2") கனமுள்ள ஒரு கம்பியை வலுவான கருவி கொண்டு தான் வளைக்க முடியும். ஆனால் இவனோ தன் கையிலேயே ஒரு முறுக்கைச் சுழட்டுவது போன்று சுற்றி வளைத்து விடுவான்.

யானைக்கு எந்த வலு உண்டோ... அது போல பல மிருகங்களின் உணவை உட்கொள்ளும் பொழுது அவனின் உழைப்பும் இந்த உணர்வின் தன்மை நினைவும்... இவனுக்குள் வலு சேர்க்கும் உணர்வாக வளர்கின்றது.

இப்படி வளர்ச்சி அடைந்தவன் சாதாரண மனிதனைக் காட்டிலும் வலுக்கொண்டவன் ஆகிவிடுன்றான். ஆனால் அனேகமாக அவனுக்கு நோயே அதிகமாக வருவதில்லை...!

கடுமையான விஷம் இருக்கும் பொழுது மிருகங்கள் தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றது. நாளடைவில் இந்த விஷத்தின் தன்மை அதிகமாகி முதிர்வடையப்படும் பொழுது மிருகங்கள் அதனுடைய வளர்ச்சியின் தன்மை வாழும் காலம் குறுகியதாக இருக்கின்றது.... அதற்குள் மடிந்து விடுகின்றது

அதே போன்று ஒரு மனிதன் இப்படி விஷத்தன்மையைத் தனக்குள் வலுவாக்கிக் கொண்டாலும்...
1.விஷத்தின் தன்மை உடலில் அதிகரிக்கப்படும் பொழுது
2.இருதய வாயில்களிலோ சிறு மூளை பாகங்களிலோ உடனடியாகத் தெறித்து இரத்தக் கசிவாகி
3.நோய்வாய்ப் படாதபடி அவன் மடிந்து விடுவான்.

ஆக... அசுர உணர்வு கொண்டு மனித உடலை விட்டுச் சென்றால் எந்தக் கோழிகளை அதிகமாக உட்கொண்டானோ இறந்த பின் உயிரான்மா கோழியின் ஈர்ப்புக்குள் தான் செல்லும்.

பெரும்பகுதி பயில்வானாக இருப்பவர்கள் அனைவருமே கோழியைத்தான் அதிகமாக உட்கொள்வார்கள். மற்ற பறவை இனங்களையும் உட்கொள்வார்கள் பறவை இனங்கள் அனைத்தும் விஷத்தன்மைகளை அதிகமாக உட்கொண்டாலும் அதை ஜீரணிக்கக் கூடிய வல்லமை பெற்றது.

ஆகவே அந்த உடல் உறுப்புகளை இவன் உணவாக உட்கொள்ளும் பொழுது அது எப்படி விஷத்தினை அதனின் உணர்வு கொண்டு தனக்குள் வலுவானதோ இதைப் போன்று இவனுக்குள் உணவாக உட்கொள்ளும் ரசங்கள் பித்த சுரப்பிகளின் வளர்ச்சி அதிகமாகின்றது.

அதன் வழி கொண்டு அவன் உடலில் இருக்கக்கூடிய அணுக்கள் விஷத்தன்மையாக வருகின்றது. யானைக்கு எப்படி வலுவோ புலிக்கு எப்படி

வலுவோ மற்ற மிருகங்களுக்கு எப்படி வலு வருகிறதோ இதைப்போல இவனுக்குள் வலு வருகின்றது.

1.ஆனால் இவன் மிருக குணம் கொண்டு தான் இருப்பான்
2.அவனிடம் யாராவது சாந்தமாகப் பேச முடியுமா என்றால் இல்லை.
3.அசுர உணர்வு கொண்டு பேசுவதும்... அவனை எதிர்த்துக் குறையாகப் பேசும் நிலை வந்தால்... அவனைத் தாக்கும் நிலையில் தான் வருவான்.

ஆகவே... அவனை மதித்து நடக்க வேண்டும். குத்துச்சண்டை வீரர்களிடம் நாம் அணுகினால் அசுர உணர்வைத் தான் அவன் காட்டுவான் மனித உடலிலேயே மிருகமாக மாற்றிக் கொள்கின்றனர்.

மற்றவர்கள் தன்னைப் போற்ற வேண்டும் என்று எண்ணுகின்றான். கோழி மற்ற பறவைகள்... விஷத்தை முறிக்கும் உணர்வுகள் அவன் உடலில் விளைந்ததால்... விஷத்தன்மையை ஒடுக்கும் தன்மை வருகிறது. வலுக் கொண்டவனாக இருக்கின்றான்.

ஆனாலும் விஷத்தை அதிகமாகச் சேர்க்கப்படும் பொழுது “அடுத்த பிறவி எது...?” என்றால் கோழியாகத்தான் பிறப்பான்.
1.இன்று ரசித்து அதை உணவாக உட்கொள்கின்றான்.
2.எதை ரசித்து உட்கொண்டானோ உடலில் விளைய வைத்த அந்த உணர்வுகள் உயிருடன் சேர்த்து ஆன்மாவாக மாறும்.
3.எந்த மணத்தின் தன்மை ஆன்மாவிலே பெருகியதோ உடலை விட்டுச் சென்ற பின் அங்கே கோழிக்குள் தான் செல்வான்.



விஷமான உயிரினங்களை உட்கொண்டு உடல் வலு பெற்றவர்களே பயில்வான்கள். ஆனால் கடைசி முடிவு அந்த உடலுக்குள் சென்று அந்த உடலைத் தான் பெற முடியும்.

விண்ணின் ஆற்றலை நுகர்ந்து அதைத் தன் உயிரான்மாவில் வலுவான சக்தியாக ஒளிச் சுடராக மாற்றி அழியாத வாழ்க்கை வாழ்பவர்களே மெய் ஞானிகள்.



மிகவும் சக்திவாய்ந்த சக்தி

நாம் எந்தெந்தக் குணங்களை எண்ணுகின்றோமோ அந்த குணத்தின் அணுவின் தன்மை நம் உடலுக்குள் ஜீவ அணுவாக மாற்றும் பொழுது உயிர் எவ்வாறு கடவுளாக இருக்கின்றதோ அதே குணத்தை நமக்குள் கடவுளாக இருந்து இயக்கும் சக்தி பெறுகின்றது.

இதுதான் ஓமுக்குள் ஓ...ம் ஓமுக்குள் ஓ...ம் ஓமுக்குள் ஓ...ம் என்பது. நம் உயிரின் தன்மை ஓ...ம் என்று இயக்கினாலும் நாம் எண்ணும் குணங்கள் ஓம் என்று அதே ஜீவ அணுவாக வளர்வதைத்தான் ஓமுக்குள் ஓ...ம் ஓமுக்குள் ஓ...ம் ஓமுக்குள் ஓ...ம் என்பது.

ஜீவ அணுவிற்குள் அணுவாக மாறி அணுவின் தன்மை அணுவாக மாறிக் கொண்டே உள்ளது என்பது ஞானிகளால் சாஸ்திரங்களில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

ஆகவே நாம் எத்தகைய குணங்களை எண்ணுகின்றோமோ அதை நமக்குள் ஜீவ அணுவாக மாற்றி விட்டால் அது நமக்குள் இருந்து கடவுளாக அந்தக் குணத்தை அது வளர்த்துக் கொண்டே இருக்கும்.

உயிரும் கடவுள் தான். நாம் எண்ணிய உணர்வுகள் ஜீவ அணுவாக மாறி விட்டால் அதுவும் கடவுள் தான்.

கடவுள் என்ற தனித்தன்மை எங்கும் இல்லை இன்றும் இல்லை. தனித்து... தனியாக ஒரு கடவுள் இருக்கின்றான் என்றால் அப்படி இல்லை.

இந்தப் பிரபஞ்சமும் மற்ற உலகங்களோ உருவாவதற்கு முன் சக்தியின் தொடராக உருவாவதைச் சக்தி என்று பொருள்படும்படி அன்றைய ஞானிகள் காரணப் பெயர்களை இட்டுள்ளார்கள்.

சக்திகளில் எத்தனையோ வகையான சக்திகள் உண்டு. அவைகளில் விஷமே மிகவும் சக்தி வாய்ந்த சக்தி.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

இயற்கையின் செயல்கள் எவ்வாறு இருக்கிறது...? என்ற நிலையைச் சைவ சித்தாந்தங்கள் தெளிவாகக் கூறுகின்றது.

ஒவ்வொரு உணர்வும் அது இணைந்து கொண்ட பின்
1.உணர்ச்சியின் வேகங்கள் எவ்வாறு சூரியனால் மாற்றப்படுகின்றது...?
2.நுகர்ந்த உணர்வின் ஆற்றலை எவ்வாறு மாற்றுகின்றது...? என்ற நிலையை
3.தாவர இனச்சத்தைக் கவர்ந்த சூரியனின் காந்தப்புலன்கள் தாவர இனங்களுக்கு இரையானாலும்
4.அதே உணர்வுகளை உயிரணு நுகரப்படும் போது – "சைவ சித்தாந்தமாக இருந்து... வேதாந்தமாக" அது மாறுகின்றது.

உணர்வின் ஒலியின் தன்மை கொண்டு உணர்வின் ஒலிகளை எழுப்பி அந்த உணர்வுக்கொப்ப உடல் மாறி... சைவம் அசைவமாக எவ்வாறு மாறுகின்றது...? அசைவத்திற்குள் ஒன்றுடன் ஒன்று மோதும் பொழுது உணர்வின் அணுக்கள் மாற்றங்கள் எவ்வாறு ஆகின்றது...? என்பதைச் சைவ சித்தாந்தம் தெளிவாகக் கூறுகிறது.

"சைவ சித்தாந்தம்" – தாவர இனங்களில் மாற்றம்... செடி கொடிகள் அது உருமாறுவதும் அதனுடைய உணர்ச்சிகளைக் கூட்டுவது.

“வேதாந்தம்” – உயிர் அணுக்கள் உருவான பிற்பாடு அதனின் உணர்ச்சியின் தன்மை கொண்டு இயக்கச் சக்தி என்று “உடல் பெற்ற அசைவம்” என்ற நிலை தான்.

ஆனால் சைவ சித்தாந்தம் படித்தவர்கள் வேதாந்தத்தைக் கண்டபின் அவர்கள்ள் இரண்டு பேருமே ஒருவருக்கொருவர் முறைத்துக் கொள்வார்கள். நீ பெரிதா...? நான் பெரிதா...? நீ படித்தது இவ்வளவுதான்... நான் படித்தது இவ்வளவு...! என்று வாதித்துக் கொண்டு கற்றுக் கொண்ட உணர்வுகளை முழுமையைத் தெரிவதில்லை.

ஒருவருக்கொருவர் “நான் தெரிந்து கொண்டேன்... என்னால் அனைத்தும் முடியும்...!” என்று அகம் கொண்டு செயல்படுவார்கள்.

உதாரணமாக மிளகாயை எடுத்துக் கொண்டால் காற்றிலிருந்து காரத்தின் சத்தை எடுத்துத் தான் அந்த கார குணம் கொண்ட மிளகாயாக வளரும்.

இதைப் போன்று... “படித்துணர்ந்தவர்கள்” எதனின் உணர்வைத் தனக்குள் எடுத்துக் கொண்டனரோ அதனின் இயக்கமாக... அதனின் நிலையிலேயே... மற்ற உண்மைகளை அறியாதபடி... எதன் வலிமை பெற்றார்களோ அதன் நிலைகளிலே சென்று அடைகின்றார்.

சைவ சித்தாந்தத்தின் உண்மை இன்று தலை கீழாக மாறிவிட்டது.

காரணம் அரசர்கள் போர் முறை கொண்டு வரப்படும் பொழுது இந்த உண்மையின் இயக்கங்களை அறியாது... காலத்தால் மாற்று அரசர்கள் வரும் பொழுது...
1.அன்று தத்துவஞானிகள் கொடுத்ததைத் தனக்குச் சொந்தம் என்று
2.தனக்குகந்த சட்டங்களாக இயற்றப்பட்டுக் காவியமாகப் படைக்கப்பட்டு
3.அதைத் தன் மக்களுக்குப் பாய்ச்சப்படும் பொழுது “இதுவே அவர்களுக்குள் கடவுளாகிறது...”

கடவுளுக்கு இன்னென்ன சாங்கியங்களைச் செய்தால் போதும்... அதன் உணர்வின் செயல்கள் இப்படி இருக்கும்...! என்று இவ்வாறு அரசர்களால் உருமாற்றப்பட்டு “அசைவம்...” (என்றால் என்ன...?) என்ற நிலைகளை அறிய முடியாத நிலைகளாகக் காலத்தால் மறைந்து விட்டது.

இப்படி ஒவ்வொரு அரசனும் தான் கண்டறிந்தது மாற்று அரசர்கள் கண்டால் உண்மையின் இயக்கங்கள் அது போய்விடும்... மற்றவர்களுக்கு அது தெரியக் கூடாது என்று மறைத்து விட்டார்கள்.
1.அப்படி மறைக்கப்பட்ட உண்மைகளைத் தான் இன்று இதுவா... அதுவா...? என்று ஊசலாடிக் கொண்டு
2.கடவுளை நாம் தேடிக் கொண்டிருக்கின்றோம்...!

வேதாந்தங்கள் என்பது வேதங்களாக மாற்றப்பட்டு விட்டது தமிழ் மொழியின் இசை (ஒலி) வேதங்களில் உண்டு. சில ஒலிகள் அதனுடைய இசை தான் மாற்றப்பட்டுள்ளது.

தமிழில் இருந்து தான் வேதங்கள் உருவானதா...? வேதத்திலிருந்து தமிழ் உருவானதா...? என்றும் போர் முறை கொண்டு உண்மைகளை அலசி ஆராய்ந்து... தேடிக் கொண்டுள்ளோம்.

இதுதான் உண்மை... அது பொய்...! என்று போர் முறை கொண்டு மொழி அடிப்படையில் ஒருவருக்கொருவர் பகைமை உணர்வை வளர்த்துக் கொள்ளத்தான் முடிகின்றது.

உண்மையின் இயக்கங்களை நாம் அறிய முடியாதபடி
1.குறுகிய கால வாழ்க்கையில் நம்மை அறியாதபடி குறைகளை வளர்த்துக் கொள்வதும்
2.நிறைவு பெறும் நிலைகளை இழந்து நற்செயல்கள் இழக்கப்பட்டு
3.மனிதனல்லாத உருவை உருவாக்கும் உணர்வையே மனிதர்கள் இன்று வளர்த்திடும் நிலையாக வந்து விட்டது.



“சைவ சித்தாந்தம்” - தாவர இனங்களில் மாற்றம்... செடி கொடிகள் அது உருமாறுவதும் அதனுடைய உணர்ச்சிகளைக் கூட்டுவது.

“வேதாந்தம்” - உயிர் அணுக்கள் உருவான பிற்பாடு அதனின் உணர்ச்சியின் தன்மை கொண்டு இயக்கச் சக்தி என்று “உடல் பெற்ற அசைவம்” என்ற நிலை தான்.



ஒரு கட்டுப் பீடி... 10 சிகரெட்டை வைத்து நோயை நீக்கும் சக்தி கொடுத்தார் குரு – சூடு போட்ட பூச்சியினிடம் அனுபவம்

குருநாதர் எமக்குக் கொடுத்ததை நீங்களும் பெற வேண்டும் என்ற ஆசையில் தான் குரு காட்டிய அருள் ஒளிகள் அந்த ஒளி பெறும் உணர்வின் ஆற்றல் உங்களுக்குள் பெருக வேண்டும்.

நீங்கள் செய்த நன்மையின் தன்மை இருள் சூழச் செய்யும் விஷத்தின் தன்மை அகல வேண்டும். நீங்கள் இடும் மூச்சுலைகள் இங்கே படர்ந்துள்ள நஞ்சின் தன்மையை அகற்ற வேண்டும்.

இதைக் கேட்டுணர்ந்தோர் உள்ளங்களிலும் இந்த அரும்பெரும் சக்தி ஊடுருவி அவர் அறியாது இருள் சூழச் செய்யும் நிலைகள் விலக வேண்டும்... மெய்ப்பொருள் காண வேண்டும்.

அந்த மெய்ப்பொருளை அறிய வேண்டும் என்ற உணர்வினை நீ எப்படிப் பருக வேண்டும் என்று தான் காட்டுக்குள் என்னை அழைத்துச் சென்று உணர்த்துகின்றார்.

வேஷ்டி தான் கட்டி இருக்கின்றேன். ஆனால் காட்டிற்குள் கொசு அதிகமாக உண்டு. யானையே அந்த இடத்தில் நிற்காது. அது போன்ற கொசுக்களை எம்மீது தாக்க வைக்கின்றார்.

அது மட்டுமல்லாதபடி அங்கே ஒரு எறும்பு இருக்கின்றது. ஊறிக்கொண்டே செல்லும்/ பேசாமல் விட்டால் அது பாட்டுக்குப் போகும். ஆனால் தொட்டு விட்டால் போதும்... லபக் என்று அப்படியே கடிக்கும்.

விஷமான எறும்பு கடித்த பின் அந்த இடத்திலே தடிப்பாகிவிடும். பத்து இருபது எறும்பு கடித்தால் போதும் மயக்கம் போட்டு கீழே விழுந்து விடுவோம்.

அத்தகைய எறும்புகள் ஊறி வரும் பொழுது அது எம்மைக் கடிக்கின்றது கை கால் எல்லாம் வீங்குகிறது. இப்படிச் செய்து விட்டாரே என்று குருவை எண்ணி ஏங்குகிறேன்.

வேதனை பொறுக்காதபடி என்ன வாழ்க்கை...? என்று உடலில் எல்லை கடந்த துன்பம் வரப்படும் பொழுது சிந்தனையற்ற நிலைகள் வருகின்றது.

இதைக் காட்டிலும் இன்னொரு பூச்சி இருக்கின்றது. அது மேலே பட்டால் சூடு போட்டது மாதிரி ஆகிவிடும். அந்தப் பூச்சியில் இருக்கும் விஷத்தின் தன்மை உடலில் பட்டால் சூடு கோலால் சுட்டது போன்று வார் வாராக அச்சு விழுகின்றது..

எரிச்சல்... நெருப்பு மேலே பட்டால் எப்படி எரியுமோ அப்படி எரிகின்றது. அந்த இடத்திலே எம்மை அமரச் செய்து போகனைப் பற்றியும் காட்டுகின்றார். அந்தச் சித்தர்கள் அதைப் போக்க ஆற்றல்மிக்க நிலைகள் எடுப்பதையும் காட்டுகின்றார்.

சிறு பூச்சி தான்... அது உன் மீது ஊர்ந்து செல்லப்படும் பொழுது உன்னுடைய உணர்வின் ஆற்றலுக்கும் அந்தப் பூச்சியின் உணர்வுக்கும் எதிர் நிலையாகும் பொழுது அது எப்படிச் சூடாகி... நெருப்பில் இட்டால் எப்படியோ அது போல மேலே பட்டால் கருகுகின்றது.

அப்படி என்னைச் சுடும்படி வைக்கின்றார். ஒன்றல்ல பல...! அது மேலே ஊறுகின்றது... என்னை இம்சிக்கின்றது... அலறுகின்றேன். குருநாதர் அதற்கு முன் உபதேசித்த உணர்வுகளை எல்லாம் மறந்து விட்டேன்... உடலில் இருந்து இதைத்தான் எண்ணுகின்றேன்.

போகன் இதையெல்லாம் எப்படி மாற்றி அமைத்தான்...? தனக்கு வரும் துன்பங்களை நீக்க வலுக்கொண்ட உணர்வின் ஆற்றலைத் தனக்குள் பெருக்கி அந்தத் துன்பத்தை நீக்கி அந்த உணர்வைத் தனக்குள் வளர்த்துப் பிறர் துன்பத்தை எப்படிப் போக்கினான்...?

சீதா ராமா சுவை கொண்ட சொல்லாக வெளிவரும் பொழுது அந்த உணர்வுகள் அம்பாகப் பாய்ந்து அவர் உடலில் உள்ள தீய விளைவுகளை எப்படி மாற்றுகின்றது...? காட்டுக்குள் அமர வைத்து இத்தகைய தொல்லைகளுக்கு மத்தியில் காட்டுகின்றார்.

இந்த நினைவை நான் ஏற்கப்படும் பொழுது... நீ இப்படி வேதனைப்படுகின்றாய். ஆனால் அது போன்ற பூச்சிகளாகவும் நீ இருந்திருந்தாய... அந்த எறும்பாகவும் நீ இருந்தாய்.

உன் உயிர் தான் அதிலிருந்து படிப்படியாக வளர்த்தது. அந்தந்த உடல்களில் தன்னைக் காத்துக் கொள்ள அந்த உணர்வின் ஆற்றல் வருகின்றது. காத்துக் கொண்ட உணர்வின் தன்மை அதற்குள் கலந்து உணர்வின் சத்தாக விளைந்து மனிதனாக வரப்படும் பொழுது இவை அனைத்திலிருந்தும் மீட்டிடும் உணர்வே எண்ணங்களாக உனக்குள் எப்படி விளைந்தது...? என்று காட்டுகின்றார்.

ஏனென்றால் இதெல்லாம் பாட நூல்களுக்கு வராது.

குரு காட்டிய அருள் வழியில் ஒரு மனிதனின் உடலுக்குள் எப்படி இயக்குகின்றது...? என்ற நிலையில் ஒரு கட்டுப் பீடிகட்டைக் கொடுக்கின்றார்... தொப்பி சிகரெட் பத்தை ஒன்றாக வைத்து வாயில் வைத்து ஊது என்றார்.

அவர் சொன்ன முறைப்படி குடிக்கப்படும் பொழுது அருள் மணங்களை எவ்வாறு சுவாசிக்க வேண்டும் என்று உணர்த்துகிறார்...? காற்றிலிருந்து இப்பொழுது எப்படிச் சுவாசிக்கின்றாயோ...? இதை எப்படி ரசிக்கின்றாயோ... இதை எப்படி வெறுக்கின்றாயோ...? இதைப் போல அது எந்தெந்த நிலைகளுக்கு எப்படி எப்படி என்று நுகரும்படிச் செய்கின்றார்.

அந்த வாசனைகளை நுகர்ந்த பின் என் உடலிலே அந்த சூடு போன்ற இருந்த நிலைகள் மாறுகிறது. அந்தச் சூடு மாறும் பொழுது இதே உணர்வு கொண்டு அந்தப் பூச்சியினையும் நேர்கொண்டு பார் என்றார் குருநாதர்.

அப்போது அந்தப் பூச்சி என்ன ஆகிறது...? அதை முறிக்கும் உணர்வை உனக்குள் எடுத்து உன் பார்வையை நீ அங்கே செலுத்தப்படும் பொழுது அதனுடைய விஷத்தன்மைகள் எப்படிச் செயல் இழக்கின்றது...?

விஷம் செயலிழந்த பின் பூச்சி என்னாகின்றது...? என்று காட்டிற்குள் அமைத்து இத்தனையும் காட்டுகின்றார் குருநாதர்.

பிறரின் வேதனைகளை "இரக்கப்பட்டுக் கேட்டறிந்தால்" வரும் தீய விளைவுகள்

உதாரணமாக கோழியோ பாம்போ கருவுற்றால் அவைகள் கேறும். குருவி மற்ற அதைப் போன்ற முட்டையிடும் சில இனங்கள் அனைத்துமே கேறத்தான் செய்யும்.

மனிதனின் வாழ்க்கையில் வேதனைப்படுவோர் உணர்வை நுகர்ந்து (சுவாசித்து) விட்டால் அது இரத்தத்தில் கலந்துவிடுகிறது. பின் கருத்தன்மை அடைகின்றது.

1.மீண்டும் மீண்டும் அவரின் வேதனையை எண்ணி நாற்பத்தி எட்டு நாட்களுக்குள் இந்த உணர்வுகள் முழுமை அடைந்தால்
2.எந்த உடலிலே அந்த வேதனை உணர்வுகள் அணுக்களாக விளைந்ததோ
3.அதே மாதிரி நம் இரத்த நாளங்களிலும் அந்த அணுவை உருவாக்கும் "கரு முட்டைகளாக" மாறி விடுகின்றது.

அவ்வாறு கரு முட்டைகள் ஆகும் பொழுது அந்த இரத்தம் இரத்தநாளங்கள் வழியாகச் சுழலும் போது அந்தக் குறித்த காலம் வரும் பொழுது என்ன நடக்கின்றது...?

வேதனைப்படுவோரை... "அடப்பாவமே... நல்ல மனிதன் இப்படி அவதிப்படுகின்றானே...!" என்று தான் அவர்கள் நோயாக அல்லது துன்பத்தில் வாடுவதை நாம் எண்ணுகின்றோம்.

கோழி எப்படிக் கருவுற்ற பின் அது கேறுகின்றதோ அதைப்போல நுகர்ந்த உணர்வுகளை “மீண்டும் மீண்டும் திரும்ப எண்ணும் பொழுது” அது கோழி கேறுதல் போன்று ஆகிவிடுகிறது

அவர் உடலிலே நோயாக உருவாக்கிய அணுவின் தன்மை நம் இரத்தங்களிலே கருவுற்று முட்டையாக மாறுகின்றது.
1.அந்த முட்டை இரத்தத்தில் சுழன்று வரும் பொழுது உடலுக்குள் சிறு மூளை பாகம் வரை செல்லும்... மற்ற எல்லா பாகங்களுக்கும் சென்று வரும்.
2.முட்டையாக இருக்கும் பொழுது முதலில் அந்த வேதனை நமக்குத் தெரியாது.

ஆனால் இரத்த நாளங்கள் வழியாக நம் உடல் உறுப்புகளுக்குள் சுழன்று வரும் பொழுது... இருதய வாயில்களில் இரத்தங்களை வடிகட்டி வரும் அந்த இடத்தில் இந்த முட்டை சென்றால்... இது வடிகட்டும் திறன் கொண்டு இழுத்து அனுப்பப்படும் பொழுது துடிப்பின் தன்மை அழுத்தமாகும் பொழுது அந்த முட்டை வெடித்து விட்டால் போதும்.

வேதனையை உருவாக்கும் அந்த விஷமான அணு அந்த இருதய பாகத்தில் சேர்ந்து விடுகிறது. சேர்ந்த பின்
1.அந்த மனிதன் எப்படி வேதனைப்பட்டானோ அதே வேதனை உணர்வுகள் இருதய வாயிலே தோன்றி
2.பளீர்... பளீர்... என்று மின்னும்... ஊசி குத்துவது போல் இருக்கும்.
3.நெஞ்சு வலிக்கின்றது... எப்படியோ எனக்கு மயக்கமாக வருகிறது என்று சொல்லத் தொடங்குவோம்.

நெஞ்சு வலிக்கின்றது என்று ஒரு அணுத்தன்மையாக முதலில் அடைந்தாலும்... முட்டை வெடித்து முட்டையை விட்டு வெளிவந்த குஞ்சுகள் தன் இரைக்காக (வேதனைப்படும்) உணர்ச்சிகளை உந்தும்.

கோழி முட்டைகள் பொரிந்த பின் வெளி வந்த குஞ்சுகள் கத்தும். அப்போது தாய்க்கோழி கூவி இரையைத் தேடித் தன் குஞ்சுகளுக்குக் கொடுக்கின்றது.

அதைப் போல நமது உயிர் நாம் எண்ணியதை அணுக்களாக உருவாக்கிய பின் உணவு கொடுக்கும்.
1.இருதய வாயிலில் உருப்பெற்ற அணுக்களுக்கு... அந்தக் குஞ்சுகள் இரைக்காக உணர்ச்சியைத் தூண்டும்.
2.அப்போது வலி வரும்... மீண்டும் வலிக்கின்றதே வலிக்கின்றதே என்று

எண்ணும் போதெல்லாம்
3.அந்த வலியின் உணர்வை எடுத்து அந்த அணு தன் இனத்தையே பெருக்கத் தொடங்கும்.

முதலிலே லேசாகத்தான் நெஞ்சுவலி இருந்தது பின் அது அதிகரித்து அணுக்களின் தன்மை தன் இனத்தைப் பெருக்க ஆரம்பிக்கும் பொழுது "இருதய வால்வுகள்" விஷத்தன்மையான நிலைகள் கொண்டு "அது விரிவடையும்... அல்லது ஒடுங்கி நிற்கும்...."

விஷ வாயுவின் தன்மை உற்பத்தியாகத் தொடங்கினால் அதனுடைய முடிவு... தாங்காதபடி அந்த ரத்த நாளங்கள் வெடித்து விடும். வெடித்தால் ஒன்றும் செய்ய முடியாது... இது ஒரு பக்கம்.

ஒருவர் ஹார்ட் அட்டாக் வந்து இறக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம்.... திடீரென்று இயக்கச் சக்தி குறைவு.

ஆனால் அவர் ,மீது பற்று கொண்ட ஒருவர் அவர் மீது நினைவாற்றலைச் செலுத்தி... "திடீரென்று இறந்து விட்டாரே..." என்று அடிக்கடி இந்த வேதனையான உணர்வுகளை நுகர்ந்தால் இந்த அணுத்தன்மை சிறு மூளை பாகம் செல்லும் பொழுது அங்கே வெடித்து விட்டால் இந்த உணர்வின் தன்மை கூடும்.

அது உயிர் பாகம் வரும் பொழுது... நமது உயிரோ கண் காது மூக்கு உடலுக்கு ஆணையிடும். எந்த மனித உடலிலிருந்து இந்த விஷத்தன்மை நுகரப்பட்டு அணுவானதோ அதைக் கவர்ந்து அதே உணர்வின் தன்மையை இங்கே நமக்குள் உருவாக்கும்.

பின்...
1.சிறு மூளை பாகங்களில் இருதயத்தை இயக்கக்கூடிய அந்த நரம்புகளில் தொடர்பு இழந்து விட்டால்
2.இருதயம் இயங்காதபடி ஒரு நொடிக்குள் நாளை மாய்த்து விடும்.

இதை எல்லாம் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே... எத்தகைய தீமைகளையும் வேதனைகளையும் துன்பங்களையும் பார்க்க... கேட்க... நுகர நேர்ந்தால் அதை மாற்றிட நமது குருநாதர் காட்டிய வழியில்

1.உடனுக்குடன் துருவ நட்சத்திரத்தின் சக்தியை இரத்த நாளங்களில் கலக்கச் செய்து

2.இரத்தத்தில் உள்ள ஜீவான்மா ஜீவணுக்கள் பெற வேண்டும் என்று அந்தச் சக்தி வாய்ந்த உணர்வுகளை இணைத்து.

3.தீமைகள் இரத்தத்தில் கருத்தன்மையாக உருவாகதபடி தடுத்து நம் வாழ்க்கைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதற்குத் தான் உணர்வின் இயக்கங்களை உங்களுக்குள் தெளிவாக்கி வேதனைகளை மாற்றி அமைக்கும் உபாயங்களைச் சொல்லி... அருள் வழியில் இந்த வாழ்க்கை வாழ்ந்திட... “அதற்குண்டான ஒரு பழக்கமாக... ஒரு பயிற்சியாக... இதைக் கொடுக்கின்றோம்...”





என்னிடமிருந்து உயர்ந்த சக்தியைப் பெறும் சரியான முறை

அருள் ஞானத்தின் உணர்வை நீங்கள் எடுத்தால் உங்களுக்குள் தீமை விளைவிக்கும் நிலைகளை அது தூய்மைப்படுத்தும். இது தான் விநாயகர் சதுர்த்தி.

1.உங்களை அறியாது வந்த தீமையான உணர்வுகளை நீக்கும் ஆற்றல் – நீங்கள் அந்த சக்தி பெற வேண்டும் என்பதற்குத்தான்
2.என் குருநாதர் காட்டிய நிலைகளை உணர்வுகளை நான் பெற வேண்டும் பெற வேண்டும் என்ற உணர்வை வளர்த்து
3.அந்த உணர்வின் எண்ணங்களை இரவிலும் சரி இன்றும் சரி இப்போதும் சரி அந்த நினைவு கொண்டு தான் அலைகளைப் பரப்புகின்றேன்.
4.எல்லா நேரத்திலும் இரவிலும் இன்றும் அதைத் தான் செயல்படுத்துகின்றேன்.

பல ஆயிரம் பேர் எம்மைச் சந்திக்க வருகின்றீர்கள்... சாமி எனக்குக் கஷ்டமாக இருக்கின்றது... தலை வலிக்கின்றது... மேல் வலிக்கின்றது என்றெல்லாம் உணர்வைப் பாய்ச்சுவீர்கள்.

என் உணர்வு உங்களிடம் இருப்பதால் எந்த வகையில் நீங்கள் எம்மை பதிவுப் செய்கின்றீர்களோ அந்த வகையில் தான் உங்களிடம் வரும்.

சாமி கஷ்டத்தை எல்லாம் தீர்ப்பார் என்று எண்ணிப் பதிவு செய்து விட்டால் அதைத்தான் நீங்கள் திரும்ப நினைவுக்குக் கொண்டு வருவீர்கள்.

1.சாமி...! நாங்கள் மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும்
2.அந்த உயர்ந்த சக்தி நாங்கள் பெற வேண்டும் என்று எண்ணினால்
3.என்னிடம் இருந்து அந்த சக்தி உங்களுக்குக் கிடைக்கும்... அது வளரும்.

ஆனால் அதற்கு மாறாக... என் கஷ்டம் எல்லாம் இப்படி இருக்கிறது... தலைவலி எனக்கு இப்படியே தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கின்றது என்றால் அதைத் தான் வளர்க்கின்றீர்கள் என்று பொருள்.

அதே சமயத்தில் என்னிடம் பேசி இதே வேதனையான உணர்வைப் பதிவு செய்து விட்டால்... நீங்கள் எண்ணும் போதெல்லாம் “என் ஆன்மாவிலே அந்த உணர்வுகள் வந்து மோதும்...”

இதையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு அந்த
1.மகரிஷிகளின் அருள் சக்திகளை நான் வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.
2.கொஞ்சம் ஏமாந்தால் உங்களை மாதிரி என்னையும் கொண்டு வந்து விடும்.
3.24 மணி நேரமும் மகரிஷிகளின் அருள் வட்ட்த்திலேயே என் நினைவுகளைச் செலுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

சிறிது ஏமாந்தாலும் போய்விடும். ஒரு நாளைக்கு அந்த மாதிரி ஆகிவிட்டால் அதைக் கழிப்பதற்கு நான் படும் சிரமம் எனக்குத் தான் தெரியும்.

குருநாதரிடம் கூட... அவர் என்னைக் காட்டிற்குள் அழைத்துச் செல்லும் பொழுது கூட அத்தகைய சிரமம் எனக்குத் தெரியவில்லை முதலில் ஏதேதோ சொல்வார். அப்போது அந்த உணர்வுகளை வளர்த்துக் கொண்டபின் தீமையிலிருந்து விடுபடும் சந்தோஷம் வரும்.

1.கொஞ்ச நேரத்திற்குக் கஷ்டமாக இருக்கும் அதற்குப் பின் சந்தோசம் தான் வரும்.
2.எவ்வளவு நேரம் வருத்தப்பட்டேனோ அந்த அளவிற்கு சந்தோஷத்தை உருவாக்கும்.

குருநாதர் எம்மை அப்படித்தான் வளர்த்தார்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நமது உயிர் பூமிக்குள் வந்தபின் தாவர இனச் சத்தை நுகர்ந்து உடல் பெறுகின்றது. அவ்வாறு உடல் பெற்ற நாள் தான் "சிவன்ராத்திரி..." உயிரோ ஈசனாகின்றது... உணர்வு இயக்கும் சக்தியாகின்றது நுகர்ந்த உணர்வு சத்தாக உயிருடன் ஒன்றப்படும் பொழுது உடலாகின்றது... சிவம் ஆகின்றது.

நமது உயிர் வான் வீதியில்...
1.அதாவது இந்தப் பிரபஞ்சத்தில் உயிராக உருப்பெற்ற நாள் தான் "ஈஸ்வர ஆண்டு" என்று
2.இந்த ஆறுபது ஆண்டுகளில் நமது உயிர் உருப்பெற்ற நாளாக ஞானிகள் காட்டியுள்ளார்கள்.

பொதுவாக உயிரணுக்கள் வான்வீதியில் உருப் பெற்ற நாளை நினைவுபடுத்தும் நாள் தான் "ஈஸ்வர ஆண்டு" என்பது. உயிரின் இயக்கச் சக்தியை ஈசன் (ஈஸ்வரன்) என்று காரணப் பெயரை வைத்து அழைக்கின்றனர்.

சூரியனோ... மற்ற தாவர இனங்களின் சத்துக்களை எடுத்துக் கவர்ந்து வைத்துக் கொள்கின்றது.

தாவர இனத்தில் விளைந்த வித்தினை நாம் நிலத்தில் போடும்போது... நிலத்தின் ஈர்ப்புத் தன்மை கொண்டு தன் தாய்ச் செடி உணர்வின் சத்தை நுகர்ந்து அந்த இனத்தின் செடியாக அது உருப்பெறுகின்றது.

ஆனால் உயிரோ... எந்தச் செடியின் சத்தை நுகர்ந்து அந்த உணர்வின் தன்மை அணுவாக உருவாக்கியதோ இதற்குப் பெயர் "ஈசன்..." இந்த உணர்வின் சத்து நம் பூமிக்குள் வந்து இந்த உணர்வின் சத்து உயிருடன் ஒன்றி உடலாக்கப்படும் பொழுது "சிவம்..."
1.ஈசனான உயிர் இல்லை என்றால் உடலான சிவம் சவம் தான்.
2.ஆகவே "அவனின்றி அணுவும் அசையாது" என்று சாஸ்திரங்கள் தெளிவாக்குகின்றது.


ஈஸ்வர ஆண்டு என்று ஆரம்பித்து... இதனுடைய சுழற்சி அறுபது ஆண்டுகள் முடிவடையும் தருணம்... மீண்டும் ஈஸ்வர ஆண்டு என்று வரும்.

இது எல்லாம்... மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் அறுபது ஆண்டு நிறைவடையப்படும் பொழுது அந்த அறுபது ஆண்டுக்குள் பெற்ற சக்திகள் வேறு. அடுத்த அறுபது என்பது வேறு...!

அந்த அறுபதைக் கடந்து செல்லப்படும் பொழுது
1.மறுபடியும் பிரபஞ்சத்தில் சூரியனின் காந்தப் புலனறிவு மற்ற கோள்களின் திசை மாற்றங்கள் வரும்
2.இந்த அறுபது ஆண்டில் மற்ற கோள்கள் திசை மாறும் பொழுது நட்சத்திரங்களின் இயல்புகளும் மாறுகின்றது.

அவ்வாறு மாற்றி வரப்படும் பொழுது அறுபது வருடத்திற்குள் இருந்த நிலை வேறு... அதற்குப்பின் உருமாற்றங்கள் வேறு...!
1.முதுமை அடைகின்றது... உணர்வுகள் சோர்வடைகின்றது.
2.சோர்வின் பால் "மற்ற உணர்வுகளை எடுக்கப்படும் பொழுது" உணர்வின் தன்மை உடலைக் குறையச் செய்கின்றது.

அடுத்த அறுபதுக்குள் இந்த உடலில் விளைய வைத்த உணர்வினை இதே உயிர் இந்த உணர்வுக்கொப்ப அடுத்த உடலாக உருமாற்றி அதனின் செயலாக்கத்திற்குக் கொண்டு வருகிறது.



ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நண்பனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்புகின்றோம்... உதவி செய்கின்றோம். ஆனால் அவன் மீது சிறிது வெறுப்பாகி விட்டால் “எனக்குத்

தீங்கு செய்கின்றான்... இவனுக்கு எப்படி நன்மை செய்வது...?" என்ற எண்ணம் வருகின்றது.

அப்பொழுது நன்மை செய்வதற்குப் பதிலாக தீமை தான் செய்வோம். தீமை செய்யும் உணர்வுகளை நாம் நுகரப்படும் பொழுது அந்த தீமையை விளைவிக்கும் அணுக்களே நமக்குள் உருவாகின்றது.

நண்பன் தீமைகளிலிருந்து விடுபட வேண்டும் என்ற நோக்கத்தில்
1.அந்த மகரிஷிகளின் அருள் உணர்வு அவன் பெற வேண்டும்
2.தீமையிலிருந்து அவன் விடுபட வேண்டும் என்று எண்ணினால் "நாம் அதுவாகின்றோம்"
3.தீமையிலிருந்து விடுபடச் செய்யும் உணர்வின் அணுக்கள் உடலிலே உருவாகி
4.நமக்குள் "தீமையை நீக்கும் சக்தியாக" உருவாகின்றது (இது முக்கியம்)

கோபமாக இருக்கும் பொழுது ஒரு பொருளின் தரத்தை நம்மால் சரியாகக் காண முடிகின்றதா...! ஒரு நூலையோ துணியையோ அல்லது மற்ற பொருள்களையோ பதார்த்தத்தையோ காண முடிகின்றதா...? கோபமாக இருக்கும் போது தரத்தை நிர்ணயிக்க முடியாது.

நண்பனாக இருந்தாலும் கூட அந்த நேரத்தில் அவனைப் பார்க்கப்படும் பொழுது அவன் ஒரு நல்லதைச் சொன்னால்... "இந்த நேரத்தில் நீ ஏனய்யா இங்கே வந்து வம்பு செய்து கொண்டிருக்கின்றாய்...?" என்று அவரிடம் நாம் கோபமாகத்தான் பேச ஆரம்பிப்போம்.

அவர் நல்லதைச் சொல்லும் போது "நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ...! ஏன் வம்பு செய்கின்றாய்...?" என்று தான் சொல்வோம்.
1.இதைப் போன்ற உணர்வுகளை வளர்த்துக் கொண்டால் நாம் அதுவாகின்றோம்
2.கீதாச்சாரத்தில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மனிதனின் வாழ்க்கையில் நாம் எண்ணியதை உயிர் தான் உருவாக்குகின்றது... உடலாக்குகின்றது. மீண்டும் நினைவாக்கும் பொழுது அதனைச் செயலாற்றுகின்றது அந்த நினைவுகள்.

மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் அருளிய அருள் வழிப்படி உங்களுக்குள் இதைப் பதிவாக்குகின்றேன்.
1.இந்தப் பேருண்மையை நீங்கள் நினைவாக்கிக் கொண்டால்

2.உங்களை அறியாது வரும் இருளை நீக்கி மெய்ப்பொருள் காணும் திறன் நீங்கள் பெறுகின்றீர்கள்.
3.அதை பெற வேண்டும் என்பதற்கே இதைச் செய்கின்றேன்.

ஆகவே... இயற்கையின் இயக்க நிலைகளைத் தெளிவாக்குவதற்காக ஞானிகள் எத்தனையோ காவியங்களைக் கொடுத்துள்ளார்கள். காவியமாகப் படைத்து அந்தக் கருத்தினை நாம் நுகரப்படும் பொழுது அந்தக் கருத்தே நம் உடலில் உணர்வின் சக்தியாக நமக்குள் விளையத் தொடங்குகின்றது.

உதாரணமாக... தமாசுக்காக ஒருவரைக் கேலி செய்து பாருங்கள்... இந்த உணர்வுகள் விளைந்து கொண்டேயிருக்கும். ஆனால் இவர் சும்மா தமாசு செய்து கொண்டே இருக்கின்றார்...! என்று அவர் நினைப்பார்.

கொஞ்சம் கொஞ்சமாக அவர் நம் மீது வெறுப்பை வளர்த்துக் கொண்டு வருவார். ஒரு நாள் என்ன ஆகும்...? நான் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்... பொறுத்துக் கொண்டேயிருக்கின்றேன்... "இரு உன்னை என்ன செய்கின்றேன் பார்...!" என்று பகைமை ஆகிவிடும்.

விளையாட்டாகத் தானே...! என்று நாம் நினைப்போம் ஆனால் கடும் விளைவுகளை உண்டாக்கிவிடும். இதனுடைய வளர்ச்சி முதுமைக்கு வரும் பொழுது இப்படித்தான் வரும்.

இரண்டு பேர் சண்டை போடுவதை (அடிக்கடி) வேடிக்கையாகப் பார்க்கின்றோம் என்று வைத்துக் கொள்வோம்.
1.நாளடைவில் இவன் மோசமான ஆள் என்று அடுத்தவரிடம் சொல்ல ஆரம்பிப்போம்... திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருப்போம்
2.இந்த உணர்வுகள் அடுத்து "நம்மையே மோசமான ஆளாக" மாற்றக்கூடிய அளவுக்கு அணுக்களாக விளையத் தொடங்கும்
3."எதை மோசம்" என்று சொன்னோமோ அதுவே இங்கு வேலை செய்யத் தொடங்கிவிடும்.

இதைப் போன்ற நிலையெல்லாம் மாற்ற அந்த மகரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும் ஈஸ்வரா என்று உடனுக்குடன் தூய்மைப்படுத்த வேண்டும். அதற்கடுத்து...
1.என் பார்வை அவர்களை நல்லவராக்க வேண்டும்

2.நல்லதை நுகரும் சக்தி அவர்களுக்குள் வளர வேண்டும் என்று எண்ணுதல் வேண்டும்.

முதலில் அவர் செய்யும் தீமையைக் கண்ணின் கருவிழி பதிவாக்கி உயிரிலே பட்டு நுகரும் போது தான் அதை அறிகின்றோம். ஆனால்
1.அதற்குள் மகரிஷிகளின் அருள் உணர்வுகளை இணைத்து விட்டால் அது அடங்குகின்றது
2.நமக்குள் தீமையை வளர்க்கும் தன்மையைக் குறைக்கின்றது.

இவையெல்லாம் ஆலயத்தின் பண்புகளாக ஞானிகள் நமக்குத் தெளிவாகக் காட்டப்பட்ட நிலைகள்.

அகண்ட உலகில் உருவாகும் உணர்வினைச் சூரியன் நுகர்கின்றது... பிரபஞ்சமாக உருவக்கி வாழ்க்கையைத் தொடங்குகிறது... உயிரணுக்களை உருவாக்குகின்றது.

உயிரணுவாகத் தோன்றி பரிணாம வளர்ச்சியில் மனிதனாக்குகின்றது உயிர். தீமைகளை மாற்றி விட்டு உணர்வின் தன்மை ஒளியாக மாற்றும் சக்தி மனிதனுக்குத் தான் உண்டு.

மிருக நிலையில் இருந்து வளர்ச்சியாகி மனிதன் ஆன நிலையில் ஆதிமூலம் என்றும் விநாயகர் என்றும் உயிரால் உருவாக்கப்பட்ட நிலையை விநாயகர் தத்துவம் தெளிவாகக் காட்டுகின்றது. ஆக மனிதனாக உருவானபின் அவனே முழு முதல் கடவுள்.

அதே சமயத்தில் இந்த மனித உடல் பெற்ற நிலையில்
1.உயிருடன் ஒன்றிய உணர்வினை ஒளியாக மாற்றி ஒளிச் சரீரமாக உருவாக்கவில்லை என்றால்
2.அடுத்து நாம் தேய்பிறை தான்... வளர்ச்சி குன்றுகிறது (மனிதனல்லாத உருவாகப் பிறக்க வேண்டி வரும்).

மனிதனைக் காட்டிலும் மற்ற உயிரினங்கள் எப்படி எல்லாம் வேதனைப்படுகிறது என்று பார்க்கின்றோம் அல்லவா. நாம் இன்று மனிதனாக இருக்கலாம். சந்தர்ப்பத்தால் விஷத்தன்மையை அதிகமாக நுகர்ந்து விட்டால் விஷம் கொண்ட ஜந்துக்களாக உயிர் மாற்றிவிடும்.

காரணம் விஷத்தன்மை கொண்ட அணுக்கள் வளர்ந்து விட்டால் உடலை உருவாக்கிய அணுக்களை அது உணவாக உட்கொள்ளும் டிபி போன்ற எத்தனையோ கொடிய நோய்களாக வந்து கடுமையான விளைவுகளை அனுபவிக்க வேண்டி வருகிறது.

அப்போது உணர்வுகள் குறைந்து விட்டால் உடலும் சுருங்கிவிடும். உடலில் வேதனை அதிகரிக்கும் பொழுது எவ்வளவு வலுக் கொண்டவர்களாக இருந்தாலும் சுருங்கி விடுகின்றது. இதெல்லாம் இயற்கையினுடைய சில நியதிகள்.

1.ஆனால் அருள் ஒளியின் உணர்வை நாம் கூட்டக் கூட்ட
2.“என்றும் ஒளியின் சுடராகப் பரவுகின்றது... இருளை மாய்க்கின்றது...”

இருளை மாய்த்து ஒளியின் உணர்வின் சக்தியைப் பெற வேண்டும் அதற்குத்தான் இந்தப் பயிற்சியை உங்களுக்கு திரும்பத் திரும்ப கொடுத்துக் கொண்டு வருகின்றோம்.

ஆகவே நமது எல்லை அந்தச் சப்தரிஷி மண்டலம் தான். பேரின்பப் பெரு வாழ்வு என்றும் பெருவீடு பெரு நிலை என்றும் அது வளர்ச்சி ஆகிக் கொண்டே இருக்கும்.

பிறர் செய்யும் தவறான உணர்வை
உனக்குள் சேராவண்ணம்
தடுத்து நிறுத்த வேண்டும்

அவன் செய்யும் தவறான உணர்வை
எண்ணாதபடி உன் உணர்வை
அவனுக்குள் செலுத்த வேண்டும்



தீமை செய்வோரிடமிருந்து நாம் காக்கப்பட வேண்டுமென்றால்
மகரிஷிகளின் உணர்வை அம்பாகச் செலுத்த வேண்டும்

அருள் ஒளியின் உணர்வை நாம் கூட்டக் கூட்ட ஒளியின் சுடராகப் பரவுகின்றது... இருளை மாய்க்கின்றது. அதற்குத்தான் இந்தப் பயிற்சியை உங்களுக்கு திரும்பத் திரும்ப கொடுத்துக் கொண்டு வருகின்றோம். நமது எல்லை அந்தச் சப்தரிஷி மண்டலம் தான். பேரின்பப் பெரு வாழ்வு என்றும் பெருவீடு பெரு நிலை என்றும் அது வளர்ச்சி ஆகிக் கொண்டே இருக்கும்.



உலக மக்கள் உணர்வைப் பற்றாதே என்றார் குருநாதர்

ஜெய் கணேச ஜெய் கணேச பாஹிமாம் என்று பாடுகின்றோம். அந்த கணேசன் எங்கே இருக்கின்றான்...? நம்மை எவ்வாறு இயக்குகிறான்...? என்ற தத்துவத்தை ஞானிகள் கொடுத்திருந்தாலும்... புகழ் பாடும் நிலைகள் கொண்டு பொருள் காண முடியாத நிலைகள் நாம் திரிந்து கொண்டிருக்கின்றோம்.

மெய்ப் பொருள் கண்டறிந்த அருள் ஞானிகள் உணர்த்திய உண்மைகள் நமக்கு முன் படர்ந்து கொண்டே இருக்கின்றது. இதையெல்லாம் பித்தனாக இருந்த குருநாதர் உணர்த்துகிறார்.

எல்லோரும் உங்களைப் பைத்தியமாக எண்ணுகின்றார்கள். நீங்கள் ஏன் இவ்வாறு இருக்கிறீர்கள்...? என்று கேட்கப்படும் பொழுது அவர் சொல்கின்றார்.

1.உலக மக்கள் என்னைப் பித்தனாக எண்ணுகிறார்கள்.
2.ஆனால் அவர்கள் எத்தகைய பித்துப் பிடித்து வாழுகின்றார்கள்...? என்பதை நீ உணர்ந்து கொள்.
3.அவர்கள் உணர்வைப் பற்றாதே அருள் உணர்வைப் பற்றிக் கொள்.
4.மற்றவர்களைப் பற்றி எண்ணாதே,.. நான் கொடுத்த அந்த அருள் ஞானிகள் உணர்வை நீ பற்று.

வாழ்க்கையில் உன்னை அசுத்தப்படுத்தும் நிலைகளைப் பற்றற்றதாக்கு.

யார் உன்னைக் கேவலமாகப் பேசினாலும் சங்கடமாகப் பேசினாலும் கோபமாகப் பேசினாலும் வேதனையாகப் பேசினாலும் அதையெல்லாம் பற்றற்றதாக்கு.

அருள் ஞானிகள் உணர்வின் தன்மை கொண்டு மெய் உலகம் சென்ற அந்த அருள் ஞானிகள் உணர்வைப் பற்று. தீமைகளைப் பற்றற்றதாக்கு.

1.அருள் ஞானிகள் உணர்வுகளை மக்கள் மத்தியிலே அதைப் பற்றும்படிச் செய்...!
2.அருள் உணர்வுகளை நேசித்துத் தீமைகளை அகற்றிடும் நிலைகள் கொண்டு
3.தீமைகளைப் பற்றற்றதாக உருவாக்கிவிடு என்று குருநாதர் காட்டிய அருள் வழிப்படி உணர்த்துகிறோம்.

ஒரு சிலர் இதைப் பற்றற்றதாகவும் இருக்கலாம். ஆனால்
1.அருள் ஞானிகளைப் பற்றிடும் நிலையாகத் தீமைகளைப் பற்றற்றதாக்க முடியும் என்று
2.எமது குருவின் ஆணைப்படி நீங்களும் அதைப் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் சொல்கின்றேன்.



“என்றும் மாறாத நிலையில்” வாழ்பவர்களே மகரிஷிகள்

மனிதனாக வாழும் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் அருள் ஞானப் பற்றுடன் வாழ வேண்டும். மகிழ்ந்து வாழ்ந்திடும் உணர்வுகளை ஒருவருக்கொருவர் நுகர வேண்டும்.

1.துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் அனைவரும் பெற வேண்டும்.
2.அனைவரது வாழ்க்கையிலும் அறியாது சேர்ந்த இருள்கள் நீங்க வேண்டும்.
3.மெய்ப் பொருள் காணும் அருள் சக்தி பெற வேண்டும்... அவர்கள் குடும்பம் எல்லாம் மகரிஷிகளின் அருள் வட்டத்தில் வாழ வேண்டும்.
4.அவர்கள் பிறவி இல்லா நிலை அடைய வேண்டும்... அருள் ஞான வாழ்க்கை வாழ வேண்டும்.
5.இருளை அகற்றி மெய்ப் பொருள் காணும் அருள் சக்தி இந்தப் பூமியில் வாழும் அனைவரும் பெற வேண்டும் என்று
6.நானும் நினைக்கின்றேன்... நீங்களும் அது போன்று நினையுங்கள்.

இது அனைத்தும் ஒன்றாகச் சேர்த்தால் என்ன ஆகும்...?

சூரியனுடைய காந்த சக்தியால் வளர்க்கப்பட்ட தீமையான உணர்வுகளை பூமியில் வாழும் மனிதர்கள் அதை ஈர்க்கும் சக்தி இழக்கப்பட்டால் காலை 6 மணிக்கெல்லாம் அந்தத் தீமைகளைச் சூரியன் கவர்ந்து சென்று அங்கே கரைத்து விடும்... கருக்கி ஒளியாக மாற்றிவிடும்.

விறகை அடுப்பிலே வைத்து எரிக்கின்றோம். அது எரிந்து நெருப்பாகின்றது ஒளியாக. அதனுடைய உணர்வின் சத்துக்கள் பிரிகின்றது. ஆனால் விறகு கருகி விடுகின்றது.

சூரியன் கவர்ந்து ஆவியாக மாற்றுகின்றது.
1.ஆவியின் தன்மை எதன் உணர்வு பெற்றதோ செடி புவியின் ஈர்ப்பின் தன்மை கொண்டு
2.எந்த வித்து இங்கே படுகின்றதோ அதே மரத்தின் அதே வித்தாக அந்தச் சத்தை எடுத்து விளைகின்றது.
3.எதனெதன் உணர்வின் தன்மை எது எது எடுத்து வளர்கின்றதோ.. இப்படி இயற்கையில் (மறுசுழற்சியாக) மாற்றிக் கொண்டே வருகின்றது.

ஆனால் நாம் மாறாத நிலைகள் பெற வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்...?

ஆறாவது அறிவு பெற்றவன்... என்றும் நிலையான ...என்றும் 16 என்ற நிலை அடைந்த அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும் என்று நுகர்ந்து பழக வேண்டும்.
1.நம் உடலுக்குள் அதைப் பெருக்க வேண்டும்.
2.இதை அழியாச் சொத்தாக அழியாச் செல்வமாக நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.



குருநாதர் எனக்கு நேரடியாகக் காட்டியதைத் தான் உங்களிடம் சொல்கிறேன்
எந்தத் துருவ மகரிஷி துருவ நட்சத்திரமாக ஆனானோ அதிலிருந்து வரும் சக்திகள் இந்தப் பூமியிலே படர்ந்துள்ளது. அதை நுகரும் திறன் நாம் பெற வேண்டும். துருவ நட்சத்திரத்தின் சக்தியை நாம் நுகர்ந்து அதை வளர்க்க வேண்டும். அனைவரையும் பெறச் செய்ய வேண்டும்.

பின் அதனின் உணர்வை வலுவாக இயக்கப்படும் பொழுது தீமைகளை அது கரைத்து விடும்.

விறகுக் கட்டைக்குள் இருக்கும் எண்ணெய்ச் சத்து நெருப்பை வைத்து எரிக்கப்படும் பொழுது கட்டையைக் கருக்கிவிட்டு ஒளியாக மாற்றுகின்றது.

இதைப் போல
1.தீமையை உருவாக்கும் வீரியச் சத்தை மகரிஷிகள் ஒளி கொண்டு எரித்து ஒளியாக மாற்ற வேண்டும்.
2.ஏனென்றால் அப்படி ஒளியாக மாற்றியவர்கள் தான் மகரிஷிகள்.

ஆகவே எந்தத் தீமை வந்தாலும் அந்தத் தீமைகளை மகரிஷிகளின் உணர்வு கொண்டு கருக்கி விட்டு ஒளியின் தன்மையாக மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும்.

அப்படி மாற்றப்பட்ட நிலைகள் அருள் ஞானிகள் உணர்வை இணைத்து விட்டால்
1.தன்னிச்சையாக நமக்குள் இருக்கும் தீமைகளை எரிபொருளாக மாற்றி
2.அதனை ஒளியின் சக்தியாக மாற்றும் தன்மை வருகின்றது.
3.இதையெல்லாம் குருநாதர் எமக்கு நேரடியாகக் காட்டுகின்றார்.

நான் சொல்வதெல்லாம் உங்களுக்கு அதிசயமாகத் தெரியலாம். ஆனால் இதையெல்லாம் நீங்கள் பார்க்கும் பொழுது என்னிடம் சொல்வீர்கள். சாமி... இதையெல்லாம் என்னால் பார்க்க முடிந்தது... என்னால் தீமைகளைப் போக்க முடிந்தது என்ற அந்த மகிழ்ச்சியான நிலைகள் உங்களுக்குள் வரும்.

நான் ஒன்றும் அறியாதவன் தான் இத்தனையும் பேசுகின்றேன். எங்கிருந்து பேசுகின்றேன்...? குருநாதர் பதிய வைத்தது எனக்குள் விளந்தது தான் அவ்வாறு இயக்குகிறது.

1.நான் புத்தகங்களைப் படித்ததும் இல்லை... படிக்க விரும்பவும் இல்லை
2.படித்தாலும் அர்த்தம் புரிவதில்லை.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக எழுதி இருப்பார்கள். திருவள்ளுவர் திருக்குறளைப் பாடியிருக்கிறார் என்றால் படித்தவர்களுக்கு அதனுடைய விளக்கம் தெரியும். நான் படித்தால் எனக்கு என்ன அர்த்தம் தெரியும்...?

இராமாயணத்தைக் கவியாகப் பாடி உள்ளார்கள். எனக்கு என்ன அர்த்தம் தெரியும்...? கவி தெரிந்தவர்கள் விளக்கம் சொன்னால் சரியாக இருக்கும்.

ஆனாலும் அவரவர்கள் உணர்வுகளை இணைத்துக் கொள்ளும் பொழுது ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்வார்கள்.
1.வேறு விதமாக அமைந்து விடுகிறது.
2.படித்ததன் உணர்வுகள் அதனுடன் ஒன்றிச் செயல்படும் பொழுது
3.அதற்கொப்பத் தான் அவர்கள் உணர்வின் எண்ணங்களும் செயல்களும் வருகின்றது
4.அந்தக் கருத்தைக் கேட்பவர்களுக்கும் உணர்வுகள் மாறுகின்றது.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

உயிருக்குள் ஏற்படும் வெப்பம் விஷ்ணு... அதனால் ஏற்படும் காந்தம் லட்சுமி... நாம் சுவாசிப்பதை இழுத்துத் தனக்குள் உருவாக்கும் நிலை வரும் பொழுது "பிரம்மமாகின்றது..."

சுவாசித்த உணர்வு எதுவோ அதனின் ஞானப்படி மணமாக நுகர்ந்து "அணுவாக உருவாக்கப்படும் பொழுது" அதன் செயலாக நம்மை இயக்குகின்றது.
1.வேதங்கள் இதைத்தான் கூறுகின்றது
2.சைவ சித்தாந்தமும் இதைத்தான் கூறுகின்றது.

நாம் நுகரும் சத்து சைவம். அந்த உணர்வின் சக்தியை நுகரப்படும் பொழுது விசிஷ்டாத்வைதம் நமக்குள் உணர்ச்சியைத் தூண்டும் உணர்வின் தன்மை மறைமுகமாக நமக்குள் இயக்குகின்றது.

நுகர்ந்த உணர்வின் தன்மை விசிஷ்டாத்வைதம்... அது அணுவாகி நம் உடலாகின்றது... அது (திடமாகும் போது) துவைதம்.

இதை எல்லாம் ஆலயத்தின் பண்புகளாகக் காட்டினார்கள் ஞானிகள். ஆலயங்களில் பக்தி கொண்டு நல்ல உணர்வுகளை நாம் பெற வேண்டும்.

தீப ஆராதனை காட்டும் போது அங்கே பொருள் தெரிகின்றது. அதைப் போல பொருளறிந்து செயல்படும் திறன் நாங்கள் பெற வேண்டும் ஈஸ்வரா...! என்று நுகர்ந்து அதை நமக்குள் அணுவாக மாற்ற வேண்டும்.

1.தீபத்தின் ஒளி எப்படி மற்ற இருளை விலக்குகின்றதோ...
2.மறைந்த பொருளை அதனால் எப்படிக் காண முடிகின்றதோ
3.நமது நினைவாற்றல் தீமையின் உணர்வுகளை உள் புகுந்து அதை நீக்கிடும் அறிவின் ஒளியாகப் பெற வேண்டும்

4.பொருளறிந்து செயல்படும் அந்தச் சக்தி பெற வேண்டும் என்று எண்ணும்படி வைத்தார்கள் ஆலயங்களில்.

அதே சமயத்தில் தீபத்தால் அங்கிருக்கும் (தெய்வ) உருவங்களைக் காட்டப்படும் பொழுது துவைதம். சிலையாக வடித்து வைத்தாலும் அந்தத் தெய்வ குணத்தின் தன்மை காவியமாகப் படைக்கப்பட்டுள்ளது.

அந்தக் காவியப்படி...
1.தெய்வ குணத்தை நாங்கள் பெற வேண்டும்
2.எங்கள் உடல் முழுவதும் அந்தச் சக்தி படர வேண்டும்
3.எங்கள் உடல் உறுப்புகளை உருவாக்கிய அணுக்கள் அந்தச் சக்தி பெற வேண்டும்
4.இந்த ஆலயம் வருவோர் அனைவரும் இந்தத் தெய்வ குணத்தைப் பெற வேண்டும்.
5.ஆலயம் வரும் குடும்பம் முழுவதும் தெய்வ நிலை பெற வேண்டும்
6.அவர் உடல் முழுவதும் இந்த தெய்வ நிலை பெற வேண்டும் என்று எண்ணுதல் வேண்டும்.

இது பக்தி...!

அதே சமயத்தில் அபிஷேகம் செய்கிறோம் என்றால் அந்தக் கல் சிலைக்கு அல்ல...! அங்கே அபிஷேகம் செய்யும்போது அதை உற்றுப் பார்த்து அந்த உணர்வை நாம் சுவாசித்தோம் என்றால் உயிரிலே பட்டு இந்த உணர்வுகள் உடல் முழுவதும் அபிஷேகம் ஆகிறது. நல்ல குணங்களுக்கு அது அமுதாகக் கிடைக்கிறது.

உதாரணமாக... பிறர் வேதனைப்படுவதைப் பார்க்கின்றோம்... அவர் படும் வேதனைகளைச் சுவாசிக்கப்படும் பொழுது நஞ்சு கலந்ததாக நம் உடலுக்குள் பரவி விடுகின்றது.

குளவி ஒரு புழுவைக் கொட்டி விட்டால் புழுவின் உடலை உருவாக்கிய அணுக்களுக்குள் விஷத்தன்மைகள் பாய்ந்த பின் அதைத் தாங்காதபடி புழு குளவியையே நினைத்துத் துடிக்கின்றது. குளவியின் விஷத்தின் தன்மை ஊடுருவி... புழு – குளவியாக மாறுகின்றது.

அதே போன்றுதான்
1.வேதனைப்பட்ட ஒரு மனிதன் உணர்வை நாம் நுகர்ந்து விட்டால் இந்த உணர்வின் தன்மை அபிஷேகமாகி
2.விஷத்தன்மை உடலுக்குள் பரவி நம் உடலில் இருக்கக்கூடிய அணுக்கள் விஷமாக மாறுகின்றது
3.விஷம் என்ற அந்த வேதனையை நுகரச் செய்கின்றது... அதன் வளர்ச்சி பெறுகின்றது
4.வேதனைப்படும் உணர்வுகள் நமக்குள் வேதனையை உருவாக்கும் அணுக்களாக மாறுகின்றது
5.பின் நோயாகி மீண்டும் வேதனையைத் தான் நாம் அனுபவிக்க வேண்டி வருகின்றது.

ஆகவே வாழ்க்கையின் எந்தச் சந்தர்ப்பத்திலும் வேதனைப்படும் உணர்வுகளை நுகர்ந்து விட்டால் அது நம் உயிரிலே பட்டு... அந்த உணர்வு உடல் முழுவதும் விஷ அணுக்களாகப் பரவுகிறது... அது துடிக்கின்றது பதறுகின்றது மயக்கம் அடைகின்றது.

ஆகவே அப்போது அபிஷேகிக்க வேண்டியது எது...?
1.வேதனையை அல்ல.
2.அருள் ஞானிகள் உணர்வைத் தனக்குள் நுகர்ந்து
3.இந்த உணர்வை உடலுக்குள் பரப்புதல் வேண்டும்... அதை அபிஷேகித்தல் வேண்டும்.



பாலையோ சந்தனத்தையோ பன்னீரையோ அபிஷேகம் செய்யும்போது அதை உற்றுப் பார்த்து அந்த உணர்வை நாம் சுவாசித்தோம் என்றால் உயிரிலே பட்டு இந்த உணர்வுகள் உடல் முழுவதும் அபிஷேகம் ஆகிறது. நல்ல குணங்களுக்கு அது அமுதாகக் கிடைக்கிறது.



“நாம் உயிருடன் ஒன்றி ஒளியாக மாற வேண்டும்...” என்று சொல்வதன் முக்கிய காரணம்

பாம்பு தன் நஞ்சினை மற்ற உயிரினங்கள் மீது பாய்ச்சி அதை உணவாக எடுத்து அது தனக்குள் விளைந்து விளைந்து “உயிருடன் உணர்வுகள் அமில சுரப்பியாக ஆனாலும்...” மற்றதைக் கொன்று புசித்திட்ட உணர்வுகளும்... மற்றது தன்னைக் கொல்ல வரும் நிலைகளிலும்... நினைவின் ஆற்றல் கொண்டு உணர்வின் சக்தி வெளி வந்த பின் நஞ்சை உணவாக எடுத்துக் கொண்ட நிலைகள் அது நாகரத்தினமாக மாறுகின்றது.

அதைப் போல் யானையும் வலுக் கொண்ட உணர்வின் சத்தைத் தனக்குள் எடுத்துக் கொண்டால் அது முதிர்ந்த நிலைகள் கொண்டு அதற்குள் வைரம் போன்ற முத்தாக விளைகின்றது.

பாம்பிற்குள் நாகரத்தினமாக எப்படி விளைந்ததோ இதைப் போல்
1.மனிதன் மற்ற நஞ்சு கொண்ட உணர்வுகளைத் தனக்குள் செயலாற்றதாக ஆக்கி
2.அந்த உணர்வின் தன்மை உயிருடன் ஒன்றிய ஒளியின் சரீரமாக நஞ்சினை ஒடுக்கி
3.துருவ நட்சத்திரமாகவும் சப்தரிஷி மண்டலமாகவும் வாழ்ந்து கொண்டுள்ளார்கள்.

உயிருடன் ஒன்றிய நிலைகள் கொண்டு உணர்வின் இயக்கம் ஒளியாக மாறினான் மனிதன். ஆனால் நாகமோ நஞ்சினை உறையச் செய்து ஒளியின் சுடராக விளைகின்றது.

தன் உணர்வின் நிலைகளுக்காக முதிர்ந்த நாகம் நாகரத்தினமாக ஆனாலும் உமிழ்த்தி ஒளியின் சுடரிலே... கண் ஒளிகள் மங்கினால் இந்த உணர்வின் அலைகள் கொண்டு உணவைத் தேடும் நிலையாகச் செல்கின்றது உடலின் நிலைகளுக்கு...!

ஆனால் நஞ்சு கொண்ட உணர்வுகள் மற்றது தாக்கப்படும் பொழுது வேதனை கொண்டு கவர்ந்த உணர்வுகள்... எதனை உற்று நோக்கியதோ அதனின் உணர்வின் துணை கொண்டு உயிரான்மா வெளி சென்ற பின்... எதைக் கொன்று புசிக்க வேண்டும் என்று விரும்பியதோ அதன் உடலுக்குள் சென்று விடுகின்றது.

1.இதனில் விளைந்த நஞ்சு தன் உணவுக்குத் தான் உதவ முடிந்தது.
2.உயிருடன் ஒன்றிய ஒளியின் சரீரமாக ஆகவில்லை.

ஆனால்
1.மனிதனுக்குள் எத்தனையோ வேதனை போன்ற உணர்வுகள் வந்தாலும் மகரிஷிகள் உணர்வுகளை இணைக்கச் செய்து
2.நஞ்சை அடக்கி உயிருடன் ஒன்றி ஒளியின் சிகரமாக மாற்றிச் சென்ற அவனின் உணர்வுகளை நமக்குள் எடுத்தோம் என்றால்
3.என்றும் பதினாறு என்ற நிலையில் பெரு வீடு பெருநிலை என்ற அழியா நிலைகள் கொண்டு வேகாக் கலை ஆகின்றது... வேகா நிலை ஆகின்றது.
4.எந்த நெருப்பும் எந்த நஞ்சும் இந்த உணர்வை வெல்ல முடியாது.

துருவ நட்சத்திரத்தையும் சப்தரிஷி மண்டலத்தையும் நஞ்சு கொண்ட உணர்வுகள் எதுவும் மாய்த்திடாது.

சூரியனோ கோள்களோ மிகச் சக்தி வாய்ந்த கதிரியக்கத்தை உமிழ்த்தும் நட்சத்திரங்களோ இவை அனைத்துமே மடிந்திடும் நிலைகள் கொண்டது தான்.

நட்சத்திரங்கள் சூரியனாக மாறலாம். சூரியனாகிப் படைக்கும் தன்மை வந்தாலும் மிருக நிலையிலிருந்து மாறி மனிதன் முதுமை அடைந்தது போல் சூரியனும் முதுமை அடைந்து விடும்.

பிரபஞ்சத்திற்குள் உயிரணுவின் தோற்றமாகி மற்ற ஏனைய உடலில் இருந்து பெற்று மனிதனான நாம்
1.மகரிஷிகளின் உணர்வுகளை நமக்குள் சேர்த்துக் கொண்டால் வேகா நிலையாக என்றும் நிலைத்திருக்க முடியும்.
2.என்றும் பதினாறு என்ற நிலையில் வளர்ந்து கொண்டே இருக்கும்.

அதற்குத்தான் மார்க்கண்டேயன் கதையைக் காட்டுகின்றார்கள். மார்க்கண்டேயன் எதைப் பற்றுகின்றான்...? கீழிருக்கும் ஆவடையப் பற்றவில்லை. (ஆவடை என்பது உடல்).

1.உயிர் தன்னை இயக்கிய நிலைகள் கொண்டு தாவி அந்த லிங்கத்தைத் தான் ஆலிங்கனம் செய்கின்றான்... அது ஜீவன் உள்ளது
2.உயிரின் தன்மை வளர்ச்சி அடைந்து கொண்டிருப்பதை உயிரைப் பற்றுடன் பற்றி
3.அதனுடன் ஒன்றி உணர்வினை ஒளியாக மாற்றினான் என்ற நிலையை நினைவுபடுத்துவதற்காக அவ்வாறு காட்டுகின்றார்கள்.

அவ்வாறு மார்க்கண்டேயன் உயிருடன் ஒன்றிய நிலைகள் வரப்படும் பொழுது “எமனால் அவனைக் கவர முடியவில்லை...” என்று சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் ஞானிகள் இதை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றார்கள்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

பிரபஞ்சத்தில் பரவிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் உமிழ்த்தும் கதிரியக்கச் சக்திகளை ஒலிப்பேழைகளிலே விஞ்ஞானிகள் கவர்கின்றார்கள். அதே அலைவரிசையில் அனுப்பி 27 நட்சத்திரங்களின் நிலைகளை
1.இராணுவ ரகசியமாகவும் அந்த நாட்டினுடைய ரகசியமாகவும் வைத்துக்

கொண்டுள்ளார்கள் விஞ்ஞான அறிவால்.
2.இதையெல்லாம் பத்திரிக்கை வாயிலாக நீங்கள் காண்பது மிகவும் கடினம்.

ஏற்கனவே இத்தகைய கதிரியக்கச் சக்திகளை நட்சத்திரத்திலிருந்து கவர்ந்து கொண்டுள்ளார்கள் என்று பல முறை சொல்லியும்... அதை ஏற்றுக் கொள்வார்கள் இல்லை.

ரஷ்யாவில் மனிதனின் உணர்வுக்குள் இயந்திரத்தினைப் பதிவு செய்து அந்த உணர்வின் ஓட்டத்தால் மனிதனின் கண்ணின் நிலைகள் கொண்டு விண்ணிலே பறந்து செல்லும் ராக்கெட்டினை அன்று வீழ்த்தினார்கள்.

ஆரம்பத்தில் அமெரிக்கா ராக்கெட்டுகளை விண்ணிலே ஏவும் போது அது மேலே சென்று கீழே இறங்கி வரும் நிலைகளில்
1.உடலில் பதிந்து கொண்ட உணர்வின் துணை கொண்டு மனித உணர்வால் பாய்ச்சப்பட்டு
2.அந்த ராக்கெட்டைச் செயலிழக்கச் செய்தார்கள்.... இவ்வாறு தான் வீழ்ச்சி அடைந்தது.

முதலிலே வெற்றிகரமாக ஏவினார்கள்... அதைக் கொண்டாடவும் செய்தார்கள். அதற்கு அடுத்து இரண்டாவது ஏவப்படும் பொழுது அதை வீழ்ச்சி அடையச் செய்தார்கள்... அதற்கடுத்து செலுத்தப்பட்டதும் வீழ்ந்தது... வெற்றி பெற முடியவில்லை.

முதலில் வெற்றி பெற்ற இயந்திரம் பழுதடைந்த பின் தான் அமெரிக்கா சிந்திக்கத் தொடங்கினான். அந்த நுண்ணிய அலைகளை... கதிரியக்கச் சக்தியால் கண்டறிந்த பின் ரஷ்யாவில் அணு உலைகள் வைத்திருக்கும் இடங்களை லேசர் கதிரியக்கங்களைப் பாய்ச்சி... அந்த அணு உலைகளை இவர்கள் தகர்த்தார்கள்.

அது வெடித்தபின் அதிலிருந்து வெளிப்பட்ட கதிரியக்கங்கள் பூமிக்குள் பரவி... அதிக நிலநடுக்கங்கள் உருவாகி அந்த நகரமே குலுங்கி கட்டிடங்களும் சிதைவுண்டது... அந்த நாடே மிகவும் அல்லல்பட்டது.

இதைப் போன்று ஒன்றல்ல... இரண்டாவது அணு உலை அங்கே சிதறப்பட்ட பின்பு தான் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ஏனென்றால்...
1.“நட்சத்திரப் போர்...” உருவாகி அணு உலைகள் வெடிக்குமேயானால்
2.அந்த கதிரியக்கத் துகள்களால் மொத்த நாடே அழிந்துவிடும் என்ற நிலையில்

3.இவர்களுக்குள் கம்யூனிசமா சோசியலிசமா போர் முறைகள் ஓய்ந்து சமாதான முறைகளுக்கு வந்தார்கள்.

இப்படிப்பட்ட யுத்தங்கள் தன் நாட்டைக் காக்க மதத்தின் அடிப்படையில் இயக்கப்பட்டது.

அதே சமயத்தில் முகமதியர்களும் போர் செய்து உலகம் முழுவதும் மதப்போராகி ஒவ்வொரு நாட்டையும் ஆங்காங்கே இருக்கக்கூடிய மக்களைத் தன் இனத்தில் சேர்த்துக் கொண்டால் கடவுள் உனக்கு எல்லாம் தருவார் என்று உலகம் முழுவதும் பரப்பி இந்த நிலையை உருவாக்கினார்கள்.

கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களும் “எங்கள் கடவுள் உங்களுக்கு இன்னது செய்வார்...” என்று அவர்களும் இப்படிப் பறைசாற்றினார்கள். யூத மதத்தைச் சேர்ந்தவர்களும் மந்திரத்தின் நிலைகள் கொண்டு “கடவுள் உங்களுக்கு இதைச் செய்வார்...” என்று அவர்களும் செயல்படுத்தினார்கள்.

யூத மதத்திலிருந்து வந்ததுதான் முகமது மதமும் கிறிஸ்தவ மதமும் இப்படிப் பிரிக்கப்பட்டு உலகம் முழுவதும் மதப் போராக மாறி இந்தியாவுக்குள்ளும் பரவியது.

முகமதியர்கள் முதலில் இங்கே ஆட்சி செய்ய வந்தார்கள் அது உருவானாலும் அதற்கடுத்து வந்த கிறிஸ்தவ மதம் ரோமானிய மதம் என்று உலகம் முழுவதும் அப்படிப் பரவும் நிலை வந்தது. இஸ்ரேல் நாடும் ரோமானியர்களுக்கு அடிமைப்பட்டுத் தான் இருந்தது.

அரசர்களால் உலகம் முழுவதும் இப்படி ஏற்பட்ட நிலைகள் தான்... மதத்திற்குள் புகுந்த கடவுளும்... எல்லாமே.

அரசர்கள் மதத்தை உருவாக்கிக் கடவுள் என்று பெயரில் சட்ட நீதிகளையும் ஒழுக்க நெறிகளையும்
1.அந்த நாட்டு அரசனுக்கு ஏற்றவாறு இதைப் பதிவு செய்து அவர்கள் உடல்களிலே பதிவான பின்
2.யார் யாரெல்லாம் இதைக் கூர்மையாக உற்று நோக்கிப் பதிவாக்கினார்களோ
3.ஓம் நமச்சிவாய என்று உடலுக்குள் பதிவாகி விடுகின்றது.

அதாவது... “ஓ” என்று பிரணவமாக்கி அவர்கள் கூறிய உணர்வின் சத்தை “ம்” என்று உடலாக்கி... இந்த உடலிலிருந்து மீண்டும் நினைவைக் கூட்டும் போது அது இயக்கி... அந்த மதத்தின் அடிப்படையில் அவனைக் காத்திடும் உணர்வு வருகிறது.

அதையே கடவுளாக மதித்துக் கொண்ட பின்...
1.மற்றவர்கள் சொல்வதை எதிர்நிலை கொண்டு மற்ற மதங்களைச் சாடுவதும் தாக்குவதும் அழிப்பதும் தான்
2.அன்றைய அரசர்களால் உருவாக்கப்பட்டது... உலகம் முழுவதும் பரவி வந்தது.

இன்றைய படித்த விஞ்ஞானிகளாக இருந்தாலும் சாஸ்திரங்கள் தெரிந்த சாஸ்திரவாதிகளாக இருந்தாலும் அனைவருக்கும் இது தெரியும். ஆனால் இதனுடைய உண்மைகளை வெளிப்படுத்த முடியவில்லை.

விஞ்ஞான அறிவில் கற்று வளர்ச்சி அடைந்து இருந்தாலும்... மதத்தைச் சார்ந்த நிலையில்
1.தன் மதமே பெரிது என்றும் எங்களுடைய சாஸ்திரங்களே பெரிது என்றும்
2.மதத்தின் அடிப்படையில் தான் இன்று உலகம் முழுவதும் பரவி... அதுவே ஓங்கி வளர்ந்து கொண்டுள்ளது.



நம் உடலும் நமக்குச் சொந்தமில்லை. எந்தச் செல்வமும் நமக்குச் சொந்தமில்லை. எந்தச் செல்வமும் நம்முடன் வருவதில்லை. இந்தச் செல்வத்தைக் காத்திடும் திறன் எவருக்கும் இல்லை.

ஆகவே எந்த நிலை ஆனாலும் நாம் இனி ஒரு பிறவி இல்லா நிலை பெற வேண்டும் என்று அந்த அருள் ஒளியைப் பெறும் தகுதியைப் பெற வேண்டும்.



எலெக்ட்ரானிக்கின் இயக்கம் – முகப்பு பற்றிய உண்மை

சூரியனிலிருந்து வரக்கூடியது எலக்ட்ரிக். அதைக் கடந்து வரும் பொழுது காந்தம் இழுத்துக் கொண்டால் நியூட்ரான். அது ஓடும் ஓட்டத்தில் இரண்டற இணைந்து உணர்வின் தன்மை ஒரு அணுவாக மாறப்படும் பொழுது புரோட்டான்... சத்தாக மாறுகின்றது... விஞ்ஞானிகள் சொல்வது.

ஞானிகள் சொல்வது... சூரியன் எலக்ட்ரிக்கை உருவாக்குகின்றது.
1.அது ஒரு செடியின் சத்தைக் கவர்ந்தால் எலக்ட்ரானிக். அதை நாம் நுகர்ந்தால் அதே எலக்ட்ரானிக் நம்மை இயக்கும்.
2.நம் உயிர் எலக்ட்ரிக்... அதே சமயத்தில் நாம் உருவாக்கும் உணர்வலைகள் வெளிப்படும் பொழுது
3.சூரியன் எடுத்துக் கொண்டால் எலக்ட்ரானிக் ஆக மாறுகிறது.
4.இவ்வாறு வெளிப்படுவதை இன்னொருவர் நுகர்ந்தால் அதே எலக்ட்ரானிக் அங்கேயும் இயக்குகின்றது.

இப்படித்தான் எலக்ட்ரானிக் என்பது மனித உணர்வின் தன்மை எடுத்து மனித உணர்வை விஷத்தன்மை கொண்ட நாடாக்களில் பதிவு செய்கின்றார்கள்.

இந்த உணர்வின் அழுத்தம் வரும் பொழுது எதனுடன் கலக்கப்படுகின்றதோ அந்த அறிவே அதிலே இணைகிறது.
1.நோயாகி விட்டால் அது கம்ப்யூட்டரில் உள்ள நாடாவில் இணைந்து விட்டால் அடுத்தவருக்கும் இந்த நோய் வரும்.

2.குடும்பத்தில் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் அதே உணர்வுகள் இணைந்து
4.அந்த நாடாவின் மூலமாக அடுத்த குடும்பத்திலும் இந்தச் சண்டை வரும்.

ஆகவே... கம்ப்யூட்டர் இயக்குபவர்கள் தவறான பாதையில் செல்வது... தவறான நிலைகள் செயல்படுவது இதற்கும் அதற்கும் சம்பந்தம் உண்டு.

ஏனென்றால் இந்த உணர்வு எலெக்ட்ரானிக்காக மாறப்படும் பொழுது இதே உணர்வுகள் நாடாக்களில் பதிவாகும். பல நோய்கள் வருவதற்கும்... சில வைரஸ் என்று இவர்கள் சொல்வார்கள்... அதெல்லாம் உருவாவதற்கும் காரணமாகின்றது.

இதே போன்று தான் கம்ப்யூட்டரின் பயன்பாட்டால் கோள்களின் உணர்வின் தன்மையை முகப்பில் இணைக்கின்றான். இவர்கள் விண்வெளிக்கு அனுப்பும் சாதனங்களிலே அதைப் பொருத்துகின்றார்கள்.

அவ்வாறு முகப்பில் வைத்து இணைத்து அனுப்பப்படும் பொழுது எதைப் படமெடுத்து இந்த உணர்வைப் பதிவாக்கினானோ அதனின் இடத்திற்கு அழைத்துச் செல்கின்றது.

எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் என்ற நிலைகள் வரப்படும் பொழுது குறிப்பிட்ட எல்லைக்கு ராக்கெட் மூலமாக அனுப்பும் பொழுது கம்ப்யூட்டர் பதிவு செய்த நிலையில் அந்த எல்லைக்குச் செல்கின்றது.

இதே போன்று தான்
1.நல்ல குணங்கள் கொண்டிருக்கும் பொழுது ஒரு தீயவனின் உணர்வு பதிவான பின்
2.அந்த எல்லைக்கு இந்த உணர்வு நம்மை அழைத்துச் செல்கின்றது.

பிற உணர்வுகளைப் பதிவாக்குகின்றோம். இந்த உடலுக்குள் பதிவாகி அது முகப்பான பின் உடலை விட்டுச் சென்றால் அங்கே அழைத்துச் செல்கின்றது.

அதே சமயத்தில்
1.துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை நம் உடலில் இருக்கக்கூடிய அணுக்களின் ஒவ்வொரு முகப்பிலும் இணைத்து விட்டால்
2.உடலை விட்டுச் செல்லும் பொழுது நாம் அந்தத் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்திற்குச் செல்கின்றோம்.

3.கணவன் மனைவி இருவரும் அதை எடுத்து ஒன்றாக்கி விட்டால் சிருஷ்டிக்கும் ஆற்றல் பெறுகின்றோம்.

விஞ்ஞான அறிவுப் பிரகாரம் உங்களுக்கு இதை நிரூபித்துச் சொல்கிறேன்.

இதை எல்லாம் குருநாதர் எமக்குத் தெளிவாகக் காட்டினார். விஞ்ஞானிகள் எப்படிச் செயல்படுத்துகின்றார்கள்...? புதிதாக எப்படிக் கண்டுபிடிக்கிறான்...? எப்படி எல்லாம் அதை இணைக்கிறார்கள்...? எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் என்ற நிலை வரும் பொழுது எப்படியெல்லாம் உருவாகின்றது...?

படிக்காததனால் தான் இந்த அளவிற்குச் சொல்கின்றேன். ஆங்கில அறிவு எனக்கு இல்லை... இருந்திருந்தால் "தூள் கிளப்பி இருக்கலாம்..." ஆனால் குருநாதர் வேண்டாம் என்று சொல்லி விட்டார்.

குருநாதர் எல்லா பாஷைகளும் பேசுவார். எனக்கு அது வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

பாஷைகள் கற்றவர் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். பற்று கொண்டோர் வரும் பொழுது அதன் வழிகளில் இதைக் கொண்டு செல்லலாம். உன் நேரத்தை வீணாக்காதே... நீ இதைச் செயல்படுத்து...! என்று சொல்லிவிட்டார். அதன் வழியில் உங்களுக்குள் பதிவு செய்கின்றோம்.

1.துருவ நட்சத்திரத்தின் உணர்வை முகப்பில் நீங்கள் வைத்துக் கொண்டால் அது உங்களை அங்கு அழைத்துச் செல்லும்.
2.துருவ நட்சத்திரத்தின் உணர்வை பெருக்கும்பொழுது அது வளர்ச்சி அடையும்.

இதிலே வித்தையும் இல்லை ஒன்றும் இல்லை...!

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

மகரிஷிகள் தன்னைத்தான் கண்டுணர்ந்த முறைப்படி
1.மனிதனின் வாழ்க்கையில் எவ்வாறு உயர்வு பெற வேண்டும்...?
2.உயர்ந்த சக்திகளை எவ்வாறு பெற முடியும்...? என்ற நிலையை
3.தெளிவாக உணர்த்தி உள்ளார்கள் கடவுளின் அவதாரம் பத்து என்று.

அதே சமயம் சிவ தத்துவத்தின் பிரகாரம் நாம் எடுத்துக் கொண்ட உணர்வை நம் உயிர் ஓ...! என்று இயக்கி... நாம் எண்ணிய குணங்களை ம்...! என்று தன் உடலாக்கும் பொழுது சிவமாகின்றது.

நாம் எந்த குணத்தினை எண்ணுகின்றோமோ அந்த குணத்தின் தன்மை உடலுடன் இணைந்து இயக்கப்படும் போது "வினை என்றும்... விநாயகா என்றும்..." காரணப் பெயரைச் சூட்டுகின்றார்கள் ஞானிகள்.

நாம் கடவுளாக வணங்குவது எல்லாமே...
1.ஒவ்வொரு இயக்கப் பொருள்களுக்கும் மகரிஷிகள் காரணப் பெயர்களை வைத்து
2.நாம் அறிந்து கொள்வதற்காகச் செயல்படுத்தப்பட்டது தான் அவை அனைத்துமே.
3.கடவுள் என்று தனிச் சக்தியாக எதுவும் இயங்கவில்லை.

நாம் எண்ணிய உணர்வுகள் அனைத்தும் உடலாகும் பொழுது சிவம் என்றும்... உடலுக்குள் அது இணைந்து செயல்படத் தொடங்கி விட்டால் வினை என்றும்... இந்த வாழ்க்கையில் நாம் எந்தக் குணத்தை அதிகமாகச் சேர்க்கின்றோமோ அந்த குணமே கணங்களுக்கு அதிபதியாகின்றது கணபதி...!

ஒருவரைக் கோபிக்கிறோம் என்றால் அந்தக் கோப உணர்வை நாம் சுவாசிக்கப்படும் போது "ஓம் நமச்சிவாய... சிவாய நம ஓம். அந்தக் கோபத்தின் வழிதான் நாம் செயல்படுத்த வேண்டி வரும்.

கோப உணர்வுகளை அதிகமாகச் சேர்த்து விட்டால் கணங்களுக்கு அதிபதியாகி அதன் வழிகளில் இந்த உடலில் இயற்கையில் இருந்த நிலையைக் காட்டிலும் மாற்றமாகித் தேய்பிறையாக மாற்றுகின்றது.


கோப குணம் வளர்ச்சி அடைந்து... நல்ல குணங்களைத் தேய்பிறையாக மாற்றுகின்றது. ஓம் நமச்சிவாய... சிவாய நம ஓம்.

இந்த வாழ்க்கையில் எந்தக் குணங்களை அதிகமாகச் சேர்க்கின்றோமோ அதன் உணர்வுப்படி கணங்களுக்கு அதிபதியாகி அதனுடைய செயலை இந்த உடலுக்குள் உருவாக்கும்.

நம் உயிர் ஈசனாக இருக்கும் பொழுது
1.நாம் எண்ணிய எண்ணங்கள் உடலுக்குள் உணர்வாகி உணர்வின் அணுவாகி
2.உடலுடன் இணையப்படும் பொழுது இறை... "இறைவா..."
3.அந்த உணர்வின் சக்தி உடலுக்குள் இயங்கத் தொடங்கினால் "தெய்வம்"
4.அந்த உணர்வின் சக்தி இயங்கி மீண்டும் அதைத் திரும்ப எண்ணினால்
5.அந்த குணத்தின் செயலாக நம்மை இயக்கும் "குரு..." என்று இவ்வாறு காரணப் பெயர்களை வைத்து
6.நாம் இயங்க வேண்டிய முறைகள் எது...? நாம் எப்படி இயங்க வேண்டும்...? நம்மை எப்படி இயக்க வேண்டும்...? என்ற முறைகளை வகுத்து
7.ஞானிகள் நமக்கு அதைக் காவியங்களில் தெளிவாகக் கொடுத்துள்ளார்கள்.

அதாவது இயற்கையின் உணர்வின் தன்மையைக் காவியமாக்கி... அந்தக் கருத்தினை எண்ணத்தால் எண்ணி அந்த உணர்வை நுகர்ந்தால்... நம் உயிர் அதை ஓ... என்று ஜீவ அணுவாக மாற்றி ம்... என்று நம் உடலாக மாற்றுகின்றது.

ஆகவே இந்த மனித வாழ்க்கையில் நாம் எதை நுகர வேண்டும்...? எதை நாம் வழிப்படுத்த வேண்டும்...? என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது நமது சாஸ்திரங்கள்.



நாம் எண்ணிய எண்ணங்கள் உடலுக்குள் உணர்வாகி அணுவாகி உடலுடன் இணையும் போது இறை... "இறைவா..." அந்த உணர்வின் சக்தி உடலுக்குள் இயங்கத் தொடங்கினால் "தெய்வம்..." அந்த சக்தி இயங்கி மீண்டும் அதைத் திரும்ப எண்ணினால் அந்த குணத்தின் செயலாக நம்மை இயக்கும் "குரு"



இரண்யன் மூன்று லோகத்தை அடக்கினான் என்றால் பொருள் என்ன...?

மனிதனான பின் அசுர உணர்வுகளைச் சந்தர்ப்பவசத்தால் நாம் எடுத்துக் கொண்டால்...

1.நாம் எண்ணத்தால் எடுத்துக் கொண்ட அந்த நிலைப்படி இந்திரலோகத்தை மாற்றி அமைத்து

2.அதை அந்த அசர உணர்வுகளே ஆட்சி புரியும் நிலைக்கு வருகின்றது.
3.இந்திரலோலகம் என்பது ரத்த நாளங்கள்.

இதைத் தான் காவியங்களில் இரண்யன் மூன்று லோகத்தையும் அடக்கினான் அடிமைப்படுத்தினான் இந்திரலோகத்தில் உள்ள அனைவரையும் தனக்குக் கீழ் அடிமைப்படுத்தினான் என்று சொல்வது.

உடலான இந்திரலோகத்திற்குள்ளும் இவன் அடக்குகின்றான் காற்றுப் பகுதியில் உள்ள உணர்வுகளையும் இவன் செயல்படுத்துகின்றான்... காற்று மண்டலத்தையும் அதுவாக மாற்றுகின்றான்.

சூரியனிலிருந்து வரக்கூடிய உணர்விலும் இந்த உணர்வுகள் இணைந்து மற்றவர்களை இது அடக்கிடும் சக்திகளாகப் பரப்புகின்றான்.

இப்படி மூன்று நிலைகளாகப் பரவுவதை "மூன்று லோகம்" என்று காரணப் பெயரை வைத்து அழைத்தனர் ஞானிகள்.

1.உடலான ஒரு லோகமும்
2.புறத்தால் தன் சுற்றுப்புற சூழ்நிலையில் உள்ள உணர்வுகளும்
3.சூரியனிலிருந்து வரும் உணர்வின் தன்மை விஷத்தின் தன்மை உமிழ்த்தப்படும் போது இவனிடும் உணர்வுகளே அதனின் செயலாகச் செயல்படுகிறது.

அசுர குணங்கள் கொண்டு நாம் பேசினால் சுற்றுப்புற சூழ்நிலைகள் இந்த லோகத்தையே இது கவர்ந்து விடுகின்றது. அதற்குள் வாழும் மக்களும் சிறிதளவு நுகர்ந்தபின் உடலுக்குள் அந்த உடலையும் அடக்குகின்றது. அச்சுறுத்தி வாழும் நிலை வருகின்றது.

ஒரு இடத்திலே போக்கிரி இருக்கிறான் என்றால் அவன் கடுமையாகப் பேசப்படும் பொழுது அவன் உடலுக்குள் இருக்கும் நல்ல குணத்தை அடக்குகின்றான்.

நல்ல உணர்வின் தன்மை அடங்கிச் சொல்லாக வெளிப்படும் பொழுது கேட்போர் உடலுக்குள்ளும் இந்த உணர்வுகளே உள் புகுந்து அவர்களை அச்சுறுத்தும்படிச் செய்கின்றது.

அதே சமயத்தில் சூரியனால் கவரும் சூரியனிலிருந்து வெளிப்படும் வெப்ப காந்தத்திலும் மற்றவைகளுடன் இணைந்து... உணர்வின் அலைகளாகப் படரப் படும் பொழுது "அந்தச் சூரியனின் வெப்ப காந்தமும் இவனிடமிருந்து வெளிப்பட்ட உணர்வைக் கலந்து" அதனின் உணர்வாக ஆட்சி செய்யும் நிலையாக அமைந்து விடுகின்றது.

இவனின் ஆக்கிரமிப்புத் தன்மைகள் வரும்போது இவனின்று விளையும் தன்மையே
1.உடலையும்
2.காற்று மண்டலத்தையும்
3.சூரியனுடைய உணர்வுகளையும்
4.இந்த மூன்று மண்டலங்களையும் வீரியத்தன்மை கொண்டு ஆட்சி புரியத் தொடங்கி விடுகின்றது.

இதை நுகர்ந்தோர் அனைவரும் மடியும் நிலையும் அசுர உணர்வுகள் கொண்டவர்களாகவே வந்து விடுகின்றது.

இதையெல்லாம் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காக ஞானிகள் காட்டியுள்ளார்கள்.

ஆனால் நஞ்சினை வென்றிட்ட அகஸ்தியன் துருவனாகி துருவ மகரிஷி ஆகி துருவ நட்சத்திரமான உணர்வுகளை நாம் நுகர்ந்தோம் என்றால் மெய்ப் பொருளைக் காணச் செய்யும் நிலையாக.. இருளைப் போக்கிடும் அருள் ஒளியாக வளர்த்திடும் அரும்பெரும் சக்தியாக இது அமையும்.

1.துருவ நட்சத்திரத்தின் சக்தியை எடுத்த்துத்தான் நம்மை அறியாது வரும்
2.அந்த அசுர உணர்வினை நாம் மாற்றி அமைக்க முடியும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்
1.அரசியல் ரீதியிலும் சரி... பாட நிலைகளில் தத்துவங்களைப் போதித்துக் கொண்டிருப்போரும் சரி...
2.ஞானிகள் காட்டிய அறநெறிகளைக் கடைப்பிடித்து அதன் வழியில் இன்று செயல்படுகிறார்களா...! என்றால் இல்லை.

யாரையும் தவறாகச் சொல்கின்றேன் என்று எண்ண வேண்டாம். “நான் அல்ல இதைச் சொல்வது...!” குருநாதர் காட்டிய அருள் வழியில் தான் இதை உணர்த்துகின்றேன்.

காரணம்... இன்றைய உலக மக்கள் நல்லதை ஏங்கித் தவிக்கும் போது அந்த நல்ல உணர்வின் செயல்கள் எவ்வாறு மறைந்து கொண்டிருக்கின்றது...? என்பதைப் பார்க்கலாம்.

மதங்களில் தவறில்லை...! மதத்தின் தன்மை வகுத்து நல்ல ஒழுக்கங்களை ஞானிகள் கொடுத்திருந்தாலும் பிற்காலங்களில் தவறின் நிலைகளுக்கு வருகின்றது.

அகஸ்தியன் வழியில் வியாசகர் அண்டத்தின் தன்மையைக் கண்டறிந்து அதை உணர்த்தினாலும் அவருக்குப் பின் வந்தவர்கள்...
1.ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவாகப் பிரித்து முழுமையின் தன்மையை அறிய முடியாது
2.காலத்தால்... அரசு... அரசியல் என்ற நிலையில் இது மறைந்து விட்டது.
3.தன் நாட்டைக் காக்க தன் மதத்தைக் காக்கப் போர் முறைகள் உருவாக்கப்பட்டதால் உண்மைகள் மறைந்து விட்டது.

அன்று “மந்திரவாதிகளால்” மக்களை அடிமைப்படுத்தும் நிலைகள் இருந்தது. மனிதன் மடிந்த பின் அவன் உணர்வைக் கவர்ந்து அதனின் உணர்வின் தன்மை கொண்டு ஏவல் பில்லி சூனியம் என்று அன்றைய காலங்களில் அரசர்கள் செய்தார்கள்.

இஸ்ரேல் நாட்டில் அன்று போர்களுக்குச் செல்ல வேண்டும் என்றால் குறி வைத்து அம்பை எய்து “ஜோதிடம் பார்த்துத் தான்” அதனைச் செயல்படுத்துவார்கள். அம்பு எய்த நிலைகள் கொண்டு அரசனின் வலுவின் நிலை அறிந்து தான் செயல்படுவார்கள்.

நமது நாட்டிலும் அரசனாக இருந்த கட்டபொம்மனும் மந்திர ஒலியால் “ஜக்கம்மா” என்ற நிலையில் குலதெய்வமாக வளர்க்கப்பட்டு... அதனை ஈர்க்கப்பட்ட கருவின் தன்மை கொண்டு எதிரிகளைக் கண்டுணர்ந்து... எதிரிகளிடமிருந்து தப்பிக் கொள்ளும் உணர்வின் தன்மை கொண்டு செயல்பட்டான்.

மற்ற நாடுகளிலும் இதே போன்று மந்திர ஒலிகளால் தனக்குள் கவரப்பட்டு தன்னையும் தன் நாட்டையும் காத்திடும் நிலையாக மனிதர்களுக்குள் மதங்களை உருவாக்கினார்கள்.

1.மதத்தால் சொன்ன நிலைகளை ஏற்படுத்திய பின் அதையே மந்திரம் ஆக்கி
2.அந்த மந்திரத்தின் நிலைகள் கொண்டு மனிதன் இறந்து விட்டால் அதைக் கவர்ந்து சக்தி வாய்ந்ததாக மாற்றி
3.தன் நாட்டினுடைய நிலைகளுக்கு மதங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

எந்த மதமாக இருந்தாலும் ஞானிகள் காட்டிய நிலைகள் மனிதர்களுக்குள் படர்ந்த பின்... பதிந்த நிலைகள் எவ்வாறு இயக்குகிறது...? என்ற நிலையை மந்திர ஒலிகளாக மாற்றித் தான் செயல்படுத்தி வந்தார்கள்.

அந்த மகான்கள் காட்டிய நிலைகளை யாரும் இப்போது கடைப்பிடிக்கவில்லை. எந்த மதத்தின் நிலைகள் கொண்டு பிரிவுகள் பிரிந்ததோ அந்த ஞானிகள் சொன்ன உண்மை நிலைகள் மறைக்கப்பட்டது.

நான் பெரிது... அவர்கள் செய்வது தவறு... இவர்கள் சொல்வது பொய்... என்று மதத்திற்குள் இனங்களாகப் பிரிக்கப்பட்டு அதனின் நிலைகள் கொண்டு
1.உலகெங்கிலும் மகான்கள் கொடுத்த நிலைகள் மக்களுக்குக் கிடைக்க முடியாதபடி
2.இன்று உண்மைகளைத் தேடிச் சென்றாலும் பெற முடியாது நிலைகளாக மடிந்து கொண்டுள்ளது “விஞ்ஞான அறிவு கொண்டு...”



நான் பெரிது.. அவர்கள் செய்வது தவறு... இவர்கள் சொல்வது பொய்... என்று மதத்திற்குள் இனங்களாகப் பிரிக்கப்பட்டு உலகெங்கிலும் ஞானிகள் கொடுத்தது மக்களுக்குக் கிடைக்க முடியாதபடி இன்று உண்மைகளைத் தேடிச் சென்றாலும் பெற முடியாதபடி மடிந்து கொண்டுள்ளது "விஞ்ஞான அறிவு கொண்டு..."



∴போன் எல்லோருடைய கைகளிலும்... எப்போதும்... நீங்காது இடம் பிடித்திருப்பதன் காரணம் என்ன...?

கம்ப்யூட்டரை எலக்ட்ரிக் இயக்குகின்றது.

1.அதில் உள்ள நாடாக்களில் உள்ள காந்தப் புலனறிவில் கெமிக்கல் கலந்த உணர்வினைப் பதிவாக்குகின்றான்.

2.எலக்ட்ரிக்கல் இதனுடைய தட்டெழுத்தின் தன்மை வரப்படும் பொழுது எலக்ட்ரானிக் ஆக மாற்றுகின்றது.

3.அதனுடைய அழுத்தம் எதுவோ அதனின் நிலையை இயக்குகின்றது.

இதை உருவாக்கியவன் நினைக்கலாம் இதிலே பதிவு செய்து கொண்ட நிலைகளால் தான் அது இயங்குகிறது என்று. அது மட்டுமல்ல...!

மனித உயிரின் தன்மை எலெக்ட்ரிக். ஒரு உணர்வின் தன்மை நுகரப்படும் பொழுது எலக்ட்ரானிக்.
1.அதற்குத் தக்க தான் கம்ப்யூட்டரில் வேலை செய்யும் இவருடைய கைகளும் இயங்குகின்றது.
2.இந்த உணர்வின் காந்தப் புலன் இணைகிறது.
3.இவன் நினைவின் ஆற்றலுக்குள் ஜீவணுக்களாக அங்கே படங்களாகக் காட்சி தருகின்றது.

இவனுடன் இணைந்த நிலை தான் அங்கே வருகிறது.

நாம் நினைக்கின்றோம் அது இயந்திரம் என்று. இவனை அறியாது இயக்கக்கூடிய நிலைகளை மனிதனின் எண்ண உணர்வுகள் இங்கே பதியப்படும் பொழுது இவனுடைய உணர்வின் நினைவலைகளும் அதிலே வைத்திருக்கும் நாடாவிலும் இது பதிவாகின்றது... ஆனால் மனிதனின் மூளை என்பான் கம்ப்யூட்டரை.

தட்டெழுத்தின் மூலமாக ரிக்கார்டை இயக்கப்பட்டு காந்தப்புலனறிவுகள் இயக்கப்படும் பொழுது மனிதனைப் போன்று செயல்படும்.
1.மனிதன் சொல்வது போல் சொல்லும்... வருவோரைப் பற்றிக் கேட்டுப் பதிலும் கொடுக்கும்.
2.கம்ப்யூட்டர் மூலமாக இன்று எவ்வளவோ நுண்ணிய நிலைகளை (CHATGPT.. GEMINI... SIRI) இவ்வாறு தான் செயல்படுத்துகின்றார்கள்.

ஆனால் மனிதன் நோய்வாய்ப்பட்டோ அல்லது வெறித்தனமாகவோ உணர்வுகள் மாற்றப்பட்டு வீட்டில் சண்டையோ சங்கடமோ வெறுப்புடன் வந்து செயல்பட்டால்... இந்த உணர்வின் தன்மை அழுத்தத்தின் தன்மை இயக்கும்.

அதனின் இயக்கம் நாடாக்களில் பதிவு செய்து மற்றொருவர் இயக்கப்பட்டு படங்களாகப் பதிவாக்கப்பட்டால் இதனுடைய நிலைகள் இவன் உடலுக்குள் இவருடைய உணர்வுகளும் மாறும். கம்ப்யூட்டர் இப்படித்தான் வேலை செய்கிறது.

அதனால் தான்
1.கம்ப்யூட்டரில் வேலை செய்பவர்கள் ஒரு சிலர் தன் நிலையையே

இழந்திருப்பார்கள்.
2.இன்னொருவர் கம்ப்யூட்டரில் இயக்கத்தின் தன்மை கொண்டு சரியாக வேலை செய்திருந்தாலும்
3.வீட்டிலே வெறுப்பு குடும்பத்தில் வேதனை போன்ற உணர்வுகளை எடுத்தால் அது கலந்துவிடும்.
4.அதை இயக்கப்படும் பொழுது... இவன் (அடுத்தவன்) பார்த்தான் என்றால் இவனும் பிரமை பிடித்த மாதிரி ஆகிவிடுவான்.
5.இது எல்லாம் கம்ப்யூட்டரைப் பயன்படுத்துவதால் வரக்கூடிய விளைவுகள்.
6.(சிறு குழந்தைகள் முதல் கொண்டு பெரியவர்கள் வரை இதனால் தான் அதிலிருந்து வெளி வர முடிவதில்லை).

ஆகவே... காந்தப் புலனறிவு எதனுடன் இயக்குகின்றதோ அதனின் இயக்கமாக மாறுகின்றது.

கம்ப்யூட்டர் திருடர்களும் இன்று நிறையவே வருகிறார்கள். பேங்கில் இருக்கும் கணக்கை மாற்றி கண்டுபிடிக்காதபடி உணர்வுகளைக் கொண்டு வந்து திருட்டுத்தனத்தைப் பாய்ச்சுகிறார்கள்.

இவன் எந்தக் கணக்கைப் போட்டாலும் அது காட்டாது.
1.அதற்காக அமெரிக்காவில் கண்டுபிடித்து என்ன செய்கின்றார்கள்...?
2.எவன் திருடுகிறானோ அவனுக்கே உத்தியோகம் கொடுக்கின்றார்கள் கம்ப்யூட்டர் திருடர்கள் (HACKERS).

பல கோடிக்கணக்கான பணங்களை பரிவர்த்தனை செய்யக்கூடிய நிலையில் இவ்வாறு ஏமாற்றி வேலைகளைச் செய்கின்றார்கள். பணம் காணாமல் போகிறது... ஆனால் யார்...? என்று தெரிவதில்லை.

விஞ்ஞான அறிவால் வந்திருந்தாலும் மனித உணர்வுகள் கலந்து தான் அது இயக்குகின்றது.

1.மனித உணர்வில் இருந்து பல கோடி உணர்வுகள் எடுக்கப்பட்ட பின் இந்த உணர்வலைகள் மாறுகின்றது.
2.அதை நுகர்கிறான்... அதற்குள் கலக்கின்றான்.
3.அடுத்தடுத்து... எதனைப் புதிதாக உருவாக்குகின்றானோ அந்த செல்களில் இந்த உணர்வுகள் இழுக்கப்படுகின்றது.

4.பதிவாக்கி மீண்டும் நினைவாக்கப்படும் பொழுது மனிதனால் இயக்கப்படுகின்றது.

மனிதன் இன்று எதை இப்படி உருவாக்கினாலும் மனிதனுக்குள் எடுத்துக் கொண்ட உணர்வுகளே அங்கே இயக்குகின்றது. இதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

சாதாரண ஆண்டன்னாவை வைத்து அருகிலே ஒலி/ஒளிபரப்பப்படும் அலைளை டிவி ரேடியோவில் படமாக ஒலிகளாகக் காணுகின்றோம். அதே சமயத்தில் வெகு தொலைவில் இருந்து ஒளிபரப்பப்படும் அலைகளைக் கவர்வதற்குச் சக்தி வாய்ந்த ஆண்டன்னாக்களை வைத்துக் கவர்கின்றோம்

தொலைவில் இருந்து வருவதை எளிதில் காணுவதற்குச் சக்தி வாய்ந்த ஆண்டென்னாக்களைப் பொருத்துகின்றார்கள். அப்பொழுதுதான் அதைக் குவித்து திரைப்படங்களாக டிவிக்களில் நாம் காண முடிகின்றது.

இதைப் போன்று தான் பழகியவர்களின் உணர்வுகளை நாம் உற்றுப் பார்த்துப் பதிவு செய்து கொண்டுள்ளோம்... “அவருடைய ரூபங்களை... அவருடைய சொல்களை... அவருடைய செயல்களை...!”

அதே சமயத்தில் காவியங்களைப் படிக்கப்படும் பொழுது அதிலே சித்தரிக்கும் உணர்வின் தன்மையையும் இதைப் போன்று தான் நாம் பதிவு செய்து கொள்கின்றோம்.

1.இவ்வாறு நாம் எதை எதை எல்லாம் எண்ணிப் பதிவு செய்து கொண்டோமோ...
2.பின் கண்கள் வழி கூடித் தான் நினைவாற்றல் (அந்த அலைகள்) வருகிறது
3.கண்கள் தான் நமக்கு ஆண்டன்னாவாகச் செயல்படுகின்றது.

என்னை ஒருவன் திட்டுகிறான் என்றால் அவன் உருவைப் பார்த்துப் பதிவாக்குகின்றோம். ஆனால் அவனின்று வெளிப்படும் உணர்வுகள் அலைகளாகப் படர்கின்றது.

அவன் சொல்லும் உணர்வைப் பதிவாக்கி விட்டால்... நான் இங்கிருந்து அமெரிக்காவுக்குச் சென்றிருந்தாலும் அயோக்கியன்...! என்னைத் திட்டினான்... பேசினான்... என்று திரும்ப எண்ணினால்

1.அந்த உருவங்கள் நினைவலைகளாகத் தெரிய வருகின்றது.
2.அந்த உணர்வின் தன்மை என் உணர்வுக்குள் விழிகளில் இருக்கும் திரைகளில் பட்டு உணர்த்துகின்றது... கண்கள்.
3.உணர்வின் நினைவாற்றலாக எனக்குள் இயக்கி அந்தக் கோப உணர்ச்சியைத் தூண்டுகின்றது.

விஞ்ஞான அறிவால் டிவி ரேடியோ மூலம் மற்றவைகளைக் காணுவது போன்று... மெய் ஞான அறிவால் பார்க்கப்படும் போது...
1.நுகர்ந்து பதிவு செய்து கொண்டது அது தான் கண்ணன்... கண்கள்
2.நீ எதை நினைக்கின்றாயோ அதுவாகின்றாய்.
3.எதைப் பதிவு செய்கின்றாயோ... அதனையே தான் நீ நினைக்கின்றாய்
4.பதிந்த உணர்வுகளை நினைக்கப்படும் பொழுது அதன் நினைவைக் கூட்டும் பொழுது அதுவாகவே நாம் மாறுகின்றோம் என்று தான்
5.அன்று வியாசகர் இதை எல்லாம் நமக்குத் தெளிவாக எடுத்துரைத்தார்.

சாதாரண மனிதனிடம் பழகும் பொது திட்டியவன் தவறுகளைச் செய்தவன் இடையூறு செய்தவன் என்று எண்ணத்தால் பதிவு செய்து கொண்ட பின் அந்த நினைவுகள் எதிர்கொண்டு வருகின்றது. நோயுற்றவர்களைப் பரிவுடன் பார்க்கப்படும் பொழுது அதுவும் பதிவாகி... நமக்குள் அந்த அலைகளும் வரத் தொடங்குகின்றது.

நம் பிள்ளைகள் மீது பாசம் கொண்டு இருந்தாலும்... சந்தர்ப்பத்தால் அவன் தவறு செய்கின்றான் என்றால் அந்த உணர்வைப் பதிவு செய்து கொள்கின்றோம்.
1.நல்லவனாக இருக்கும் பொழுது ஒரு பதிவு
2.ஆனால் தவறு செய்யும் போது அது ஒரு பதிவு
3.அவன் செய்த தவறினைப் பற்றி நாம் எண்ணப்படும் பொழுது
4.“நல்லவனாக இருந்தான்... இப்போது இப்படி ஆகிவிட்டான் என்ற உணர்வு நம்மை இயக்குகின்றது.

இதை எல்லாம் நாம் எளிதில் காணுகின்றோம்.

இத்தகைய உணர்வலைகள் படரும் பொழுது நம்முடைய நல்ல எண்ணங்கள் தடைப்படுகின்றது.... நம் செயல்களும் மாறாக வரத் தொடங்குகிறது. தீமையின் உணர்வுகளை நுகரும் பொழுது நமக்குள் அது நோயாகி விடுகின்றது நல்ல சிந்தனைகள் அழிந்து விடுகின்றது.

இதைப் போன்று நம் எண்ணத்தால் நமக்குள் பதிவு செய்து கொண்ட நிலை எதுவோ கண்ணின் நினைவுக்கு வரும் பொழுது புவியிலிருந்து கவர்ந்து,,, ஆன்மாவாக மாற்றி... உயிரின் தன்மை நுகர்கிறது.

எப்படி ஆண்டன்னா அந்தந்த அலைகளைக் கவர்ந்து டிவி ரேடியோக்களில் பரப்பப்படும் பொழுது அந்த இயந்திரங்கள் ஒளி ஒலியாகப் பரப்பிப் படமாக ஒலிகளாகக் காட்டுகின்றதோ அதைப் போன்று தான் நம் கண்ணின் நிலைகளும்.

விஞ்ஞான அறிவுப்படி இந்த உண்மைகளை நீங்கள் காணலாம்.

இதை எல்லாம் ஏன் சொல்கிறோம் என்றால் நம்மை அறியாது பதிவாகும் தீமையின் இயக்கங்களிலிருந்து தன்னை மீட்டிக் கொள்ளும் அருள் சக்திகளை எவ்வாறு பெற வேண்டும் என்பதற்குத் தான்...!

சக்தி வாய்ந்த ஆண்டன்னாக்களை வைத்து வெகு தொலைவில் இருப்பதை விஞ்ஞான அறிவு கொண்டு கவர்வது போன்று தான்
1.விண்ணிலிருந்து வரும் மெய் ஞானிகளின் உணர்வுகளை நீங்கள் கவர்வதற்கு உபதேச வாயிலாகப் பதிவாக்குகின்றேன் (ஞானகுரு).
2.பதிவானதை அடிக்கடி நினைவுக்குக் கொண்டு வந்தால் உங்கள் கண்களுக்கு ஆற்றல் மிக்க சக்திகள் கூடி...
3.நினைத்தவுடன் ஞானிகள் அருள் சக்திகளைப் பெறும் தகுதி நீங்கள் பெறுகிறீர்கள்... வரும் தீமைகளை அகற்றிட முடியும்.



சக்தி வாய்ந்த ஆண்டன்னாக்களை வைத்து வெகு தொலைவில் இருப்பதை விஞ்ஞான அறிவு கொண்டு கவர்வது போன்று தான் விண்ணிலிருந்து வரும் மெய் ஞானிகளின் உணர்வை நீங்கள் கவர்வதற்கு உபதேசம் மூலம் பதிவாக்குகிறேன். பதிவானதை அடிக்கடி நினைவுக்குக் கொண்டு வந்தால் உங்கள் கண்களுக்கு ஆற்றல் மிக்க சக்திகள் கூடி... நினைத்தவுடன் ஞானிகள் சக்திகளைப் பெறும் தகுதி பெற்று... வரும் தீமைகளை நீங்கள் அகற்றிட முடியும்.



மிக மிக நுண்ணிய வேலைகளை எல்லாம் செய்யும் கம்ப்யூட்டரின் செயல்பாடு (INTELLIGENCE) எப்படிப்பட்டது...?

எதிர் நிலையான நட்சத்திரங்களின் மோதலில் மின்னலாகி அது ஒரு மரத்தின் மீது பட்டால் அதற்குள் ஊடுருவித் தன் இனத்தைப் பிரித்துவிட்டு அதைக் கருக்கி விடுகின்றது.

நிலத்திலே பட்டால் பூமியின் நடு மையம் சென்று அடைகின்றது. அதீதமான நிலையில் சென்று எதிர்மறையான உணர்வுகள் பூமியின் நடு மையத்திற்குள் ஏற்பட்டால் எந்தப் பகுதியில் இது நடக்கின்றதோ கொதிகலனாகி பாறைகள் இளகுகின்றது.

மேல்நிலை இளகி ஆவியாக மாறும் பொழுது பூமி வெடிக்கின்றது. மேலே உள்ள பாறைகள் கீழே செல்கின்றது. நிலநடுக்கம் என்று அடிப்பாகமாகப் போய் உள்ளே சென்று அடக்கி விடுகின்றது.

ஆனால் அதே சமயம்
1.இந்த மின் அணுக்களின் கதிர்கள் (மின்னல்கள்) கடலிலே தாக்கப்பட்டால் மணலாக மாறுகின்றது.
2.ஹைட்ரஜன் என்ற உப்பின் சத்து இந்த மின்னலின் வீரியத்தைத் தணிக்கின்றது.

கடல்களில் பாய்வது மணலாக மாறி அந்த மின்னணுக்களின் துகள்கள் வரப்படும் பொழுது உருவாகும் இத்தகைய மணல் சக்தி வாய்ந்ததாக மாறுகின்றது.

1.ஒவ்வொரு மண்ணிற்கும் எந்த நட்சத்திரத்தின் சக்திகள் கலவையாகி எதிர்நிலையாகிப் பதிவாகின்றதோ இப்படி உருவாகின்றது.
2.இதைத் தான் யுரேனியம் என்று பிரித்து எடுக்கிறார்கள்.

விஞ்ஞானிகள் அந்த மணலை எடுத்துப் பிரித்தெடுத்து அணுவைப் பிளக்கின்றார்கள். அணுவைப் பிளந்து அந்த ஆற்றலைச் சேமிக்கின்றார்கள்.

இதில் சிதைந்த உணர்வின் தன்மைகளைத் தான்
1.கம்ப்யூட்டரில் இந்த உணர்வுகளைப் பாய்ச்சி ஒலி அதிர்வுகளைக் கொண்டு
2.பல செயல்களுக்கு அந்த நுண்ணிய கதிரியக்கப் பொறிகளைச் செயலாக்கும் போது கம்ப்யூட்டர் என்று வருகின்றது.

அவர்வர்கள் கண்டுணர்ந்த உணர்வின் தன்மை இயற்கை நிலையில் எப்படி வருகிறது...? இப்படி மின் அணுவின் கதிரியக்க நிலைகள் ஒரு காந்தப் புலனறிவால் கவரப்பட்டு... காந்தத்தைக் கவரும் உணர்வின் தன்மை பதிவு செய்து உணர்வின் அறிவான பின்...
1.எதிரொலிகளின் தன்மை மின்னணுவைப் போன்று உணர்வின் தன்மை தோன்றும்.
2.இந்த உணர்வுக்கொப்ப எதுவாகின்றதோ உருவத்தையும் காட்ட முடியும்..

ஒரு மனிதன் 100 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்தான் என்றால் அதனுடைய வம்ச வழி வந்திருந்தால் அவரின் ரூபங்கள் எப்படி இருக்கிறது...? என்று இந்த கம்ப்யூட்டர் மூலம் காணலாம்.

அதைப் பதிவாக்கிக் கம்ப்யூட்டரில் எடுத்துக் கொண்டால் அந்த ஒலியின் அதிர்வுகளை எடுத்துக் கொள்கின்றது. ஆயிரம் மடங்கு அதைக் கூட்டுகின்றான்.

மீண்டும் அந்த உணர்வின் எதிரொலிகள் வரப்படும் பொழுது
1.அவர்கள் வாழ்ந்த உணர்வுகள் இங்கே பதிந்திருப்பதை அலைகள் கவிழ்ந்திருப்பதைக் கவர்ந்து
2.அந்த மனிதனின் ரூபத்தைக் கொடுக்கின்றது கம்ப்யூட்டர்... விஞ்ஞானி அதைக் காட்டுகின்றான்.

இதே போலத் தான் அன்றைய மெய் ஞானிகளை நாம் காண முடியும்.

1.அவனில் விளைந்த உணர்வை உங்களுக்குள் பதிவாக்கப்படும் பொழுது
2.இந்த உணர்வினைத் தொடர்ந்து எடுத்தால் அவன் கற்றறிந்த உணர்வின் தன்மை உங்களுக்குள் வந்து
3.அவன் ஒளியான உணர்வின் தன்மை நீங்களும் ஒளியாக முடியும்.

ஒரு சிலர்... விஞ்ஞான அறிவு எங்கேயோ சென்று கொண்டிருக்கின்றது... சாமி எங்கோ ஒரு மூலையில் இருக்கின்றார் என்று எண்ணுவார்கள்.

விஞ்ஞான அறிவு எப்படி இருக்கின்றது...? மெய் ஞான அறிவு எப்படி இருக்கின்றது...? என்று குருநாதர் அந்த இயற்கையின் நிலைகளை அதனின் இயக்கம் எப்படி...? என்று காட்டியதைக் கற்றுணர்ந்த பின்பு தான் உங்களுக்கு உபதேசிக்கின்றேன்.

காலம் வரும் பொழுது எல்லாம் அந்த உணர்வுபட்டால்
1.காலத்தின் மாற்றத்திற்கு ஒப்ப அதை நுகர்ந்து வரும் பொழுது...
2.அந்தந்தக் காலத்தின் உணர்ச்சிகளைக் கவர்ந்து உங்களுக்குள் பதிவு செய்கிறேன்.

இதற்கு முன் சொன்னதெல்லாம் வேறு விதமாக இருக்கும்.
1.ஆனால் அதனின் வளர்ச்சி உங்களுக்குள் வரப்படும் பொழுது இயற்கையின் தன்மையை
2.உங்களை நீங்கள் அறியும் உணர்வைப் பெற வேண்டும் என்பதற்குத்தான் தெரியப்படுத்துகின்றேன்,

எத்தனை காலம் நாம் இந்த உடலில் வாழப் போகிறோம்...? என்றைக்கும் நிலையாக இருப்பது உயிர். உயிருடன் ஒன்றிய உணர்வை ஒளியாக்கப்பட வேண்டும். உடலுக்குப் பின் பிறவி இல்லை என்ற நிலை அடைய வேண்டும்.

பிறவி இல்லா நிலை அடைந்த அருள் ஞானிகள் உணர்வை உங்களுக்குள் சேர்ப்பிப்பது தான் எமது உபதேசம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

விவேகானந்தர் வக்கீலுக்குப் படித்திருந்தாலும் நமது ஞானிகள் உணர்த்திய தத்துவங்களை எடுத்துரைத்து
1.எந்த மனிதனுக்கு நீ பூரண சேவை செய்கின்றாயோ அதுவே உனக்குள் கடவுளாக நின்று அதுவே உனக்கு நன்மை செய்கின்றது.
2.உன் ரூபத்தில் அவர்களுக்குள் கடவுளாக நின்று அது செயலாக்குகின்றது.
3.நீ கடவுளை எங்கே தேடுகின்றாய்...? உன்னுள்ளே கடவுள் உண்டு...! என்று உணர்த்தினார்.

ஆனால் ஆரம்பத்தில் கடவுளைத் தேடி விவேகானந்தர் அலையும் நிலையில் இராமகிருஷ்ண பரமஹம்சரைக் கண்டு கடவுள் எங்கே இருக்கின்றார்...? நான் பார்க்க வேண்டும்...! என்று கேட்கின்றார்.

ஆனால் அந்தச் சமயத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சர் முள் படுக்கையின் மீது படுத்திருக்கின்றார். விவேகானந்தர் அதை உற்றுப் பார்த்து "இங்கே முள் அல்லவா இருக்கின்றது... அதிலே படுத்திருக்கின்றீர்களே...!" என்று கேட்கிறார்.

1.நீ முள் என்று பார்க்கின்றாய்... அதனால் உனக்கு வேதனை (வேதனையின் உணர்வை உனக்குள் நின்று உனர்த்துவது கடவுள்) தெரிகின்றது.
2.நான் முள் என்று நினைக்கவில்லை... எனக்கு வேதனை இல்லை...! என்று சுருக்கமாகச் சொல்லிப் பாடத்தை முடிக்கின்றார்.

விவேகானந்தர் நம் நாட்டின் தத்துவங்களை... பக்தியின் நல்ல ஒழுக்கங்களை அமெரிக்காவிற்குச் சென்ற போது சுட்டிக் காட்டினார். உலக நிலைகளில் இந்தியாவின் நிலைகளைப் பரப்பவும் செய்தார்.

மனிதனுக்கு எவ்வாறு சேவை செய்ய வேண்டும்...? ஏனென்றால் அதுவே கடவுள் ஆகிறது.
1.நீ எண்ணும் எண்ணமே உனக்குள் கடவுள் ஆகிறது
2.அதனின் உணர்வின் செயலாக கடவுள் செய்கின்றது
3.கடவுளுக்குச் செய்யும் சேவையாக இது ஆகிறது என்ற இந்தத் தத்துவத்தை அவர் கொடுத்தார்.

இதை எல்லாம் குருநாதர் என்னிடம் (ஞானகுரு) சொன்னார். நான் புத்தகங்களைப் படிக்கவில்லை.

இந்தியா முழுவதும் யாத்திரை செய்த விவேகானந்தர் இமயமலைச் சாரலில் செல்லும் சமயம்... மந்திரவாதியிடம் சிக்கிக்கொண்ட ஒரு சீடன் "இங்கே மகான் வருகின்றார்..." என்று தேடி ஓடி வந்து விவேகானந்தர் காலிலே பாத நமஸ்காரம் செய்கின்றான். உங்களுடைய அருள் தேவை என்று கேட்கின்றார்... அவரின் சொற்பொழிவுகளையும் கேட்கின்றான்.

ஆனால் சீடனின் குருவான அந்த மந்திரவாதியியோ "நான் கடவுளையே கைவல்யம் செய்துள்ளேன் என்று சொல்லும் சக்தி பெற்றவன். அவனிடம் சிக்கியவன் தான் விவேகானந்தரின் சொற்பொழிவுகளைக் கேட்கின்றான் அவரிடம் ஆசீர்வாதம் கேட்க வருகின்றான்.

இதற்கு முன்னாடி எத்தனையோ நடந்த நிகழ்ச்சிகள் வேறு...! கடைசியிலே நடந்த நிகழ்ச்சிகளை மட்டும் நீங்கள் தெரிந்து கொண்டால் போதும்.
1.இதையெல்லாம் புத்தகத்தைப் படித்துவிட்டு நான் சொல்கிறேன் என்று யாரும் எண்ண வேண்டாம்
2.புத்தகத்தைப் படிக்கக்கூடிய சரியான நிலை எனக்கில்லை.
3.ஒரு பத்திரிகையைப் படிக்க வேண்டும் என்றாலும் நண்பர்கள் தேவை.
4.என்னுடைய படிப்பறிவு அவ்வளவுதான்...!

தான் விவேகானந்தரின் ஆசி பெற்றதைத் தன்னுடைய மந்திரவாதியிடம் அந்தச் சீடன் சொல்கின்றான்

ஆனால் அந்த மந்திரவாதியோ... நாளை அவன் பேசப்படும் பொழுது இரத்த இரத்தமாகக் கக்கப் போகின்றான்... அவருடைய பாதத்தை நீ நமஸ்காரம் செய்து வருகிறாயே...! என்று அவனை அச்சுறுத்துகின்றான்.

மந்திரவாதி தனக்குள் இருக்கும் ஆவியின் நிலைகள் கொண்டு ஏவல் செய்து விவேகானந்தர் மறுநாள் பேசப்படும் பொழுது... இரத்த இரத்தமாகக் கக்க வைக்கின்றான்.

அதைக் கடந்து சென்ற பின் விவேகானந்தர் குருவை எண்ணிப் பார்க்கின்றார். இராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்னது...
1.நீ எதை எண்ணுகின்றாயோ அதுவே உனக்குள் கடவுளாக இருக்கின்றது.

2.அந்த உணர்வின் செயலாக்கமே உன்னுடைய செயலாக்கமாக வருகின்றது
3.முள் படுக்கையில் நான் படுத்திருக்கும் பொழுது “நீ கடவுளைக் காண வேண்டும் என்று வந்தால்
4.அப்போது நீ எண்ணிய உணர்வின் தன்மையை உன் உயிர் தான் அதை (அந்த வேதனையை) எவ்வாறு இயக்குகின்றது.
5.அந்த உணர்வின் செயலாக செயல் எவ்வாறு இருக்கின்றது என்று காட்டுகின்றார்

அதைக் கண்டு கொண்ட பின்பு தான் “நான் கடவுளைக் கண்டு கொண்டேன் எனக்குள்ளேயே...!” என்று அவர் உணர்ந்து ஒவ்வொரு உயிரையும் கடவுளாக மதித்து அந்த உணர்வின் எண்ணங்களை எவ்வாறு இயக்க வேண்டும் என்று கால்நடையாக இந்தியா முழுவதும் பறைசாற்றினார்... பாத யாத்திரையாகச் சென்று.

ஆனால் வட இந்தியாவில் மந்திர ஒலிகள் அதிகம்... தென்னாட்டில் இங்கே சுழன்று வந்தார். இங்கிருக்கும் அறிவுகளைக் கண்டார்... மக்களுக்குத் தெளிவான நிலைகளை வழி காட்டினார்.

ஆனால் யாரும் அதை ஏற்றுக் கொள்ளதில்லை. புத்தகங்களைப் படிக்கின்றோம்... அறிவின் ஞானத்தைப் போதிக்கின்றோம். தன் நிலையில் அவர் போதிப்பதைக் கடைப்பிடிப்பதில்லை.

காரணம்... நாட்டில் நடக்கும் நடப்புகளில் நல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றாலும் அரசியல் பேதம் மத பேதம் இன பேதம் மொழி பேதம் என்று சாடும் பொழுது... இதை அதிகமாகச் சுவாசித்த பின்... தன் எண்ணங்களில் அதைக் கவரப்படும் போது உண்மையின் நிலையைத் தன்னுள் செயல்படும் நிலைகளை இழந்தே நிற்கின்றோம். அதை மாற்றும் நிலைகள் அற்றே போய்விட்டது.

குருவை எண்ணுகின்றார்...
1.எண்ணியதுதான் கடவுள் என்று நீ உணர்த்தினாய்... அதன்படி உயர்ந்த நிலைகளை எண்ணினேன்
2.ஆனால் இந்த ஏவல் என்ற நிலைகள் “என்னைச் சாடுகின்றதே...” என்று விவேகானந்தர் வேதனைப்படுகின்றார்.

நான் யாருக்கும் தீங்கு செய்யவில்லையே... உயர்ந்த எண்ணத்தைத் தானே எண்ணினேன்...! என்று சாதாரண மனிதன் பலருக்கு உபகாரம் செய்துவிட்டு அதன் நிலைகள் என்னைக் கடவுள் சோதிக்கின்றான் சோதிக்கின்றான் சோதிக்கின்றான் என்று வேதனையைச் சுவாசிப்பது போன்று இவரும் அவ்வாறே சுவாசிக்கின்றார்... நான் எந்தப் பிழையும் செய்யவில்லையே என்று...!

குரு அருளால் மந்திரவாதி ஏவல் பண்ணுகின்றான் என்று உணர்ந்து கொள்கின்றார். அதைப் புரியும் ஆற்றல் வந்துவிட்டது.

எனது உயிர் எனக்குள் இருந்து படைக்கின்றது என்று நீ சொன்னாயே. நான் நன்மைகளைத் தானே செய்கின்றேன். ஆனாலும் அவனுடைய தீமையின் நிலைகள் எனக்குள் வருகின்றதே... ஏவல் செய்கின்றானே...! என்று அவர் சிந்திக்கின்றார்.

மனிதனுக்குள் எடுத்துக் கொண்ட இந்த மந்திரத்தின் ஒலிகள் அவன் ஏவல் செய்யும் பொழுது "எந்தத் தீமையும் செய்யும் என்று" இதைப் பிற்காலங்களில் உணர்த்துகின்றார்.. தீமைகளிலிருந்து மீள வேண்டும் என்று.

இதையெல்லாம் என் குருநாதர் சொன்னதை உங்களுக்கு அப்படியே சொல்கின்றேன்

பரமஹம்சர் காட்டிய நிலையில் கடவுளைக் காண என்று உண்மை நிலையில் தன்னை நாடி வந்தவருக்கு அந்த உணர்வின் தன்மை ஊட்டி தனக்குச் சரியான சீடனாக விவேகானந்தரை எடுத்து... இந்த உணர்வின் வேட்கைகளை உலகிற்குப் பரப்பச் செய்தார்.

ஆனாலும் அந்தத் தத்துவ ஞானி இத்தனை இன்னல்கள் பட்டார்.

அங்கே நகர்ந்து செல்லப்படும் பொழுதுதான் அடுத்தடுத்து அடுத்தடுத்து இந்தத் தீமைகள் வரப்படும் பொழுது "வெறுத்திடும் நிலைகள்" அவருக்குள் வருகின்றது.

1.இந்த உலகின் நிலைகள் நடப்பதை நான் என்னவென்று சொல்வேன்...! என்று தன் மூச்சின் உணர்வின் தன்மையை ஏங்கி...
2.தவறு செய்வோர் நிலைகளை இவருக்குள் அடக்கி அடக்கி அதனால் "தனக்குள் கொதிக்கும் நிலையே" அவருக்குள் வருகின்றது.

நான் தவறு செய்யாது இருந்து... மந்திரவாதியின் சீடன் இங்கே வந்து ஆசீர்வாதம் வாங்கிச் சென்ற பின் நடந்த நிகழ்ச்சியால்... இவருக்குள் கொதிப்புகள் எழுந்து

1.தீமைகளைச் செய்கின்றானே...! இந்தப் பாழடைந்த உலகத்தை நான் என்னவென்று சொல்வேன்...?

2.இனி நான் எதை எதிர்த்துப் போராடுவது...? என்ற நிலையில்

3.குறுகிய நேரத்தில் "இந்த உடலை விட்டு அகன்றால் போதும்..." என்ற அந்த உணர்வின் நிலையே அவருக்குள் வருகின்றது.

நன்மைக்காகச் செயல்படுத்திய நிலையில் கடைசியில் இந்த உடலை விட்டுப் போனால் போதும்... "சேவை..." என்ற நிலை இருப்பினும் எல்லோரும் இந்த உண்மைகளை உணரட்டும்...

1.அருள் உணர்வுகள் என் உடலில் நிலைத்திருக்கட்டும்...

2.தீமைகளில் நான் சிக்காது இந்த உடலை விட்டு இந்த ஆன்மா பிரிந்தால் போதும்...! என்று கதறுகின்றார்.

இந்த உணர்வுகள் வேட்கை அதிகமாகும் போது தான் தன்னை அணுகி உள்ள சிஷ்யர்களிடம் "எனக்குக் கொதிக்கின்றது... வீசுங்கள்..." என்று தன் ஆன்மாவை அங்கே பிரிக்கின்றார்.

இவரைக் குண்டலினி யோகம் கற்றவர் என்று சொல்கின்றார்கள். எந்தக் குண்டலினியை அவர் செய்தார்...?

அவர் பள்ளியிலே படிக்கும் காலத்தில் குண்டலினி யோகம் இருந்தால் அதைப் பெற வேண்டும் என்று படிக்கும் பொழுது தான் யோகத்தை மரத்தடியில் செய்து கற்றுக் கொண்டார்.

ஆனால் பிற்காலத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்திக்கப்படும் பொழுது


1.யோகம் என்பது அது அல்ல...

2.நீ எதை நினைக்கின்றாயோ... இந்த உணர்வு தான் உனக்குள் யோகமாக அமைந்து

3.உணர்வின் செயலாக்கங்களாகச் செயலாற்றுகின்றது என்று பரமஹம்சர் சொன்னார்.

உணர்வினை நுகரும் நிலைகள் கொண்டு “உயிரின் இயக்கத்தால் உணர்வின் நிலை உனக்குள் எவ்வாறு வருகின்றது...?” என்ற இந்த யோகத்தைத் தான் இராமகிருஷ்ண பரமஹம்சர் கற்பித்தார்.





“நம் எண்ணத்தின் முகப்பில்” துருவ நட்சத்திரத்தின் சக்தியை எப்போதுமே வைத்திருக்க வேண்டும்

ஒவ்வொரு நேரத்திலும் யாம் உங்களுக்கு உபதேசிக்கும் உணர்வுகள் கொண்டு தீமைகள் வந்தால் தீமைகளைக் கேட்டறிந்தாலும் அடுத்த கணம் அந்தத் தீமை வளராது மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்று எண்ணி விட்டு

எல்லோருக்கும் நீங்கள் ஞானத்தைப் போதிக்க முடியும். அவர்கள் தீமைகள் உங்களுக்குள் புகாது தடுக்க முடியும்.

1.ஒரு கம்ப்யூட்டரில் பதிவாக்கி ஆணையிட்டு அதைச் செயல்படுத்துவது போல்
2.வீட்டை விட்டு நீங்கள் எங்கே சென்றாலும் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி நாங்கள் பெற வேண்டும் என்று
3.இதை எண்ணி எடுத்துக் கொண்டால் "இது நமக்கு முன்னாடி வந்து..." வலிமை பெறுகின்றது.

எதிரிலே ஒரு பஸ்ஸோ மற்ற வாகனங்களோ வந்தாலும் இந்தத் துருவ நட்சத்திரத்தின் உணவுகள் அதிலிருந்து உங்களை ஒதுக்கிச் செல்லச் செய்யும்.

ஆனால் காலையில் எழுந்து நாம் தினசரி அலுவல்களைச் செயல்படுத்தும் போது பையன் இப்படி எல்லாம் செய்தான்... பக்கத்தில் உள்ளவர்கள் தொல்லை செய்கின்றார்கள்... வேலை பார்க்கும் இடத்தில் தொல்லையாக இருக்கிறது என்று
1.காலையில் எழுந்திருக்கும் பொழுதே இப்படிச் சோர்வாக எண்ணி இந்த உணர்வுகள் முன்னணியில் வந்து விட்டால்
2.நாம் ரோட்டில் நடந்து சென்றால் முன்னாடி சைக்கிள் வருவதும் தெரியாது அல்லது பஸ் வருவதும் தெரியாது.
3.நம்மை அறியாமலே விபத்தாகிறது.

எதன் உணர்வு நம் சிந்தனையைக் குறைக்கச் செய்கிறதோ அந்த உணர்வின் செயலே வாழ்க்கையில் நடந்து விடுகிறது. ஆனால் நாம் தவறு செய்யவில்லை.

சந்தர்ப்பத்தால் நுகர்ந்த உணர்வுகள் அது முன்னணியில் வந்து விடுவதால் இவ்வாறு இயக்கி விடுகின்றது.

அதையெல்லாம் மாற்றி வாழ்க்கையில் வெளியில் செல்லும் போதெல்லாம் துருவ நட்சத்திரத்தின் வலிமையான உணர்வுகளை எடுத்து முன்னாடி செலுத்திக் கொள்ளுங்கள்.
1.தீமை வந்தால் மற்ற இடர்பாடுகள் வந்தால் விலகி செல்லும் உணர்வுகளாக வரும்.
2.சிந்திக்கும் ஆற்றலும் தெளிந்து வாழக்கூடிய உணர்வுகளை ஊட்டிக் கொண்டேயிருக்கும்.

அதையெல்லாம் நீங்கள் பெற வேண்டும் என்பதற்குத் தான் பதிவு செய்து கொண்டே இருக்கின்றேன். எழுத்திலே படித்தாலும் புரியவில்லை என்று சென்று விடுவார்கள்.

ஆனால்
1.எமது உபதேசத்தைக் கூர்ந்து கவனிக்கும் பொழுது உங்களுக்குள் இது பதிவாகின்றது.
2.அப்படிப் பதிவாக்கி விட்டால் நிச்சயம் உங்களால் நல்ல குணங்களைக் காக்க முடியும்.
3.துருவ நட்சத்திரத்தின் பேரருளைப் பெற முடியும்... அதற்கு குரு அருள் உறுதுணையாக இருக்கும்.

என்றும் தெளிந்த நிலையினை நீங்கள் பெற முடியும்... பெறுவீர்கள் நிச்சயம் பெற்று விடுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தான் இந்த அருள் வாக்குகளை உங்களுக்குள் பதிவாக்குகின்றேன்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்
அன்றைய காலங்களில் இஸ்ரேல் நாட்டில் கிழக்கே பார்த்து வணங்கும் நிலை தான் உண்டு... நமது நாட்டிலும் கிழக்கே பார்த்து வணங்கும் நிலைகள் உண்டு.

ஆனாலும் அன்று நபிகள் நாயகம் மேற்கே பிறைச் சந்திரனைப் பார்க்கின்றார். அது தேய்ந்து வளர்வதையும் பார்க்கின்றார்.

அதாவது சந்திரன் தேய்ந்த நிலைகள் கொண்டு அமாவாசைக்குப் பின் கண்ணுற்றுப் பார்க்கப்படும் போது
1.சூரியனின் ஒளிக்கதிர்கள் அதன் மீது படும்பொழுது எப்படி அது வளர்கின்றதோ
2.இதைப் போல மனிதனுடைய எண்ணத்தில் தீமைகள் அகற்றிடும் தன்மை வளர வேண்டும் என்று
3.பிறைச் சந்திரனைக் காட்டி... ஆரம்பத்தில் அது வளர்வது போன்று
4.ஒளி கண்டு இருள் மறைவது போன்று “மனிதன் தனக்குள் எவ்வாறு தெளிந்த நிலைகள் பெற வேண்டும்...?” என்று
5.உபதேசக் கருத்துக்களை அங்கே மதீனாவில் பரப்பினார்.

அதன் வழியில் அக்காலங்களில் கிழக்கே பார்த்து வணங்குவதற்குப் பதில் மேற்கே பார்த்து வணங்கும்படி செய்தார்.

ஆரம்பத்தில் மக்காவில் நடந்த அதர்மங்களையும் தெய்வீகப் போர்வையில் தவறான நிலைகள் பல செய்ததையும்... தடுக்கத் தனக்கென்று ஒரு கூட்டத்தை அமைத்துப் போர் முரசு கொண்டு நபிகள் செயல்படுத்தினார்.

காரணம்... ரோமானியர்கள் (கவர்னரின்) ஆட்சிக்கு கீழ் இருந்தாலும் அங்கே தீமை கொண்ட கொள்ளையர்கள் பெரும் சொத்துகளைச் சேர்த்து... மற்றவர்களை அடக்கி ஆண்டு... ஆங்காங்கு இருக்கும் நிலைகள் கொண்டு போர்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

1.சட்டங்கள் இருப்பினும் மதத்தின் கீழ் கடைப்பிடிப்பதில்லை. அந்த மதங்களின் மீது ஏதும் கை வைப்பதில்லை.
1.அவர்களுக்குக் கப்பம் கட்டுவதும் தன்னை எதிர்க்காத நிலைகள் இருந்தால் போதும் என்ற நிலைகள் இருந்ததனால்
2.இனப்போர்களும் மற்ற போர்களும் வந்தது.

இப்படி... மதத்தின் கீழ் தெய்வீகப் போர்வையில் அங்கே கொள்ளை அடிப்பதும் கொலைகள் செய்வதும் பல தவறுகள் செய்யும் அந்த நிலையில் இருந்து விடுபட வேண்டும் என்று நபிகள் நாயகம் போர் செய்து அந்த மக்காவைக் கைப்பற்றினார்.

அவருக்குள் செயல்பட்ட மகானின் அந்த ஞானத்தின் தொடர் கொண்டு அங்கே மக்காவில் இருக்கும் நிலைகளைச் சீராக்கினார்.

அங்கே 4000 ஆண்டுகளுக்கு முன்...
1.போகரால் உருவாக்கப்பட்ட முருகனும்
2.மனித உணர்வின் நிலைகள்... பல குணங்களின் சிறப்பு கொண்ட விநாயகர் தத்துவமும் “சிலைகளாக” மக்காவில் உண்டு.
3.அதிலே இருக்கும் விநாயகர் சிலையைத் தான் இன்றைய நிலைகள் திருப்பி வைத்து (போகருடைய நிலைகள் கொண்டு) முத்தமிடுகின்றார்கள்.
4.அங்கே யானை மீது லிங்கமும் உண்டு.

இது குருநாதரால் காட்டப்பட்ட நிலைகள். ஏனென்றால் இந்த உலகில் நடக்கும் இரகசிய நிலைகளை குருநாதர் தெளிவாக்கினார்... உலக மக்கள் அனைவரும் தெளிந்திட வேண்டும் என்ற நோக்கத்தில்...!

உணர்வின் எண்ணங்கள் கொண்டு உடல் எப்படி இயங்குகின்றது என்பதையும்... உயிரின் இயக்கங்களையும் உணர்வின் செயலாக்கங்களையும் இப்போது யாம் சொல்வது போன்று தான் அக்காலங்களில் அவர் தெளிவாக எடுத்துரைத்தார்.

அதே சமயத்தில் மனிதனுக்கு மனிதன் எவ்வாறு உதவ வேண்டும்...? என்றும் தீய பழக்கங்களிலிருந்து விடுபட வேண்டும்... குடி போதையோ மற்ற தவறான நிலையில் இருந்து அறவே நீக்கப்பட வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

1.மனிதனை உருவாக்கிய உயிரைக் கடவுளாக மதித்து
2.உடலுக்குள் தீங்கு விளைவிக்காது காத்திட வேண்டும் என்று உணர்த்தினார்.

அப்படி உருவாக்கிய நிலைகள் கொண்டு தான் அங்கே மற்ற பழைய சிற்பங்களையும் சிலைகளையும் நீக்கிவிட்டு “உண்மையின் பொருளை மக்கள் பெற வேண்டும்” என்று செயல்படுத்தினார்.



4000 ஆண்டுகளுக்கு முன்... போகரால் உருவாக்கப்பட்ட முருகனும் மனித உணர்வின் நிலைகள்... பல குணங்களின் சிறப்பு கொண்ட விநாயகர் தத்துவமும் "சிலைகளாக" மக்காவில் உண்டு. அதிலே இருக்கும் விநாயகர் சிலையைத் தான் இன்றைய நிலைகள் திருப்பி வைத்து (போகர் நிலைகள் கொண்டு) முத்தமிடுகின்றார்கள். அங்கே யானை மீது லிங்கமும் உண்டு.

https://eswarayagurudevar.com/